# இறையியல்

# கோலங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழு

பொறுப்பாசிரியர்கள் :

அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல்
அருள்திரு விக்ரர் குரூஸ்
அருள்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ
அருள்திரு ஜெ. நீக்கலாஸ்

பதிப்பாசிரியர் ; ம. வே. அமிர்தக்குமார்
விநியோகம் : தயானந்தன் பற்றிக்
கழகத் தலைவர் : சா. கிருபானந்தன்

அச்சிடலாம் :

"இறையியல் கோலங்கள்" இல் வெளிவரும் கருத்துக்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு எதிரானவை அல்ல என்பதே யன்றி இதுதான் திருச்சபையின் போதனை என்று கூறுவதற் கில்லை.

+ போல் பெரேரா,
கண்டி மறைமாவட்ட ஆயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

(இறையியல் பருவ இதழ்)

வடிவம் : 1

வண்ணம் : 2

வைகாசி 1981

வெளியிடுவோர் :

**ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம்,**
தேசிய குருத்துவக் கல்லூரி,
அம்பிட்டி,
கண்டி.

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுமுன்.... ....

எமது வெளியீட்டின் முதல் இதழைப் படித்த பலரினதும் ஆர்வமும் ஆதரவும், இந்த இரண்டாவது படைப்பை வெளியிட வைத்துள்ளது. இக்கோலங்களும் உங்கள் சிந்தனையில் புதுக்கோலமிடும் என்பது எமது நம்பிபிகை. இது உங்கள் மனங்களில் புதுப்புது வடிவங்களில் இறையுணர்வைத் தூண்டட்டும். காலத்தின் தேவைக்கேற்ப இறையியல் சிந்தனைகள் உங்கள் எண்ணங்களில் மலரட்டும்.

இக்கோலத்தை குருத்துவக் கல்லூரி இறையியல் பேராசிரியர், குருமாணவர்களது ஆக்கங்கள் அலங்கரிக்கின்றன. இன்றைய உலகின் பல நிகழ்ச்சிகளை புதிய நோக்கில் அணுகுவதற்கு வழிசமைத்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து திருச்சபையின் வரலாற்றிலே புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இப் புரட்சியைத் தான் ''திருச்சபையின் வரலாற்றில் பொதுநிலையினரின் எழுச்சி'' என்ற முதல் கட்டுரை எடுத்துரைக்கின்றது

பண்பாட்டு மயமாக்கல் கிறிஸ்தவத்தை தாயகமாக்கும் பணியாகும். ஒவ்வொரு பண்பாட்டுக்கும் சமூக நடைமுறைக்கும் ஏற்ப நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென திருச்சபை வலியுறுத்துகின்றது. இதனைச் சிறப்பாகத் தருகின்றது ''பண்பாட்டில் வழிபாடு''.

இன்றைய சமூகத்தில் ''கருச்சிதைவு'' ஓர் முக்கிய பிரச்சினையாகும். இறையியல் கண்ணோட்டத்தில் கிறிஸ்தவ கோட்பாட்டின் படி, கருச்சிதைவு பற்றிய தெளிவான விளக்கத்தைத் தருகின்றது ''கருச்சிதைவு'' என்ற ஆக்கம்.

ஒப்புரவு அருட்சாதனம் இன்றைய கிறிஸ்தவர்களின் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இக் கேள்விகளின் மத்தியில் சிறுவர்களுக்கான ஒப்புரவு அருட்சாதனம் அர்த்தமுள்ளதா? என்ற புதியதொரு கேள்வியையும் எழுப்புகின்றது. இப்புரியாத புதிருக்கு புது விடை தருகிறது ''சிறுவர்கள் சாவானபாவம் செய்ய முடியுமா?'' என்பது.

கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு ஆதாரமாகும். கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பற்றிய விவிலிய மதிப்பீடாக தொடர்கிறது இறுதி ஆக்கம்.

மறைவளர மொழி வளர்ப்போம் என்ற கழகத்தின் இலட்சிய நோக்கில் தமிழ்க்கிறிஸ்தவ வாசகர் மத்தியில் நாம் செய்யும் அக்கினிப் பரீட்சை இதுவாகும். உங்கள் ஆதரவில் உள்ள அசையாத நம்பிக்கையால் இவ் விரண்டாவது இதழை உங்கள் கரங்களில் தவழவிடுகின்றோம்.

— ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே .........


திருச்சபையின் மறுமலர்ச்சியில் பொதுநிலையினரின் எழுச்சி ... 1

பண்பாட்டில் வழிபடுவோம் ... ... ... 19

கருச்சிதைவு ... ... ...... ... 30

குழந்தைகள் சாவான பாவம் செய்ய முடியுமா? ... .. 38

இயேசுவின் உயிர்ப்பு ... ... ... ... 57

Synopsis ... ... ... ... ... 68


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையின் மறுமலர்ச்சியில் பொதுநிலையினரின் எழுச்சி

அருள்திரு S. J. இம்மானுவேல்

## கொப்பர்னிக்கசின் புரட்சி (Copernican Revolution)

"பூமியே அகிலத்தின் மையம். இப்பூமியைக் கதிரவன் ஒழுங்காகச் சுற்றி வருகின்றான்." இக்கொள்கை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக — கி. பி. 15ஆம் நூற்றாண்டுவரை சகல மனிதராலும் சவாலின்றிய சத்தியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. (Geocentric Theory). ஆனால் நீக்கிலஸ் கப்பர்நீக்கஸ் என்ற விஞ்ஞானி 16ஆம் நூற்றாண்டில் இக்கொள்கைக்கு முற்றுப்புள்ளி போட்டு —கதிரவனே எம் அகிலத்தின் மையமென்றும், பூமி இக்கதிரவனை ஒழுங்காகச் சுற்றி வருகின்ற ஒரு கிரகமென்றும் நிரூபித்து மனிதரைத் திடுக்கிட வைத்தார் (Helio-centric Theory). இதுவே விஞ்ஞான உலகில் கப்பர்னீக்கஸின் புரட்சி என்று அழைக்கப்படுகின்றது.

இப்பேர்ப்பட்ட புரட்சியொன்று இந்த நூற்றாண்டில் 2ஆம் வத்திக்கான் சங்கத்தினூடாகத் திருச்சபையைப் பொறுத்தமட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :

### (அ) உலகம் — திருச்சபை

உலகையும் திருச்சபையையும் நோக்குமிடத்தில், திருச்சபை ஒரு குறைவற்ற நிறைவான மைய ஸ்தாபனமென்றும் உலகம் முழுவதும் இந்நிறைவான திருச்சபையுடனிணைந்து அதைச் சுற்றிச் சுழல்வதிலேயே நிறைவையடையுமென்றும் கருதி வந்தோம். ஆனால் 2ஆம் வத்திக்கான்சங்கம் அதை மாற்றியமைத்து திருச்சபை உலகத்திலேயேயிருந்து உலகத்திற்கு இரட்சணிய சேவை செய்வதற்காக உழைக்கும் அருட்சாதனமாக அமைகின்றதென்று கற்பிக்கின்றது. உலகம் திருச்சபைக்காகவல்ல, திருச்சபையே உலகத்தின் இரட்சணிய நிறைவுக்காக உழைக்கும் சேவைக் கருவியாக மாறிவிட்டது. (L. G. 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) பொதுநிலையினர் — திருப்பணியாளர்

திருச்சபையினுள்ளே பொதுநிலையினருக்கும் திருப்பணியாளருக்கும் இடையில் உள்ள தொடர்பை நோக்குமிடத்தில், திருப்பணியாளரே அருளினாலும் ஆவியினாலும் நிரப்பப்பட்ட மத்திய அஸ்திவாரமென்றும் பொதுநிலையினர் இவ்வதிகார பீடத்தை அமைச்சலுடன் அண்டி, அமைதியாகச் செவிமடுத்து, அவர்களின் கட்டளையே தமது கடமையாகச் செயல்படுத்தும் பெரும் பான்மையினரென்றும் கருதப்பட்டது. சுருங்கக்கூறின் — திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளரே திருச்சபையில் நிறைவானவரென்றும், ஏனையோர் அப்பணியாளரின் பணிவிடைக்காரரென்றும், முக்கியத்திலும் தரத்திலும் குறைந்தவரென்றும் கருதப்பட்டது. ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கம் இக்கொள்கையை மாற்றியமைத்திருக்கின்றது. பொதுநிலையினர் திருப்பணியாளருக்காகவல்ல, திருப்பணியாளரே பொதுநிலையினருக்காகவென்றும், பொதுநிலையினருக்குச் சேவைசெய்யவே திருப்பணியாளர் அருளும் அதிகாரமும் பெற்றிருக்கின்றனரென்றும், சங்கம் கற்பிக்கின்றது (L. G. 18). மேலும் திருப்பணியாளர் செயற்படும் திருச்சபையாகவும் பொதுநிலையினர் மௌன திருச்சபையாகவும் இருப்பது முறையல்ல. பணியாளரின் சேவையால் திடப்படுத்தப்பட்ட இறைமக்கள் முழுவதும், இயங்கும் திருச்சபையாக இருக்கவேண்டுமென்று சங்கம் கற்பிக்கின்றது (L. G. 13c).

மேற்கூறப்பட்ட இரண்டு கருத்துக்களையும், நாம் ஆரம்பத்தில் எடுத்துக்கொண்ட உதாரணத்தின் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். அகிலமனைத்தையும் சூரியனுக்கும், இறைமக்களனைவரையும் இப்பூமிக்கும், திருப்பணியாளர் கூட்டம் அனைத்தையும் சந்திரனுக்கும் ஒப்பிடலாம். விஞ்ஞான ரீதியாக வானவியல் (Astronomy) விளக்கப்படி, சந்திரன் பூமியைச்சுற்றி வலம் வருகின்றதெனவும், சந்திரனும் பூமியும் ஒன்றாகச் சூரியனைச் சுற்றி வருகின்றதெனவும் நாம் அறிந்துள்ளோம். இவ்வாறே திருப்பணியாளர்கூட்டம் இறைமக்களுக்குச் சேவை செய்வதாகவும், மேலும் இவ்விரண்டு கூட்டத்தினரும் சேர்ந்து உலகமனைத்திற்கும் சேவை செய்வதாகவும் நாம் கருதிக்கொள்ளலாம். கிறிஸ்தவ சேவையை விளக்க விவிலியம் தெரிந்துகொண்ட 'டியக்கொனியா' (Diakonia) என்ற கிரேக்கச் சொல், சாதாரண சேவையைக் குறிப்பதாகும். முக்கியமாக, உணவு அருந்தும்போது மேசையைச்சுற்றிச் சேவை செய்பவர்களையே குறிக்கும். அதேபோன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையிலும் சேவையைப் பொறுத்தமட்டில் புதிய புரட்சி ஒன்று ஏற்படவேண்டும். ஆகவே இன்று திருச்சபை இயலில் இருந்தது.

ஆகவேதான் இன்று திருச்சபை இயலில் (Ecclesiology) உலகத்தின் மக்களையும், அவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளையும் மையமாகக்கொண்ட கிறிஸ்தவத்தைப் பற்றிப் பேசுவது (World-centred or Secular Christianity). ஆனால் இவைகளைப்பற்றியல்ல இவ்விடம் எமது கூற்று — திருச்சபையினுள்ளே திருப்பணியாளர், பொதுநிலையினர் என்று அலுவல் காரணமாகப் பிரிக்கப்பட்ட (L. G. 13c) இவர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் தொடர்பு மாற்றமும், விசேடமாகப் பொதுநிலையினரைப்பற்றி மீண்டெடுக்கப்பட்ட புதிய உண்மைகளுமே எமது கவனத்தை ஈர்க்கவேண்டும். ஆகையால்தான் கப்பர்னீக்கஸ் புரட்சியின் உதாரணம் (ஆ) எம்முன்னிருப்பது நலம்.

## பொதுநிலையினர் பொருளை மீண்டெடுக்க...

பொதுநிலையினரின் புதிய பங்கைத் தேடுகையில் முழுத் திருச்சபையும் பணியாளரும் தமது புதிய தன்மையையும் பணியையும் கண்டடைவர். ஆகையால் பொதுநிலையினரைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கென்று தனிமையான மாற்றங்களில்லை — திருச்சபைக்கென்றும் தனிமையான மாற்றங்களில்லை — முழுத்திருச்சபையின் தன்மையையும், பணியையும் விளக்கிக் கூறும் முழுமையான திருச்சபை இயலே — பொதுநிலையினரின் தன்மையையும் பணியையும் விளக்க முடியும். இதைத்தான் உலகப் பிரசித்திபெற்ற இறையியலாளர் தந்தை கொங்கார் (Y. Congar) கூறுகின்றார்: There can be only one sound and sufficient theology of the laity and that is a total ecclesiology. (Lay people in the church. p. xvi)

ஆகையால் பொதுநிலையினரின் உண்மையான தன்மையையும் பணியையும் உணர்ந்து அதற்கிணங்கச் சீவிக்காத திருச்சபை அதன் பெயருக்கே இழுக்காகிவிடும் என வத்திக்கான் சங்கம் கற்பிக்கின்றது (A. G. 21).

## கற்பித்ததைக் கடைப்பிடிக்க...

பொதுநிலையினரதும் பணியாளரினதும் நிலையைப்பற்றியும் பணியைப்பற்றியும்—பற்பல கற்பிக்கப்பட்டிருப்பினும் — சங்கத்தின் கற்பித்தலுக்கும் எமது கடைப்பிடித்தலுக்குமிடையில் ஒரு நீண்ட பயணம் இப்பயணத்தைப் பணியாளரும் பொதுநிலையினரும் சம ஆர்வத்துட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் துணிவுடனும் கையேற்கவேண்டும். இருபகுதியினரும் நீண்ட சரித்திரத்தில் ஒருவரையொருவர் தள்ளிவிட்டாற்போல தமது உண்மை இடத்தை இழந்துவிட்டனர், இப்போது உண்மை இடத்தைத் தேடியடைவதற்கு இருபகுதியினரும் கஷ்டமான பயணத்தைத் துணிவுடன் மேற்கொள்ள வேண்டும்.

## பொதுநிலையினர் : வரைவிலக்கணம்

**பொதுநிலையினர் :** இவ்வார்த்தை சரித்திரம் நிறைந்த ஓர் ஆங்கில வார்த்தையின் (Laity) தமிழாக்கமாகும். திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளருக்கு / அல்லது திருநிலையினருக்கு (Clergy) மாறுகப் பொதுப்பணியினர் அல்லது பொதுநிலையினரென்று மொழிபெயர்க்கப் படுகின்றது. 'பொது' (Common) என்றால் 'திரு' (Sacred) என்பதற்கு எதிர்ப்பதமாகக் கருதப்படுகின்றது. 'திரு' என்னும்போது சர்வ சாதாரணமானவைகளிலிருந்து ஒரு விசேட, பரிசுத்த அல்லது தெய்வீக நோக்கத்திற்காகப் புறம்பாக்கப்பட்டதாகக் கருதப்படும். ஆகையால் பொதுநிலையினர் என்பது திருநிலைப்படுத்தப்படாது, எவ்வித விசேட பரிசுத்த/தெய்வீக நோக்கத்திற்காகவும் தெரியப்படாத அல்லது ஒதுக்கப்படாத சாதாரண பகுதியினராகக் கருதப்பட்டது.

**வார்த்தையின் இழுக்கு :** இவ்வார்த்தை திருநிலைப்படுத்தப்படாத பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் ஆதிச் சரித்திரத்தையும் அதன் இழுக்கான நிலைமையையும் எடுத்துக்காட்ட வலிமையற்றது. ஆதியில் திருநிலைப்படுத்தப்படாதவர்களையே Laity என்று அழைத்தனர். விவிலிய ஊற்றில் (Laos) 'மக்கள்' என்று கருதப்பட்டிருந்தாலும். சரித்திரத்தில் Laity எனப்பட்டவர்கள், படியாத பண்பாடு குறைந்த மடையர்களாகவே கணிக்கப்பட்டனர்.

திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் லத்தீன் மொழியையும் தத்துவ மெய்யியல் போன்றவற்றையும் கற்றவர்களென்றும் திருச்சபையில் தெய்வீக அதிகாரத்தைப் பெற்றவர்களென்றும் கருதப்பட்டு ஏனையோர் அதற்கெதிராக, படியாத பண்பாடற்ற மக்களாகக் கணிக்கப்பட்டனர். இன்றைக்கும் ஆங்கிலமொழியில் (Laymen) என்கும்பொழுது விஷயம்புரியாத சாதாரணமானவர் என்று கருதப்படும்.

ஆகையினால் பொதுநிலையினர் எனப்படுவோருக்குச் சரித்திரத்தினால் சுமத்தப்பட்ட இழுக்கான குறைவான பதங்களனைத்தும் அகற்றப்பட்டு, அவர்களின் பெருமையான நிறைவான அம்சங்கள், அடங்கிய நேரான வரைவிலக்கணத்தைத் திருச்சபை அமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருகுலம் இறைகுலமாகப் பிரிந்து வளர்த்தல்

குருகுலம், இறைகுலம் என்ற வேறுபாடு ஆதித் திருச்சபையில் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் தமக்கு அளிக்கப்பட்ட கொடைகளுக்கும் தகைமைகளுக்குமேற்ப இறைபணி புரிந்தனர் என அறிகின்றோம். ஆனால் படிப்படியாக, விசேடமாக 4-ம் நூற்றூண்டுதொட்டு 15-ம் நூற்றூண்டுவரை, கொன்சன்ரையின் காலத்தில் (Constantine era) திருச்சபைத் தலைவர்கள் அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும் ஊறி வளர்ந்து அரசாங்கங்களின் ஆதரவையும் சலுகைகளையும் பெற்று, ஓர் உயர்ந்த குலமாக இறைமக்களிலும் பார்க்க மேலானவர்களாக வாழ்ந்து வந்தனர். குருகுலம், கற்பிக்கும் திருச்சபையாகவும் (Ecclesia Docens) இறைகுலம். கற்பிக்கப்படும் திருச்சபையாகவும் (Ecclesia Discons) பிரிந்து இருபகுதியினருக்குமிடையில் வேறுபாடுகள் வளர்ந்து ஓங்கியது. குருகுலத்தார் ஏதோ உயர்ந்த உலகிலிருந்து, மெய்யியல், இறையியல் போன்ற சாஸ்திரங்களை இலத்தீன் மொழியில் கற்று அதிகாரத்துடன் இறங்கிவந்தோர் போலிருந்தனர். இவர்கள் திருச்சபையைச் சார்ந்தவைகளில் அதிகாரமுள்ளவர்களாகவும், மெய்யியல் இறையியல் சாஸ்திரங்களில் வல்லுனர்களாகவும் சலுகைகள் நிறைந்தவர்களாகவுமிருக்க இறைகுலத்தவர் ஒரு சக்தியற்ற, உணர்ச்சியற்ற, ஈடுபாடற்றவர்களாகவும், சாஸ்திரங்களை அறியாதவர்களாகவும், உரிமைகளோ, செல்வாக்கோ, அற்றவர்களாகவும் இருந்தனர்.

ஆதியிலே ஒரே தரத்தையும், மேன்மையையும் கொண்ட இறைமக்களின் சேவையைப் பொறுத்தமட்டில் இருந்த வேறுபாடுகள் (Functional Differences) காலாகாலத்தில் திருச்சபைக்குள்ளே இரண்டு பிரிந்த குலங்களை ஏற்படுத்தி இருக்கின்றது, இறைமக்களுக்கும், திருப்பணியாளருக்குமிடையில் அடிப்படையாக இருக்கவேண்டிய ஒற்றுமையையும், இணைப்பையும் குலைத்துவிட்டது. குருகுலத்தின் ஆதிக்கம் நிறைந்த திருச்சபையிலிருந்து இறைமக்கள் பல்வேறுவிதங்களில் பிரிந்து சென்றனர். திருச்சபைக்குள்ளே குருத்துவவாதம் (Clericalism) வழிபாட்டிலும், வாழ்விலும், அமைப்பிலும், அதிகாரத்திலும், ஞான வாழ்விலும் வளர்ந்து வந்தது. குருகுலமே திருச்சபை, குருக்களே நிறைவான கிறிஸ்தவர்கள், குருக்களே சரியானஅறிவையும், வாழ்க்கை முறையையும் கொண்டவர்களெனக் கருதப்பட்டது. ஆகையினால் இறைகுலத்தார் இரட்சணியம் அடைவதற்கு இலட்சியவழி உலகத்தை விட்டோடி, திருமணம், குடும்பம், பாலியல் போன்றவைகளை வெறுத்துக் குருக்களைப்போல் சீவிப்பதே எனக் கருதப்பட்டது. குருத்துவகுலத்தோர் முதலாம்தரக் கிறிஸ்தவரென்றும், ஏனையோர் வலிமை

யற்ற, உயர்ந்த இலட்சியமற்ற இரண்டாந்தர கிறிஸ்தவரென்றும் கருதப்பட்டது.

## லூதரின் முயற்சி

இக்குருத்துவ வாதத்திற்கு எதிராக 16–ம் நூற்றுண்டில் மாட்டின் லூதரும், சீர்திருத்தவாதிகளும், பல்வேறு மாற்றங்களுக்காகவும், திருத்தங்களுக்காகவும் போராடினர் (Reformation). ஆனல் திருச்சபையோ இதற்கு எதிராகத் தனது குருத்துவ அமைப்பைக் கடுமையான சட்ட திட்டங்களினுலும் பலப்படுத்தி, சீர்திருத்தவாதிகளின் கோரிக்கைகளை முழுமையாகக் கண்டித்து, கழித்தது (Counter-reformation). ஆகையினுல் பலநூற்றுண்டுகளாகக் குருகுலம் திருச்சபையின் சிறிய பகுதியாக இருந்தும், தனது குருத்துவ வாதத்தினுல் பெரும்பான்மையான இறைகுலத்தைக் கட்டுப்படுத்தி, ஆண்டு, அடக்கி, ஒடுக்கி, வழிநடாத்தியது. ஆகையினுல் மாட்டின் லூதரைப் பின்பற்றிய சபைகள் படிப்படியாகக் குருத்துவமற்ற மக்களாக வளர்ந்துவர, ரூேமன் கத்தோலிக்க திருச்சபை இறைமக்களற்ற, ஒரு குருகுலமாக வளர்ந்து வந்தது.

ஆகையினுல் சரித்திரத்தினுல் குருகுலம்–இறைகுலம் (Clergy-laity) எதிராளிகளாக தவருன முறையில் வளர்க்கப்பட்டதனுல், இப்பிரிவினையை முற்ருக அகற்றிவிடவேண்டுமென்று சில இறையியல் வல்லுனர்கள் விரும்பினர் (F. Klostermann, H. Kung).

## வத். சங்கத்தின் அறிவுரை

2ஆம் வத்திக்கான் சங்கம் இதைப்பற்றித் தெளிவுபடுத்துகையில் குருகுலம்–இறைகுலம், எனும் பிரிவு எதிர்க்கட்சிகளைத் திருச்சபையில் ஏற்படுத்தவல்ல—மாருக திருச்சபையான மறைஉடலில் ஒருவர் ஒருவருக்கிடையில் ஒற்றுமையையும், ஒருமையையும் பேணிவளர்ப்பதற்காகவே என்கிறது.

ஒரே இறைமக்களைக் குருகுலமென்றும், பொதுநிலையினரென்னும் பிரித்தழைக்கும் நோக்கம் அவர்களைப் பிரிப்பதற்காகவல்ல இணைப்பதற்காகவே (L. G. 32d) இறைமக்களின் ஒற்றுமை, அங்கத்தவர்களனைவரும் ஒரேவிதமான பணிபுரிவதிலல்ல, பலவிதமான பணிகள் புரிவதிலே ஊன்றி நிற்கவேண்டும். (Unity—not in uniformity, but in diversity of functions).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலத்தவரும், பொதுநிலையினரும் பணியினுல் மாத்திரமல்ல, தம் சாரத்திலும் வேறுபட்டிருக்கின்றனரென்று பலர் விவாதிக்கக் கூடும். ஆனுல் இவ்விரு நிலையினரும் அடிப்படையில் கிறிஸ்தவர்க ளென்றும், அதுவே அவர்களுக்கு இரட்சணியம் அளிக்க வல்லதென் றும், குருப்பட்டமோ, அபிஷேகமோ இரட்சணியமளிப்பதில்லை என்றும் உணரவேண்டும்.

ஆகையினுல் வத்திக்கான் சங்கம் குருகுலம் – இறைகுலம் என்ற பிரிவினைத் தலைப்புக்களைத் தவிர்த்து அநேகமாகத் திருப்பணியாளர்— பொதுநிலையினர் என்ற பிரிவினையை விரும்புகின்றது. இப்பிரிவினை இறைமக்களுக்கிடையிலுள்ள அடிப்படையான சமத்துவத்திற்கோ, சகோதரத்துவத்திற்கோ, மாண்பிற்கோ, மதிப்பிற்கோ முரணுகாது செயல்படவேண்டும். இதன்காரணமாக திருப்பணியாளரின் அமைப்பு (Hierarchical Structure) ஒரு பிரமிட்டின் உருவத்திலே (Pyramidal Structure) அதாவது பாப்பரசர் உச்சியிலும், அதன்கீழ்ப் படிப்படியாகக் கருதினுல்மார், பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், மக்கள் என்ற ஒழுங்கில் இயங்காது — திருப்பணியாளருக்கும், பொது நிலையினருக்கு மிடையில் தொடர்புகள் குழுப்பண்புகள் (Collegial) நிறைந்த பொது மைய வட்டங்களாக (Concentric) இயங்க வேண்டுமெனச் சங்கம் விரும்புகின்றது. அதாவது கிறிஸ்துவை மையமாகக்கொண்ட திருச்சபையில் பாப்பரசரைச் சுற்றி ஆயர்களும், ஆயர்களைச் சுற்றிக் குருக்களும், குருக்களைச் சுற்றி மக்களும் கூடிவாழ்ந்து செயல்படவேண் டும். (Community—Collegiality– Co-responsibility Co-operation).

மேற்கூறப்பட்ட புரட்சியின் அடிப்படையில் பொதுநிலையினரின் முழுமையான வரைவிலக்கணத்தை அடைவதற்கு ஏதுவான அடிப் படையான சில அம்சங்களைச் சங்க ஏடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். திருச்சபையின் சிறுபான்மையான திருப்பணியாளர்களை மையமாக வைத்துப் பெரும்பான்மையான பொதுநிலையினரின் தன்மையையும் சாரத்தையும் (Nature & Essence) வர்ணிப்பது தலைகீழான ஒருசீரற்ற ஒழுங்கைப் பின்பற்றுவதாகும். பொதுநிலையினர் தங்கள் மட்டிலும் திருச்சபைக்கு வெளியேயுள்ளவர்களைச் சார்ந்தமட்டிலும் இவர்கள் யார்? அவர்களுடைய கிறிஸ்தவ ஆள்தன்மையை (Christian Personality) அமைக்கும் அம்சங்கள் யாது?

2ஆம் வத்திக்கான்சங்கம் பொதுநிலையினரின் வரைவிலக்கணத்தை வெளியாகக் கொடுக்கவில்லை. ஆனுல் அதற்குரிய அம்சங்களைத் திருச் சபை, இன்றைய உலகில் திருச்சபை, பொதுநிலையினரின் அப்போஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலத்துவம், திருச்சபையின் மறைபரப்புப்பணி போன்ற ஏடுகளில் பரவலாக ஆனால் தெளிவாகக் கொடுத்திருக்கின்றது. அவைகளில் நான்கு முக்கியமானவற்றை இங்கு காண்போம்.

1. பொதுநிலையினர் திருச்சபையில் உரிமையும் கடமையும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள் (Full-fledged members with rights and duties)

புதிய ஏற்பாட்டின் இறைமக்கள் என்றழைக்கப்படும் திருச்சபையினுள்ளே வகுப்பு வாதத்திற்கு இடமில்லை. திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கெடுத்து உதித்த கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே பிதாவின் பிள்ளைகள், ஒரே மறையுடலின் அங்கத்தவர்கள். உறுதிப்படுத்தலின் வழியாக முதிர்ச்சியடையும் இவர்கள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் எக் காரணத்திற்காகவோ எவருடைய ஆதிக்கத்திற்காகவோ மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. உரிமையில் குறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவர்களாகவோ, கடமையில் குறைந்த முக்கியத்துவமற்றவர்களாகவோ கருதுவது தவறு.

முழுமையான அங்கத்தவர்கள் என்றமட்டில் இறைவனின்வார்த்தையைப் போதியளவு கேட்கவும், இறைவனின் அருட்சாதனங்களை அடிக்கடி கொண்டாடி ஊட்டமும் உறுதியும் பெறவும், திருச்சபை நலனுக்காகத் தமது ஆலோசனையைக் கூறவும் இவர்களுக்கு உரிமையுண்டு (L. G. 37). இவ்வுரிமைகள் தெய்வீக திட்டத்தில் பிறந்த உரிமைகளாகையால் (Divine right) இவைகளைத் திருச்சபை சரித்திரத்திலே திருப்பணியாளர்மேல் திணித்த கோட்பாடுகளின் (Ecclesiastical Laws) காரணமாகவோ தனித் தலைவர்களின் அதிகாரத்தினாலோ மறுக்கமுடியாது. இக்கண்ணோட்டத்தின்படி பொதுநிலையினரின் அருட்சாதன தேவைகளைத் திருஆட்சியாளரின் விருப்பத்திற்கும் இணக்கத்திற்கும் விட்டுவிடாது, திரு உரிமைகளை நிவிர்த்திசெய்யத் திருச்சபையி.ன கோட்பாடுகள் மாற்றியமைக்கப்படவேண்டும். மேய்ப்பர்கள் மக்களின் உரிமையான கோரிக்கைகளுக்கு நன்று செவிமடுக்கவேண்டும். உதாரணமாக கிராமங்களிலும் நகரத்தின் வெளிப்புறங்களிலும் பரந்து கிடக்கும் சிறிய கிறிஸ்தவ சமூகங்களும் தமக்குரிமையான சேவைகளைப் பெறவேண்டும். பட்டணத் திருச்சபைகள் பலவிதமான அருட்சாதனங்களையும், சேவைகளையும், வழிபாடுகளையும் பெற்றுப் பருகி வளர அதேநேரத்தில் சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், தொகையில் சிறியனவென்றும் தூரத்தில் எட்டாதவைகளென்றும் காரணங்காட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் வார்த்தையின்றி, வழிபாடின்றி, நற்கருணை உணவின்றி, சமூக உறவுமின்றி வாடி வதங்கவிடுவது அநீதி.

பொதுநிலையினர் உரிமைகள் மாத்திரமல்ல — கடமைகளும் பல உடையவர்களாயிருக்கின்றனர். கடமையும், உரிமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் அல்லது இருமுகங்கள். உழைக்கின்றவனுக்கே உண்ணவும் உரிமையுண்டு. அதேவிதத்தில் உரிமைகளை வாதாடி வாங்கினால் போதாது. பொதுநிலையினர் திருச்சபையில் முக்கியமான கடமைகளையும் கொண்டிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து, முதிர்ச்சியுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படவேண்டும்.

கடந்த காலத்தில் திரு ஆட்சியமைப்பையே உருவாகக்கொண்ட திருச்சபை இயலில் (Hierarchology as Ecclesiology) பொதுநிலையினரின் இடம் ஆட்சியாளருக்கு அக்கமும், பக்கமும் நிற்பதிலேயே தங்கியிருந்தது. இறைவனின் பணிசெய்யக் கிறிஸ்து வந்தாரென்றும், கிறிஸ்துவின் பணிசெய்யத் திருப்பணியாளர்கள் திருநிலைப்படுத்தப்பட்டிருக்கின்றார்களென்றும், பொதுநிலையினர் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளரின் (Ordained Ministers—Bishops & Priests) பணியிலே அக்கபக்க (Marginal) பங்கெடுக்கலாமென்றும் நம்பப்பட்டது. இதற்கிணங்க பொதுநிலை அப்போஸ்தலத்துவர் (Lay apostles) ஆயர், குருக்களுக்கே உரித்தான பணியில் கையாட்களாகவும் கருவிகளாகவும் கணிக்கப்பட்டனர். பொதுநிலை அப்போஸ்தலத்துவம் பொலிந்த காலத்திலே (1940—1960) இவர்கள் ஆயர்–குருக்களின் கரங்களாகவும், பாதங்களாகவும் இருப்பதில் மேன்மைகொள்ள வேண்டுமென்று போதிக்கப்பட்டது.

ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கம் இக்கொள்கையைத் தகர்த்தெறிகின்றது. பொதுநிலையினர் திருச்சபையினுள் இருப்பதற்கும், இயங்குவதற்கும் இன்னோர் பகுதியின் தயவும், தாராள மனதும் நிபந்தனையல்ல. தங்களுக்குரிமையான திருமுழுக்கு, உறுதிப்படுத்துதல், திருமணம் போன்ற அருட்சாதனங்களை அடித்தளமாகக் கொண்டிருக்கவும், இயங்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு, கடமை உண்டு. மேலும் கிறிஸ்துவின் இரட்சணியப்பணி திருச்சபை முழுவதன் மேலும் சுமத்தப்பட்டுள்ள ஒரு பொறுப்பு. இப்பொறுப்பை அல்லது அப்போஸ்தலிக்க கடமையை உறுதிப்படுத்தப்பட்டோரும், திருநிலைப்படுத்தப்பட்டோரும், இல்லறத்தோரும் துறவறத்தோரும் தமக்கேற்ற வடிவத்திலும் வட்டாரத்திலும் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர் (L. G. 33a, b).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளைப் பொறுத்தமட்டில் மாத்திரமல்ல, திருச்சபையின் வாழ்விற்கு ஏதுவான சகல காரியங்களிலும் சுதந்திரத்தோடும், உரிமையோடும் கருத்துக்களைத் தெரிவிக்கவும், தவறுகளைக் கண்டிக்கவும், நன்மையானவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்லவும் சொல்லவும் கடமைப்பட்டிருக்கின்றனர் (L.G. 32). (திருச்சபையினுள்ளே பொறுப்புள்ளவர், பொறுப்பற்றவர் அல்லது முக்கியத்துவமுள்ளவர், முக்கியத்துவமற்றவர் அல்லது உயர்ந்த புனிதர், தாழ்ந்த புனிதர் அல்லது உரிமை கூடியவர் குறைந்தவரென்று வகுப்புகள் கிடையாது.)

பொதுநிலையினர் தமக்குரிய இலக்கணத்தையும், இடத்தையும், உரிமையையும், கடமையையும் கண்டடையவும் நிறைவேற்றவும், திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர் வழிவிட்டு, ஒளிகொடுத்து உதவ வேண்டும் (L. G. 33d). பொதுநிலையினர் திருச்சபையில் உண்மையான உருவத்தையும் உரிமையான பங்கையும் எடுக்க ஆயர்களும் குருக்களும் போதனையில் நின்றுவிடாது, சாதனையில் வரவேற்று வழிகாட்டி, இடம்கொடுத்து நல்நம்பிக்கை காட்டிப் பொறுப்பைப் பகிர்ந்து செய்யவேண்டியன பல.

2. **பொதுநிலையினர் புதிய இறைமக்கள் என்பதின் காரணமாகக் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணிகளின் பங்காளிகளாக இயங்குகின்றனர். (Participants in the Priestly, Prophetic and Royal Functions of Xt.)**

திருமுழுக்கின் வழியாகக் கிறிஸ்துவின் சாயலைப்பெற்ற ஒவ்வொரு மகனும் கிறிஸ்து இரட்சகரின் முப்பணியில் (Messianic functions) பங்கு பெறுகிறான். கிறிஸ்து குருவாக இயங்கினார். பொதுநிலையினரெல்லோரும் அவரைப்போன்ற குருக்களல்ல. ஆனால் கிறிஸ்துவின் குருத்துவ பணியின் சாயல் பொதுநிலையினரைச் சாருகின்றது.

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் உறவை மீண்டெடுத்து, இறைவனை மனிதனுக்கு வெளிப்படுத்தவும், மனிதனின் தேவைகளை இறைவன்முன் வேண்டவும் கிறிஸ்து மத்தியஸ்த குருவாக இயங்கினார். அதே வரிசையில் பொதுநிலையினர் தாம் பெற்ற இறைவார்த்தையையும் வரத்தையும் உலகிற்கு வழங்கவும் உலகின் தேவைகளையும், பிரச்சனைகளையும் இறைவன்முன் சமர்ப்பித்து வேண்டவும், மத்தியஸ்த குருத்துவபணியை (Mediatory Priesthood) ஏற்றிருக்கின்றனர். இறைமக்கள் முழுவதும் ஒரே குருகுலம் என்பது அண்மையில் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் கண்டெடுக்கப்பட்ட ஒரு புதிய அம்சம் அல்ல. மாட்டின் லூதருடன் சேர்ந்தவர்கள் பணிக் குருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தைத் தாக்கி இப்பொழுதுக் குருத்துவத்தைத் திரு ஆட்சிக்கெதிரான ஒரு பிரச்சாரத் தலைப்பாக (Anti-hierarchical banner) உயர்த்தியதன் காரணமாக, திருச்சபை பொதுநிலையினரின் பொதுக் குருத்குவத்தைப் பற்றிப் பேச முன்வரவில்லை. பிரச்சாரத் தலைப்பாகத் தூக்கியவர்களும் இத்தலைப்பின் உள்ளடக்கத்தை வளர்க்கவில்லை. ஆனால் இன்று திருச்சபை பொதுக் குருத்துவத்தைப் போராற்ற மனப்பான்மையுடன் (Non-polemic attitude) நோக்கும்பொழுது பொதுநிலையினரின் குருத்துவத்தின் தன்மையையும் பணியையும் கருத்துடன் வளரும் ஓர் அம்சமாகவும் பணிக்குருத்துவத்துடன் அடித்தளத்தில் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டதுமாகக் கருதுகின்றது (L. G. 10b).

புனித இராயப்பர் ஆதிக் கிறிஸ்தவர்களைப் பார்த்து, "நீங்கள் ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டம்" (1 இரா. 2:5) என்றும், "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம்" (1 இரா. 2:9) என்றும் கூறுவதை ஆதாரமாகக்கொண்டு, இன்றைய திருச்சபை பொதுநிலையினரைக் குருத்துவ குலமென்றும், குருத்துவ பணிபுரிய உரிமையும், கடமையும் உள்ளோர் என்றும் கூறுவதை வெறும் ஆறுதல் வார்த்தைகளாகவோ போதனை முழக்கங்களாகவோ எடுக்காது, கருத்து நிறைந்த உண்மையாகக் கருதி அதைச் செயல்படுத்த வழிவகுக்கவேண்டும்.

பொதுநிலையினர் தமது குருத்துவ தன்மையை வழிபாடு, அருட்சாதனம், திருப்பலி விருந்து இவைகளில் பங்கெடுப்பதற்கு ஆதாரமான அடித்தளமாகவும், இறைவனுக்கும் உலகத்திற்குமிடையில் புரிய வேண்டிய மத்தியஸ்த பணியின் காரணமாகவும் உணரவேண்டும்.

அதேவிதமாகக் கிறிஸ்து இறைவாக்கினராக, உண்மைக்குச் சொல்லிலும் செயலிலும் சாட்சி பகர்ந்தார் என்பதன் காரணமாக, பொதுநிலையினர் உண்மைக்காக—விசேடமாக மனிதனைப்பற்றி தேவனால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்காக—சொல்லாலும் செயலாலும் சாட்சியம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். மனத் துணிவுடன் உண்மையைப் பேசவும், அநீதியைக் கண்டிக்கவும், மனிதஉரிமைகளுக்காகப் போராடவும் பொதுநிலையினர் தனியாகவும், குழுவாகவும் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆகவே அக்கிரமம் அநீதி அடக்குமுறை எவ்விதத்திலும் எவ்விடத்திலும் தலைகாட்டினும், அவைகள் கிறிஸ்தவத்திற்குப் புறம்பான அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகளென்று தவிர்த்து நடப்பது சரியல்ல. (ஜெரிக்கோ வீதியில் விழுந்தவனை விலத்திச்சென்ற மதகுரு போலாகின்றோம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து அரசனாக—புதிய இராச்சியத்தின் தலைவனாக, செயற்பட்டார். வார்த்தையாலும் வாழ்வாலும் புதிய இராச்சியத்தை அறிவித்து, அவ்விராச்சியத்தின் அன்பு, நீதி, சாந்தி, இரக்கம், புதிய வாழ்வு இவைகளைத் தமது புதுமைகளினாலும் உயிர்ப்பினாலும் அடியிட்டார். அவருடன் மரித்து புதிய வாழ்விற்குப் பிறந்த கிறிஸ்தவர்களும் ஒரு நல்ல அரசனைப்போல, அதாவது மக்கள் நலத்தையே தலைமேற் சுமந்த கடனைக் கொண்டவர்களாக, வாழ்க்கையின் எல்லா வட்டாரங்களிலும் புதிய இராச்சியப் பெறுமதிகளை (Values of the Kingdom) நிலைநாட்ட உழைக்கவேண்டும்.

3. **பொதுநிலையினர் உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும் உலகத்தில் ஈடுபட்டிருப்பவர்களாகவும் உலகத்தின் பொறுப்புடையவர்களாகவும் செயல்படவேண்டும்.** (Secularity is his specific character and responsibility)

திருச்சபை உலகத்திலும் உலகத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டது என்று மேற்கூறிய தத்துவத்தின்படி கிறிஸ்தவர்கள் — விசேடமாக முழுக்க முழுக்க உலகிலே வாழும் பொதுநிலையினர்—உலகத்தையும் அதன் வெவ்வேறு அம்சங்களையும் மீட்கும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உலகம் எனும் வார்த்தையை நாம் பலவிதத்தில் பாவம் எனும் வார்த்தையுடன் தவறாக மாற்றி எடுத்துவிட்டோம்.

உலகம் பாவம்நிறைந்த சாத்தானின் இராச்சியம், குடும்பம் சுய அடக்கமற்ற மனிதர் சீவிக்கும் வழி, பாலுணர்ச்சிகள் இயற்கையின் அழிவு உணர்ச்சிகள், உலகை விட்டோடுவதும், குடும்பத்தைத் தவிர்ப்பதும், பாலுணர்ச்சிகளை ஒடுக்குவதும், மடத்திற்குள்ளே புகுவதும்—இவைகளே (மனிக்கேயிசம் Manicheism) கிறிஸ்தவத்தின் இலட்சியமென்றாற்போல் குருக்கள்—துறவிகள் அல்லாதவர்களைப் பெலவீனம் நிறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவராகக் கருதினோம். இதற்கிணங்கப் பொதுநிலையினரும் தாம் தரத்தில், பொறுப்பில், ஒழுக்கத்தில், பரித்தியாகத்தில் குறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவர்களாகத் தம்மைக் கருதினர். இது தவறு. இது மாற்றப்படவேண்டும்.

உலகம் நல்லது — இறைவனின் படைப்பு. குடும்பம் நல்லது — இறைவனின் சமூக அமைப்பு. பாலுணர்ச்சி தன்னும் நல்லது—மனித அன்பின் உயர்ந்த உணர்ச்சி. இவைகளை மறுப்பதிலும் தவிர்ப்பதிலும்தான் கிறிஸ்தவம் தங்கவில்லை. இவைகளை இறைவனின் இரட்சணிய திட்டத்திற் கேற்ப அமைப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை மீட்டெடுத்து "புதிய மனித குலத்தையும் புதிய மண்ணை யும் புதிய விண்ணையும்" வளர்ப்பதில் தளர்ச்சியடையாது உழைப்ப திலும் தங்கியிருக்கிறது (G. S. 39b). இதற்கிணங்க உலகம், மனித சமூகம், குடும்பம், திருமணம், திருமண அன்பு இவைகளைப்பற்றியும் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வுபற்றியும் திருச்சபை முன்பொரு பொழுதும் இல்லாத முறையில் கற்பிக்கின்றது (G. S.). இவைகளை யெல்லாம் திருச்சபை இன்றைய உலகில் புரியவேண்டிய முக்கிய பணி யாக உணரும்பொழுது பொதுநிலையினரின் பணி அவர்களுடைய சொந்த உலகத்தில் அதிகரிக்கின்றது. உலகமே அவர்களின் பணிக்களம். ஆகையால் இப்பணியைப் புரிவதில் இவர்கள் திருநிலைப்படுத்தப்பட்ட வர்களின் பதிலாளி ளாகவோ, பிரதிநிதிகளாகவோ அல்லது துணை வர்களாகவோ செல்வதல்ல. தாங்களும் திருமுழுக்கினாலும் உறுதிப் படுத்துதலினாலும் கிறிஸ்துவின் பணியை ஏற்ற முதிர்ச்சியான அங் கத்தவர்களென்ற மட்டில் தம் சொந்தப் பொறுப்புணர்ச்சியுடன் செல்லவேண்டும்.

இறையியலாளர் கார்ல்ரானர்'Karl Rahner' கண்ணோட்டத்தில் பொது நிலையினர்என்பது உலகின் வாழ்விலும்அமைப்பிலும் ஒருவனுக்குஇருந்து வரும் ஈடுபடுதல் அவனுடைய கிறிஸ்தவ சீவியத்திற்கு உருக்கொடுக்கின் றன என்பதாகுமென்கின்றார். One whose christian experience and responsibilities are determined by his native involvement in the life and organisation of the world (NRT 78 1956, pp 4—32).

இக்கண்ணோட்டம் டியற்றிக் பொன்கொவ்வர் (Dietrich Bon-hoeffer) போல் வான் பூறன் (Paul Van Buren) இவர்களின் கருத்துடன் சேர்ந்தது.

உலகத்தையும் மனுக்குலத்தையும் மையமாகக்கொண்டு சேவை யில் சுற்றும் திருச்சபையின் பொதுநிலையினர் இனிமேல் ஸ்தாபன திருச்சபையையோ, குருகுலத்தையோ, பீடத்தையோ மாத்திரம் மையமாகக் கொண்டிருக்க முடியாது. திருவழிபாடு மையமாகவும் குருக்கள் தலைவர்களாகவும் இருந்தபொழுதிலும், பொதுநிலையினரின் முக்கிய பணி இவ்வுலகத்தையும் அதன் மனுக்குல வாழ்வையும் கிறிஸ்தவ தத்துவங்களுடன் கட்டி எழுப்புவதே. பொன்கொவ்வர் கூறுகிறார்: பொதுநிலையினர் உலக காரியங்களில் ஈடுபடும்பொழுது அங்கே திருச்சபையின் பெயரைப் பாதுகாக்கவல்ல, ஆனால் கிறிஸ்து வுடன் ஒன்றித்து விடுதலை தேடும் சகல மனிதர்களுக்காகவும்—சகல வாழ்க்கை வட்டாரங்களுக்காகவுமே செயல்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பொதுநிலையினர் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக உண்மையான அருங்கொடைகளைப் பெற்றவர்கள்

அருங்கொடைகள் தனியரின் நலனுக்காகத் தனித்தவருக்கு (privately) அளிக்கப்படும் கொடையல்ல. ஆனால் சமூகத்தின் நலனுக்காக, சமூகத்தை வளர்ப்பதற்காக ஒருவருக்கு கொடுக்கப்பட்ட கொடை. இப்பேர்ப்பட்ட கொடைகள் ஆதித்திருச்சபையில் அதிகமாக இருந்தன. அக்கொடைகள் நிலைநிற்கும் / நிரந்தர சேவைகளாகவும் (Services / Ministries) வளர்ந்தன. ஆனால் திருச்சபையின் நீண்ட சரித்திரத்தில் திருநிலைப்படுத்தப்பட்டோரின் கொடைகளாக மாத்திரம் தவறாகக் கருதப்பட்டன.

ஆனால் 2-ம் வத்திக்கான் சங்கம் இத்தவறான அபிப்பிராயத்தைத் திருத்தியது. ஆவியானவர் எல்லா நிலையிலுள்ள விசுவாசிகளுக்கும் தமது இஷ்டப்படி சிறப்பான அருங்கொடைகளை வழங்குகின்றாரென்றும், இக்கொடைகள் பொதுநிலையினர் பல்வேறு அலுவல்களையும் கடமைகளையும் மேற்கொள்ள தகுதியும் ஆர்வமும் அளிக்கின்றதென்றும் கற்பிக்கின்றது. ( L. G. 12 b ) இக்கொடைகளை ஆயர், குருக்கள் இலேசாக நசுக்கிவிடாது உண்மையனவையை தேர்ந்து மனமார நன்றியுடன் வரவேற்று வளர்த்து பயன்படுத்த வேண்டும் (L.G. 12b, c; A.A. 3 c.).

விசேடமாக திருநிலைப்படுத்தப்பட்டோர், சந்நியாசிகள் குறைந்தும் பணிகள் அதிகரித்தும் இருக்கும் இன்றைய நிலையில் பொதுநிலையினரின் அருங்கொடைகளை விழிப்புடன் தேர்ந்தெடுத்து ஆர்வத்துடன் பயன்படுத்துவது அவசியம். இதற்கிணங்க பொது நிலையினர் வெட்கம், தகுதியின்மை, கல்வித்தராதரம் இவைகளை ஒதுக்கி தாம் பெற்ற அருங்கொடைகளைச் சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் பல்வேறு பொறுப்புகளையும் துணிவுடன் கையேற்க வேண்டும். எல்லா வழிபாட்டிற்கும் எல்லா பங்கு வைபவங்களுக்கும், எல்லா மறை நிகழ்ச்சிகளுக்கும், எல்லா சமூக சம்பவங்களுக்கும் திருநிலைப்படுத்தப்பட்ட குரு அல்லது ஒரு கன்னியாஸ்திரி இருக்க வேண்டும், இவர்களே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென்ற கண்ணோட்டம் எம் மத்தியிலிருந்து மறைய வேண்டும். மறை ஆசிரியர்கள், சமூகத்தலைவர்கள், செபத்தலைவர்கள், போதகர்கள், அபிவிருத்தித் தலைவர்கள், வாலிபர் இயக்குனர்...இப்படியாக அருங்கொடை பெற்றவர் அனேகர் எம் மத்தியில் செயற்பட வேண்டிய காலம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநிலையினரின் வாழ்வும் பணியும்

இப்படியாகப் பொதுநிலையினர் உரிமையும் கடமையும் கொண்ட முழு அங்கத்தவரென்றும், கிறிஸ்துவின் முப்பணியின் பங்காளிகளென்றும், அருங்கொடை பெற்று உலகிலே உரிமையுடன் செயற்படுகிறவர்களென்றும் 2-ம் வத்திக்கான் சங்கப் படிப்பினையில் வரைவிலக்கணம் அமைக்கின்றோம். இப்படிச் செய்வது பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம், திருப்பணிகள், ஆன்மவாழ்வு (Lay postolate, Ministry, Spirituality) இவைகளில் ஒரு திருப்பத்தை யேற்படுத்தும். அத்திருப்பங்களை இவ்விடம் விரிவாக ஆராய முடியாது. ஆகையால் இவைகளை விருத்தி செய்ய சுருங்கச் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவோம்.

## பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்

கடந்த காலத்தில் திருப்பணியாளர்களிடம் நேராக ஒப்படைக்கப்பட்ட பணியிலே பங்கெடுப்பதே பொது நிலையினரின் அப்போஸ்தலத்துவம் ஆகக் கருதப்பட்டது. இது தவறு. கிறீஸ்துவின் இரட்சணிய பணி முழுத்திருச்சபையிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இப்பணிக்கு எல்லாக் கிறீஸ்தவர்களும்—திருமுழுக்கு, திடப்படுத்துதல் வழியாக—ஆண்டவரினுல் அதிகாத்துடன் நேராக அழைக்கப்படுகின்றனர் ( L. G. 33 b ). பொது நிலையினரின் அப்போஸ்தலத்துவம் திருஆட்சி அமைப்பாளரின் அழைத்தலிலோ, அதிகாரத்திலோ அல்ல, ஆண்டவரின் அதிகாரத்தில் பிறக்கின்றது.

போதிய திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, தலைவர்கள் அழைத்தாலும் சரி, அடக்கினுலும் சரி, பொதுநிலையினர் தமக்கென்று ஒரு பணியைக் கடமையாகப் பெற்றிருக்கின்றனர். இப்பணியைச் செய்வதில் தங்களுக்குரிய திறனையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவர். ஆகையால் இவர்களின் சேவை பீடத்தைச் சுற்றியும், கோவிலைச் சுற்றியும், பங்குக்குள்ளேயும், திருவருட்சாதனங்களைப் பொறுத்ததாகவும் இருக்க வேண்டிய நிபந்தனையில்லை. மாமுகக் குருக்கள் கன்னியர்கள் ஈடுபடாத பரந்த வாழ்க்கை வட்டாரங்களில் இவர்களின் சேவை மலர வேண்டும்.

கடந்த காலத்தில் மரியாயின் சேனை, கிறிஸ்தவ தொழிலாளர், மாணவர் இயக்கங்கள், புனித வின்சென்டிபோல்சபை இவைகளின் சேவை பங்கின் எல்லைகட்குள்ளே குருக்களின் ஏவுதலிலும் வழிநடத்தலிலும் தங்கி ஆக்கத்தன்மை (Creativity) துரிதுரிப்பு (Dynamism) இல்லாதவையாகவும் நடந்தன. ஆகையால் பொதுநிலையினரைப் பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியும் உலகம்—திருச்சபை தொடர்பு பற்றியும் மேற்கூறிய சிந்தனைகளுக்கிசைய பொது நிலையினரின் அப்போஸ்தலத்துவம் உலகையே பணித்தளமாகவும், பொதுநிலையினரின் ஆக்க வன்மையை (Initiatives) ஆதாரமாகவும் வைத்து பலவிதத்தில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

## பொதுநிலைத் திருப்பணி (Lay Ministry)

கடந்த காலத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர்களே (Ordained Ministers) திருச்சபையின் பணியாளர்களாகக் கருதப்பட்டனர். ஆயர், குருக்கள் (தியாக்கோன்) இவர்களே திருச்சபையில் நிலையான முழுமையான சேவையாளராகக் கருதப்பட்டு—திருப்பணியாளர் எல்லோரும் திருஆட்சி அமைப்பின் (Hierarchy) அங்கத்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால் இப்போது விவிலிய ஆராய்ச்சியின் அடிப்படையில் திருப்பணியாளரின் வரைவிலக்கணம் மாற்றி அமைக்கப்படுகின்றது. திருச்சபையில் நிலையான பகிரங்க சேவை புரிபவர் திருப்பணியாளர் ஆவர், இவர்கள் திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளரென்றும் பொதுநிலைத் திருப்பணியாளரென்றும் பிரிக்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| திருப்பணியாளர் (Ministers) | திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளர் (Ordained Ministers) |
| | பொதுநிலைத் திருப்பணியாளர் (Lay Ministers) |

2-ம் வத்திக்கான் சங்கம் ஆயர்களைப் பற்றி ஆராய்வதற்கு முன் "ஆண்டவர் கிறீஸ்து இறைமக்களை ஊட்டி வளர்ப்பதற்காகவும், என்றும் அவர்கள் பெருகுவதற்காகவும் தமது திருச்சபையிலே பல்வேறுபட்ட பணிகளை ஏற்படுத்தினர்" (L. G. 18a) என்கின்றது, பொதுநிலைத்திருப்பணியாளர் (திருநிலைப்படுத்தப்படாத/non-ordained) பற்றிய பேச்சு சங்க ஏடுகளில் நேரடியாக இடம் பெறுவிடினும், விவிலிய ஆராய்ச்சிக்கும், சங்கப் படிப்பினைக்கும் பிரமாணிக்கமாக வளர்ந்துவரும் இறையியலில் (Post-Vatican Biblical Theology) பொ.நி.தி. பற்றிய விளக்கம் தெளிவாகிறது. பொது நிலையினர் பொதுநிலையினராகவே உலகத்தில் இருந்துகொண்டு, தமது திருமுழுக்கு திடப்படுத்துதல் அருட்சாதனங்களின் வல்லமையில் திருச்சபையின் பேரில் பகிரங்கமாகவும் நிலையாகவும் (Stable) கையேற்கும் பணி பொதுநிலைத் திருப்பணியாகும். இத்திருப்பணிக்குத் திருநிலைப்படுத்தல் சாரமாகவோ நிபந்தனையாகவோ அமையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்கால திருச்சபையில் கிறீஸ்தவ சமூகங்கள் ஒவ்வொன்றும் திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளர்களை மாத்திரம் தனித்தலைவர்களாகக் கொண்டு இயங்க முடியாது. எல்லாச் சமூகங்களிலும் அருங்கொடைகள் (Charisms) வரவேற்கப்பட்டு, சமூகத்திற்கு இன்றியமையாத சில, திருப்பணியாக (Ministry) ஏற்றுக்கொள்ளப்படும். பொதுநிலையினர்—ஆண்களும் பெண்களும்—சமூகத்தலைவர்களாகவும் (Community Leaders) மறை ஆசிரியராகவும் (Lay Catechists), செபத் தலைவர்களாகவும் (Prayer Leaders), சுகாதார, சமூக, தொழில் சேவையாளராகவும் (Sanitary, Social, Work Leaders) திருப்பணி ஏற்பார்கள். இவ்வமைப்பில் குருக்கள் வட்டாரத் தலைவர்களாகவும் (Regional Leaders) கூட்டமைப்பாளர்களாகவும் (Co-ordinators), திருப்பலிவிருந்தின் தலைவர்களாகவும் (Eucharistic Presidents) திருப்பணியேற்பர்.

## பொது நிலையினரின் ஆன்மீகம் (Lay Spirituality)

திருச்சபையில் புனிதமடைய அனைவருக்கும் ஒரே ஆழமான அழைப்பிருக்கின்றது (L G. 39, 40). புனிதத்தின் சாரம் அன்பின் நிறைவை நாடுவதாகும். இதை நாடுவதிலும், சீவிப்பதிலும் வெவ்வேறு வழியுண்டு. நற்செய்தி அறிவுரைகள் (Evangelical Counsels) என வழங்கப்பெறும் நெறிகளைக் கடைப்பிடிப்பது ஒரு வழி (Religious Life). ஆனல் இதுதான் இலட்சிய வழி அல்லது இதுதான் முதற்தர புனிதத்துவத்தின் வழி என்றுற்போல் பொது நிலையினரும் இவ்வழியைக் குறுகிய முறையில் (Mini-form) பின்பற்றுவதே அவர்களின் ஒரே ஆன்மீகம் என்பது தவறு. குருக்களோ சந்நியாசிகளோ தமது ஆன்மீக வழிகளை (Priestly Spirituality, Monastic Spirituality) பொதுநிலையினர் மீது எவ்விதத்திலாவது திணித்தலாகாது. பொதுநிலையினரும் அவ்வழிகளைத் தம் வழிகளாக ஏற்பதும் தவறு.

கிறீஸ்தவ ஆன்மீகம் (Christian Spirituality) எவ்விதத்தில் உலகத்தை தங்கள் வாழ்க்கை வட்டாரமாகக் கொண்டவர்கள் மத்தியில் கருத்தும் பொருத்தமுமுள்ளதாக அவதாரப்படுத்தப்பட வேண்டும் (incarnate) என்பது இன்னும் ஆராய்ந்துபடிக்க வேண்டிய தொன்ருகும்.

## வருங்காலத் திருச்சபை

திருச்சபை தன் நோக்கிற்கிணங்க வருங்கால உலகின் இரட்சணிய குறியாகவும், சேவையாளனுகவும் (Sign & Servant of Salvation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிய வேண்டுமாயின் திருச்சபையினுள்ளே திருநிலைப்படுத்தப் பட்ட தலைவர்களும் ஏனைய பொதுநிலையினரும் தங்கள் இடத்தையும், பணியையும் நன்குணர வேண்டும். பெரும்பான்மையான பொதுநிலையினரின் வரைவிலக்கணத்தை சிறுபான்மையான குருகுலத்தின் தொடர்பிலே (in relation to clergy) தேடும் காலம் மலையேறி விட்டது. பொதுநிலையினர் திருச்சபையில் உரிமைகளும், கடமைகளும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள். அவர்கள் கிறீஸ்து இரட்சகரின் குருத்துவ இறைவாக்கு அரச பணிகளில் பங்கெடுப்பவர்கள். அவர்களுக்குகந்த உண்மையான அருங்கொடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உலகமும் உலகத்தின் அமைப்புகளும் இவர்களுக்குரிய வாழ்க்கை வட்டாரமும் பணிக்களமுமாகும். இந்த விளக்கத்தில் இவர்களின் அப்போஸ்தல சேவை, திருப்பணி, ஆன்மீகம் அனைத்தும் ஆராயப் பட வேண்டும். எவ்வளவிற்கு இவைகளை ஆராய்ந்து வழிவகுக்கிறோமோ அவ்வளவிற்குத்தான் திருச்சபைஉலகிற்கு பொருத்தமான இரட்சணிய பணி புரிய முடியும்.

"தனது வரைவிலக்கணத்திற்கு ஏற்றதாகவும், திருஆட்சிஅமைப்பாளருடன் கூடி பணிபுரியக் கூடியதாகவுமுள்ள ஒரு பொது நிலையினர் கூட்டம் இல்லாவிட்டால்..........திருச்சபை உண்மையாகவே வேரூன்றவில்லை—முழுவாழ்வைக் கொள்ளவுமில்லை. — மனிதர் நடுவே கிறீஸ்துவின் சின்னமாகவுமில்லை.'' (தி. ம. ப. 21)

குறிப்பு: 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளுக்கான குறியீடுகள்

L. G. : திருச்சபை

G. S. : இன்றைய உலகில் திருச்சபை

A, G. : மறைபரப்புப் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டியல் :

# பண்பாட்டில் வழிபடுவோம்

சு. ஜெறிபெல் கிருபாகரன்

இலங்கைவாழ் தமிழ்க் கிறித்தவர்களின் சிந்தையில் இன்று அலேமோதுவது ''பண்பாட்டு மயமாக்குதல்'' என்னும் பதமாகும். பண்பாட்டுமயமாக்குதல் அல்லது பண்பாட்டில் வழிபடுவதுபற்றிப் பலரும் பலவாறு பேசிக்கொள்கின்றனர். பண்பாட்டு மயமாக்குத லால் தமிழ்க் கிறித்தவர்களின் வழிபாடுகளில், வாழ்க்கையில் ஏற் படக்கூடிய, ஏற்படவேண்டிய மாறுதல்களைப் பலர் எதிர்க்கின்றனர்; வேறுசிலர் முழுமனதுடன் வரவேற்கின்றனர். நாம் இன்று பண் பாட்டு மயமாக்குதலே முழுமையாக ஏற்க முடியாமைக்குக் காரணம்— பண்பாட்டில் வழிபடுவதன் சிறப்பை, அதனுல் நாம் அடையக் கூடிய நன்மைகளை அறியாதிருப்பதேயாகும். எனவே, பண்பாட்டில் வழிபடுவதன் சிறப்பை அறிய, முதலில், பண்பாட்டு மயமாக்குதல் என்ருல் என்ன? என்பதை நாம் அறியவேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் பண்பாட்டு மயமாக்குத லுக்கு, கருத்துச் செறிந்த முறையில் பண்பாட்டில் வழிபடுவதற்கு வழி சமைத்துள்ளது.

> ''கிறித்து மனுவுருவானபோது எந்த நோக்கத்தோடு தம்மோடு வாழ்ந்த மக்களுடைய சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலைகளை ஏற்று நடந்தாரோ, அதே நோக்கத்தோடு திருச்சபை மீட்பின் மறை திட்டத்தையும் கடவுளால் மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட வாழ் வையும் எல்லா மக்களுக்கும் அளிக்க இயலும் வகையில் நற்செய் தியை அறியாதோர் மத்தியில் நுழையவேண்டும்.''
>
> (திருச்சபையின் மறைபரப்புப் பணி — எண்: 10ஆ)

''பயன்தரும் முறையில் கிறித்துவுக்குச் சான்று பகர விசுவாசி கள் அம்மக்களுக்கு அன்பு செய்தும் அவர்களை மதித்தும் அவர் களோடு இணைந்திருக்க வேண்டும்; அவர்கள் வாழும் மக்கட் குழுக்களில் தாங்களும் உறுப்பினர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித வாழ்வின் பலவகைத் தொடர்புகளினுலும் நிகழ்ச்சிகளினுலும் அவர்களுடைய சமூக, பண்பாட்டு வாழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு கொள்ள வேண்டும். அவர்களுடைய நாட்டு மரபுகளையும், சமய மரபுகளையும் நன்கறிந்திருக்க வேண்டும். இம்மரபுகளில் மறைந்திருக்கும் வார்த்தையானவரின் வித்துக்களை மகிழ்ச்சியோடும் வணக்கத்தோடும் கண்டுபிடிக்க வேண்டும்.''

(திருச்சபையின் மறைபரப்புப் பணி — எண்: 11 ஆ)

எனவே, இயேசு எவ்வாறு மனிதனாகப் பிறந்து, பிறந்த மண்ணின் சூழலுக்கு, காலத்திற்கு ஏற்ப வாழ்ந்தாரோ, அவ்வாறே, திருச்சபையும் அந்தந்த சமுதாயத்திற்கேற்ப, சமுதாயத்தின் பண்பாட்டிற்கேற்ப தன்னை வெளிப்படுத்துவதே பண்பாட்டுமயமாக்குதலாகும்.

# 1. பண்பாட்டில் வழிபடுவது ஏன்?

## பண்பாடு — பண்பாட்டுமயமாக்குதல்

பண்பாட்டு மயமாக்குதல், பண்பாடு என்னும் பதத்திலிருந்து உருவானதால், ண்பாடு என்றால் என்ன? என்று அறியவேண்டும். ''பண்பாடு'' என்னும் பதத்திற்கு பலப்பல வரையறைகள் உண்டு. நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் வரையறையிலிருந்து வேறுபட்ட ஒரு கருத்து பண்பாட்டுக்கு அண்மைக்காலங்களில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வரையறைப்படி, பண்பாடு என்றால் கலை, இசை நாடகம் மட்டுமன்றி, முழுமையான மனித வாழ்க்கையாகும்.

பண்பாடு எப்பொழுதும் வளர்ச்சியடையக்கூடிய தொன்றாகும். இன்று பண்பாடு வேகமாக மாறுவதால், வளர்வதால், இது குறித்து நாம் விழிப்பாக இருக்கவேண்டும். இக்கட்டுரையின் நோக்கிற்காக, பண்பாடு என்றால் ஒரு சமூகத்திற்குப் பொதுவாகவுள்ள சிந்தனையும், செயற்பாடுமென்று எடுத்துக்கொள்வோம். இதுபோலவே, பண்பாட்டு மயமாக்குதலென்றால், ஒருவன் தான் வாழும் சமுதாயத்தின் பண்பாட்டில் மூழ்கியிருத்தலாகும். ஆனால், இலங்கையில் வாழும் தமிழ்க் கிறித்தவர்களைப் பொறுத்தவரை, கிறித்தவம் எமது வாழ்க்கை முறையில், பண்பாட்டில் உறைந்து நிலைக்கவில்லை. உலகின் வேறுசில நாடுகளில், பிற மதங்கள் மக்களின் பண்பாட்டில் நிலைத்து வேரூன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, மலேசியாவில் இஸ்லாம் மதமும், தாய்லாந்தில் புத்த மதமும், இந்தியாவில் இந்துமதமும் பண்பாட்டில் நிலைத்துள்ளன. எனவே, கிறித்தவம் இலங்கைத் தமிழ்க் கிறித்தவர்களின் பண்பாட்டில் வளர்ச்சியடையாததேன்? பண்பாட்டின் உண்மையான கருத்தை, அதன் சிறப்பை நாம் அறியவில்லை. இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக, கிறித்தவ சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பை நாம் அறியாதிருக்கின்றோம். அத்துடன் இறை வழி பாட்டைப் பண்பாட்டு மயமாக்க, அண்மைக்காலம்வரை எமக்கு எது விதசுதந்திரமும் அளிக்கப்படவில்லை.

## பண்பாட்டு மயமாக்குதல் — மனுவுருவெடுத்தல்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்துடன் திருச்சபையின் வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியது. திருச்சபை தனது நிலையை உணர்ந்தது. இன்றைய உலகில் தான் வாழ்வதன் நோக்கம், அர்த்தம் என்ன? என்பதைத் திருச்சபை உணர்ந்தது. தான் எவ்விதம் சேவை செய்யவேண்டுமென்பதைத் திருச்சபை உணர்ந்தது. உயிர்த்த கிறித்துவில் எமது விசுவாசத்தை, தூயஆவியின் அருளால் நிலைகொள்ளச் செய்வதிலேயே திருச்சபையின் வாழ்வு தங்கியுள்ளது. உலகில் ஒரு அருட்சாதனமாக, இறைவனின் அளவிலா அன்பின் அடையாளமாகச் செயற்படவேண்டுமென்பதைத் திருச்சபை உணர்ந்துள்ளது. திருச்சபையைப் போன்று, திருச்சபையின் உறுப்பினர்களாகிய ஒவ்வொரு கிறித்தவனும் கிறித்தவளும் செயற்படாவிடின், நாம் ஒரு பழையகால நினைவுச் சின்னமாகவே கணிக்கப்படுவோம்.

உலகின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின், திருச்சபை உலகில் வாழவேண்டும்; உலகிலேயே இருந்து உலகிற்குச் சேவை செய்யவேண்டும். அதாவது, திருச்சபை கிறித்தவர்கள் வாழும் பண்பாட்டிற்கேற்ப, கிறித்தவர்களின் பண்பாட்டில் நிலைத்துச் செயற்பட வேண்டும். இயேசு மனுவுருவெடுத்து, பிறந்த மண்ணின் பண்பாட்டிற்கு, காலத்திற்கேற்ப எவ்வாறு வாழ்ந்தாரோ, அவ்வாறு திருச்சபையும் அந்தந்த மக்களின் பண்பாட்டிற்கேற்ப, காலத்திற்கேற்ப செயற்படவேண்டும்

> "ஒரே இடைநிலையாளரான கிறித்து, இந்த உலகிலே விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றைக் கொண்ட சமூகமான தமது புனிதத் திருச்சபைக்குக் காணக்கூடிய ஓர் அமைப்பை அளித்து, அதைத் தொடர்ந்து காத்து வருகிறார். இதன் வழியாகத்தான் உண்மையையும் அருளையும் எல்லாருக்கும் அவர் வழங்குகிறார். இது பல்வேறுபட்ட உறுப்புகளைக் கொண்டு நிறுவப்பட்ட சமூகமாகவும் கிறித்துவின் மறை உடலாகவும் விளங்குகிறது; கண்களுக்குப் புலப்படும் குழுவாகவும் ஞான சமூகமாகவும் இலங்குகிறது; மண்ணகத் திருச்சபையாகவும், விண்ணக நலன்களால் நிரப்பப்பட்ட திருச்சபையாகவும் திகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது; எனினும் இவற்றை வெவ்வேறான இரண்டு என்று கருதக் கூடாது. மாறாக, மானிட, தெய்வீகக் கூறுகளைக் கொண்ட ஒரே கூட்டமைப்பையே உருவாக்குகின்றன. எனவேதான், மனு வுருவெடுத்த வார்த்தையானவரின் மறைபொருளுக்கு ஏற்ற உவமையாக இது ஒப்பிடப் படுகிறது. தாம் எடுத்துக்கொண்ட மனித இயல்பு எவ்வாறு மீட்பின் உயிருள்ள ஒரு கருவியாக அவரோடு பிரிக்க முடியாதவாறு இணைந்து அவருக்குப் பணி புரிகின்றதோ, அவ்வாறே, திருச்சபையின் சமூக அமைப்புப், அதற்கு உயிரூட்டுபவரான கிறித்துவின் ஆவியானவருக்கு அவ்வுடலை வளர்க்க உதவுகிறது.''

(திருச்சபை — எண்: 8)

இயேசு தமது சேவையை ஆரம்பிக்கும்போது, உண்மையான முழு மனிதனாகவே இருந்தார். அவர் இறைவனின் வார்த்தையாக மட்டும் இருக்கவில்லை. அவர் மனிதருள் மனிதனாக, பாவம் தவிர்ந்த அனைத்திலும் மனிதனைப் போலவே வாழ்ந்தார். அவரது உடல் மண்ணுலகைச் சார்ந்ததாகவே இருந்தது. அவரது மக்கள் மத்தியில் அவர் அவராகவே இருந்தார். அவர் பயன்படுத்திய மொழி, சிந்தனைகள், உவமையில் பயன்படுத்திய எடுத்துக்காட்டுகள், இயற்கையைக் கணித்த தன்மை... இவை அனைத்தும் அவர் சமுதாயத்தின் அமைப்புக்கேற்ப சமுதாயத்திலே வாழ்ந்தார் என்பதையே காட்டுகின்றன. நற்கருணையை ஏற்படுத்தியபோதும், இரவுணவுக்காக வைக்கப்பட்டிருந்த சாதாரண அப்பத்தையே இயேசு பயன்படுத்தினார்; இதிலும் சிறந்த அப்பத்தையும் இரசத்தையும் கேட்கவில்லை; யூதர்களின் நாளாந்த உணவையே பயன்படுத்தினார். பிரச்சினைகள், முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக அப்போஸ்தலர்க்க திருச்சபை, யூதர்களின் சமய நெறிகளுக்கு, வாழ்க்கைப் பண்புகளுக்குத் திருச்சபையைக் கட்டுப்படுத்தியது. (காண்க கலா. 2:14)

இறைவனின் வார்த்தை மக்களின் உள்ளங்களில் நிலைக்க வேண்டுமாயின், பல்வேறு பண்பாடுகளில் அப்பண்பாடுகளுக்கேற்ப வேரூன்ற வேண்டும். ஒவ்வொரு பண்பாட்டிலுமுள்ள சிறந்த பண்புகளுக்கேற்ப இறைவனின் வார்த்தை மக்கள் உள்ளங்களில் வேரூன்றி வளர வேண்டும்.

''கடவுளின் வார்த்தையான விதை நல்ல நிலத்தில் முளைத்து, திவ்விய பனியால் நீர் பெற்றுச் சாற்றை உறிஞ்சுகிறது. இது முடிவாகப் பெருங்கனி கொடுக்கும்படி அச்சாற்றை உருமாற்றித் தன்வயப்படுத்துகிறது. உண்மையில் மனுவுருவெடுப்பின் திட்டப்படி கிறித்துவில் வேரூன்றி, அப்போஸ்தலர்களாகிய அடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்தின்மேல் எழுப்பப்பெற்ற இப் புதுச் சபைகள் வியத்தகு பொருள்மாற்ற முறையில் கிறித்துவுக்கு மரபுரிமையாகக் கொடுக்கப்பட்ட எல்லா நாடுகளின் செல்வங்கள் அனைத்தையும் தன்வயப்படுத்திக் கொள்கின்றன. இச்சபைகள் மக்களின் வழக்கங்களிலிருந்தும் மரபுகளிலிருந்தும் அவர்களுடைய ஞானத்திலிருந்தும் கோட்பாடுகளிலிருந்தும் கலைகளிலிருந்தும் அறிவியல்களிலிருந்தும் படைத்தவரின் மாட்சிமையைப் பறைசாற்றவும் மீட்பரின் அருளை வெளிப்படுத்தவும் கிறித்தவ வாழ்வைத் தகுந்த முறையில் அமைக்கவும் உதவக்கூடிய அனைத்தையும் உள்ளேற்றுக் கொள்கின்றன.''

(திருச்சபையின் மறைபரப்புப் பணி — எண்: 22)

மக்களின் வாழ்க்கை முறைகள், கலை, கலாச்சாரம் என்பன மதத்திற்கும்நல்லொழுக்கத்திற்கும் முரண்பாடானதாக இருந்தாலன்றி, அவற்றை மாற்றக்கூடாது. இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் கிறித்தவம் வளரவேண்டுமாயின், நாம் உரோமை நகரின் பண்பாட்டை அல்ல, கிறித்தவ விசுவாசத்தையே மக்கள் மத்தியில் கொண்டுவர வேண்டும். எந்த மதமும் மக்களின் உரிமைக்கேற்ப, பண்பாட்டுக்கேற்ப வளர வேண்டுமேயன்றி, தடையாக இருக்கக் கூடாது. மனிதன் முதலில் பிறந்த மண்ணை, மண்ணின் பண்பாட்டைப் போற்றவேண்டும். அம் மண்ணிற்கேற்ப, மண்ணின் பண்பாட்டிற்கேற்ப மதமும் வளர வேண்டும்.

நாம் வாழும் காலத்திற்கேற்ப, எமது பண்பாட்டிற்கேற்ப திருச்சபை வளர வேண்டுமென்பது இயேசுவின் கொள்கைகளுக்கோ, கோட்பாடுகளுக்கோ முரணானதன்று. ஏனெனில், இயேசுவும் உலகிலே மனிதனாகப் பிறந்து, பிறந்த மண்ணின் பண்புகளுக்கேற்ப வாழ்ந்தார். வார்த்தையானவர் இவ்வுலகிற்கு வந்து, உலகின் பண்பாடுகளுக்கேற்ப வாழந்தார்.

இயேசு இறைவனின் அருளைப் பெற்று, அவ்வருளைத் தமது வார்த்தையிலும், செயல்களிலும், அருங்குறிகளிலும் காலத்திற்கேற்ப வெளிப்படுத்தினார். இயேசு அருளிய மீட்பின் நற்செய்தியும் காலத்திற்கும் பண்பாட்டிற்கும் உகந்த முறையில் வெளிப்படுத்தப்படவேண்டும். அதாவது, இயேசுவின் மட்பின் நற்செய்தியின் வெளி அடையாளமாகத் துலங்கும் திருச்சபை காலத்திற்கேற்ப, அந்தந்த மண்ணில் வாழும் மக்களின் பண்பாட்டிற்கேற்ப செயற்படவேண்டும். இதுவே பண்பாட்டுமயமாக்குதலாகும். எனவே, மக்களின் பண்பாட்டிற்கேற்ப கிறித்தவம் வளராவிடில், திருச்சபையில் முழுவளர்ச்சியில்லை. வார்த்தையானவர் மனுவுருவெடுக்காவிடில், மனுக்குலத்திற்கு மீட்புமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தழுவியமைத்தல்: பண்பாட்டில், வழிபாட்டில்

## சமுதாயம் — விழாக்கள் — கிறித்தவம்

ஒவ்வொரு சமூகத்திலும் விழாக்கள் பல கொண்டாடுகின்றோம். இவ்விழாக்களுள் சில சமூக விழாக்கள், வேறுசில பண்பாட்டு விழாக்கள். இவ்விழாக்களனைத்தும் பண்பாட்டிற்கேற்பவே கொண்டாடப் படுகின்றன. சமூக விழாவான திருமணத்தை எடுத்து நோக்கினால், திருமணவிழா பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடுகின்றது. இது போலவே, சாவு வீடும் அமைகின்றது. எடுத்துக்காட்டாக, தமிழர் திருமணவிழா சிங்களவர் திருமண முறையினின்று வேறுபடுகின்றது. வேறு எந்த சமூக விழாவும் இவ்விதமே பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடுகின்றது. எமது சமூகங்களில் பண்பாடு தொடர்புடைய விழாக்களான பொங்கல், தீபாவளி போன்றவை கொண்டாடப் படுகின்றன. அண்மைக்காலம்வரை இவ்விழாக்களை இந்து மக்கள் மட்டுமே கொண்டாடினர். திருச்சபை இவ் விழாக்களைக் கொண்டாட வில்லை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின், திருச்சபையும் இவ்விழாக்களைக் கொண்டாடத் தொடங்கியது. இச்சங்கம் இவ் விழாக்களின் உட்கருத்துக்களை, இவ்விழாக்களுக்கும் கிறித்தவத்துக் கும் உள்ள தொடர்புகளை, ஆதாரங்களைத் தெளிவுபடுத்தியது. இந்த ஆதாரங்களை நாம் வேதாகமத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இஸ்ராயேல் மக்கள் அறுவடைத் திருவிழா என்னும் விழாவைக் கொண்டாடினர். அறுவடை விழாவையே நாம் பொங்கல் என்று அழைக் கின்றோம். இந்து மக்கள் மட்டுமன்றி, தமிழ் மக்கள் அனைவரும் பொங்கல் விழாவைக் கொண்டாடவேண்டும். ஆண்டின் நான்காவது திங்களில் அறுவடை செய்து, அதன் முற்றிய முதற்கனிகளை ஆலயத் திற்கு எடுத்துச் சென்று, ஆண்டவருக்குக் காணிக்கையாக அளித்து, அவற்றை இல்லத்திற்கு எடுத்துச் சென்று சமைத்து, அயல் இல்லத் தோருக்கும் கொடுத்து, தாமும் வயிறுர உண்டு மகிழ்வர் இஸ்ராயேலர். இஸ்ராயேலர் இந்நாளை நன்றியின் பெருநாளாகக் கொண்டாடுவர். வரு கின்ற ஆண்டிலும் நன்மாரியும், நல்விளைச்சலும் கிடைக்க வேண்டுவர். உழைத்தாலும், உழுதாலும், விதைத்தாலும், நீர் பாய்ச்சினாலும் இறைவனையே வாழ்வின் மையமாக, எல்லாமாகக் கொண்டு செயற் பட்டனர். பழைய ஏற்பாட்டிலே, லேவியர் ஆகமத்திலே, "ஆண்ட வர் மோயீசனை நோக்கி: நீ இஸ்ராயேல் மக்களிடம் சொல்லவேண் டியதாவது: நாம் உங்களுக்களிக்கவிருக்கும் நாட்டையடைந்து, அதில் விளைச்சலை அறுக்கும்போது, உங்கள் அறுவடையின் முதற்பலனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்க்கட்டுக்களைக் குருவிடம் கொண்டுவரக் கடவீர்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. (லேவி. 23:9,10). இதனையே நாம் இன்று பொங்கல் என்று அழைக்கின்றோம். பொங்கல் போன்று தீபாவளித் திருவிழாவையும் தமிழ்மக்களாகிய நாம் கொண்டாடுகின்றோம். தீபாவளி ஒளியின் விழாவாகும். இவ்விழாவின்போது நாம் சிறிய விளக்குகளை எமது இல்லங்களைச் சுற்றி ஏற்றுகின்றோம். இவ்விளக்குகளிலிருந்து பெறும் ஒளி இருளை அகற்றுவதுபோல, கிறித்துவும் தனது வாழ்வின், வார்த்தையின் ஒளியால் பாவ இருளை அகற்றுகின்றார். ஞானஸ்நானத்தின்போது கிறித்துவின் ஒளியைப் பெற்று, கிறித்தவர்களாக மாறிய நாமும் உலகின் ஒளியாக மிளிரவேண்டும். இவ்விதமாக, வெவ்வேறு பண்பாடுகளுக்கேற்ப, இவ் விழாக்கள் வெவ்வேறு முறைகளில் கொண்டாடப்படுகின்றன. எனவே, இவ்விழாக்களை இந்துமக்கள் மட்டுமன்றி, தமிழ்க் கிறித்தவர்களாகிய நாமும் இவற்றின் சிறப்பைப் புரிந்து கொண்டு, எமது மதக் கோட்பாடுகளுக்கேற்ப கொண்டாடி மகிழ்வோம்.

## இறைவன் — இறைமக்கள் — இறைவழிபாடு

இறைவழிபாடு இறைமக்களை இறைவனுடன் ஒன்றிக்கச் செய்கின்றது. கிறித்தவர்களாகிய நாம் வாழ்வில் விசுவசிப்பதை வெளிப்படுத்துமிடமே இறைவழிபாடாகும். வழிபாட்டில் ஆண்டவர் பெயரால் நாம் அனைவரும் ஒன்றிக்கின்றோம். திருச்சபையானது செபத்தின் மூலமும், தியாகத்தின் மூலமும் வழிபாட்டில் தன்னையே இறைவனுக்களிக்கின்றது. நாம் எந்த வழியிலும் பெற்றுக்கொள்ளும் அறிவைவிட, வழிபாட்டிலேயே இறைவனைப்பற்றியும், இறையரசுக்குரிய வழி பற்றியும் சிறப்பாக அறிகின்றோம். இதன்மூலம் விசுவாசிகளாகிய நாம் ஆன்மீக வளர்ச்சியில் வளம்பெற்று, உயிர்த்த கிறித்துவுடனும், தூய ஆவியுடனும் ஒன்றிக்கிறோம். திருச்சபையின் வாழ்வில் இறைவழிபாடு இப்பேற்பட்ட உயர்ந்த அரிய சந்தர்ப்பங்களை இறைமக்களுக்கு அளிக்கின்றது. ஆனால், இதன் மூலம் பயனடைய வேண்டுமாயின், நாம் முழு மனிதர்களாக எம்மால் இயன்றளவு முழுமையாக இதில் பங்கேற்க வேண்டும். இது பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் தெளிவாகக் கூறுகின்றது:

''விசுவாசத்தின் நற்கருணை என்னும் புனிதமிகு மறைபொருள் நிறைவேற்றப்படும்பொழுது கிறித்தவ விசுவாசிகள் அதனுடன் தொடர்பு அற்றவர்கள்போல் அல்லது மௌனம் சாதிக்கும் பார்வையாளர்கள் போல இராமல் சடங்குகள், செபங்கள் ஆகியவற்றின் வாயிலாக அதனை நன்றாகப் புரிந்துகொண்டு, அப்

—3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித செயலை உணர்ந்து அதில் பற்றுக்கொண்டு செயலாற்றிப் பங்குபெறவேண்டும். இறைவனின் வார்த்தை அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். ஆண்டவரின் உடல் வழங்கப்படும் பந்தியில் அமர்ந்து அவர்கள் ஊட்டம் பெறவேண்டும். இறைவனுக்கு நன்றி சொல்லவேண்டும். களங்கமற்ற பலிப்பொருளைக் குருவின் கரங்கள் வழியாக மட்டுமன்றி, குருவோடு சேர்ந்தும், ஒப்புக் கொடுத்துத் தங்களையே அர்ப்பணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு, இறுதியாக, இறைவனே எல்லாருக்கும் எல்லாமாயிருக்க இறைவனோடும் தங்களுக்குள்ளும் கிறித்துவை இடைநிலையாளராகக் கொண்ட ஒருமைப்பாட்டில் அவர்கள் நாளுக்கு நாள் நிறைவு பெறவேண்டும்.''

(இறைபணி — எண்: 48)

எனவே, இறைவழிபாட்டில் இறைமக்களாகிய நாம் இறைவனோடு ஒன்றிக்க வேண்டுமாயின், வழிபாட்டின் கருத்தை, சடங்குகள், செபங்களை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். வழிபாடு எமது பண்பாட்டுக்கேற்ப அமையவேண்டும். எமக்கென்றொரு சிறந்த, உயர்ந்த பண்பாடு உண்டு. எமது உயர்ந்த, சிறந்த பண்பாட்டில் நாம் வழிபடவேண்டும்.

# 3. பண்பாட்டு மயமாக்கலில் எதிர்நோக்கப்படும் சிக்கல்கள்

## பண்பாட்டுமயம் — இந்துமயம்

தமிழ்ப் பண்பாட்டுக்கும் இந்துமதத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனவே, இலங்கைத் தமிழ்க் கிறித்தவர்களைப் பொறுத்தவரை, பண்பாட்டுமயமாக்குதலில் இந்துமதத் தொடர்புள்ள வடிவங்கள் வழிபாடுகளில் வரலாம். பண்பாட்டில் வழிபடுவதைக் கொள்கையளவில் ஆதரிப்பவர்கள் இதனையே குறையாக எடுத்துக் கூறுகின்றனர். கிறித்தவ வழிபாட்டில் பிறமத தொடர்புள்ள வடிவங்கள் புகுத்தப்படுவதேன்? என்று வினவுகின்றனர்.

மதமும் பண்பாடும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. மதத்திலிருந்து மாறுபட்ட பண்பாடுமில்லை, பண்பாட்டிலிருந்து பிரிந்து தனித்து நிற்கும் மதமுமில்லை. எடுத்துக்காட்டாக, தமிழ்ப்பண்பாடும் இந்துமதமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புகொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறமதங்களில் காணப்படும் சிறந்த, கருத்துள்ள வடிவங்கள், சடங்குகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரே கடவுளே முழு உலகையும் படைத்தார். ''ஆதியிலே வாக்கு இருந்தார், அவ்வாக்கு கடவுளோடு இருந்தார். அவ்வாக்கு கடவுளாயும் இருந்தார். அவர் ஆதியிலே கடவுளோடு இருந்தார். அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின ........'' (அரு. 1:1-3). படைக்கப்பட்ட அனைத்தையும் கிறித்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டுமென்பதே இறைவனின் திட்டம். (எபே. 1:9-10). இறைவன் கிறித்துவிடம் அனைத்தையும் ஒப்படைத்தார். கிறித்துவின் மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் படைப்புகள் அனைத்தும் கிறித்துவின் மீட்பின் செயலில் பங்கு கொள்கின்றன. படைப்பு முழுவதும், மனுக்குலம் முழுவதும் கிறித்துவின் மீட்பின் செயலில் பங்கு கொள்ளுமாயின், உயிர்த்த கிறித்துவின் அருள் முழு உலகுக்கும் கிடைக்குமாயின், கிறித்தவர்களாகிய நாம் எதையும், சிறப்பாக, பிறமதங்களை கிறித்துவின் மீட்புத் திட்டத்திலிருந்து, திருச்சபையின் பணியிலிருந்து, பண்பாட்டு மயமாக்குவதிலிருந்து ஒதுக்கிவிட முடியாது. எனவே, இந்துமதமும் மற்றைய மதங்களும் இறைவனின் திட்டத்திற்குப் புறம்பானவையல்ல. மாறாக, முழுமனித இனமும் கிறித்துவில் முழுமை பெறுகிறதென்றால், பிறமதங்களும் இறைவனின் திட்டத்தில் பங்கு பெறுகின்றன. இவ்விதமாக, படைப்பு முழுமையையும் தன்னகத்தே கொள்ளும் மீட்புத்திட்டத்தை முழுமானிட சமுதாயத்திற்கும் அறிவிக்கும் கடமை திருச்சபைக்குண்டு. திருச்சபை படைப்பு முழுமையையும் ஒன்று சேர்த்து, முழுமனித சமுதாயத்தையும் ஒருவரொருவருடனும், இறைவனுடனும் ஒன்று சேர்க்க வேண்டும். உண்மை, அன்பு, நன்மை, தூய்மை போன்ற நற்பண்புகள் எங்கு காணப்படினும், அவை இறைவனிடமிருந்தே வந்தன, இறைவனையே சாரும். இவையனைத்தும் இறைவனின் கொடைகளாகும். மதங்களைப் பொறுத்தவரை, கிறித்தவர்கள் எதனையும் தேவையற்றதென்றோ, பயனற்றதென்றோ அகற்றிவிடக் கூடாது.

எனவே, நாம் பண்பாட்டில் வழிபடும்போது, பயன்படுத்தப்படும் வடிவங்களும் சடங்குகளும் இந்துமதத்திலும் பயன்படுத்தப்படுகிறது என்பதனால், நாம் இந்துமயப்படுத்துகிறோம் என்று பொருளாகாது. ஏனெனில், இவை இந்துக்களாலும் பயன்படுத்தப்படும் ஒரு தமிழ்ப் பண்பாடாகும்.

## விசுவாசம் – பண்பாட்டில் வழிபாடு

நாம் பிறமதங்களிலிருந்து எதனையாவது கிறித்தவ வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்கும்போது, எமது விசுவாசம் தளர்ச்சியடையக்கூடிய நிலை ஏற்படலாம். செபம், தியாகம் போன்ற மதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் அடிப்படைத் தேவைகளுக்கு விசுவாசமே உயிர் மூச்சுசாகும் விசுவாசமென்பது எம்மையே முழுமையாக இறைவனுக்கு அளிப்ப தாகும். இந்த அர்ப்பணம் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடப்பதில்லை. ஆனால், இது தொடர்ச்சியான, வளர்கின்ற ஒரு செயற் பாடாகும். எனவே, எந்த ஒரு வளர்கின்ற உறவைப்போல, விசுவா சமும் முழுமைக்கு வளர்ச்சியடைகின்றது. நாம் வாழும் சூழலில், எமது பண்பாட்டிற்கேற்ப, எம்மை முழுமையாக இறைவனுக்கு அளிக்கும் முறையை விசுவாசம் வெப்ளிபடுத்தாவிடில், அது தளர்ச் சியடைகின்றது. விசுவாசத்திற்கும் எமது பண்பாட்டிற்கும் தொடர் புண்டு. எமது பண்பாடு நாம் விசுவாசத்தில் முழுமையடைய உத வுகிறது. ஒரே பண்பாட்டு முறையைக் கொண்ட சமூகத்திலேயே நாம் எம்மை முழுமையாக இறைவனுக்கு அளிக்கலாம். எனவே, உண் மையான விசுவாசம் மிகைப்படுத்தப்படாத பண்பாட்டிலேயே வெளிப் படுத்தப்படுகின்றது.

## நற்செய்திப் பணி — பண்பாட்டில் வழிபாடு

கிறித்தவ வழிபாடுகளில் புதிய முறைகளைக் கையாளும்பொழுது அவற்றின் உட்கருத்துக்களை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். எனவே, பண்பாட்டு மயமாக்குதலில் முழுமையாக ஈடுபடுபவர்கள் தாமே பண்பாட்டு மயமாகவேண்டும். பொதுநிலையினரும்கூட கிறித்துவுக் குகந்த தமது வாழ்க்கையினால், நற்செய்தியைத் தமது இல்லங்களில் மட்டுமன்றி, தம்மைச் சூழ வாழும் கிறித்தவர் அல்லாதோர் மத்தி யிலும் பரப்பவேண்டும். நற்செய்தியை வாய்மொழியினால் மட்டு மன்றி,தமது வாழ்விலேயே வாழவேண்டும். நற்செய்திக்கேற்ப தாழ்மை யான, நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து, நீதி, விடுதலை, சமத் துவம், சமதர்மம் போன்ற உயரிய ஒழுக்கங்களை நாட்டிலே, சமு தாயத்திலே நிலைநாட்டவேண்டும். திருச்சபை மக்களின் வாழ்க் கையில் சிறந்த முறையில் செயற்படும்பொழுது, பண்பாட்டுமயமாக் குதல் எவ்வித வற்புறுத்தல்கள், எதிர்பார்ப்புகளின்றித் தானகவே நடைமுறைக்கு வரும். திருச்சபை மக்களின் வாழ்க்கையில் நுழைய வேண்டுமாயின், முழு மனித முன்னேற்றத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். நற்செய்தி முழு மனித வாழ்க்கையில், மனிதனின் பண் பாட்டில் நுழையவேண்டும். திருச்சபையும் இதன்படியே செயலாற்ற வேண்டும். முழுமனுக்குலமும் நற்செய்தியின் ஆற்றலுக்குள் அமைய வேண்டும். சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களையிட்டு, திருச் சபை விழிப்பாயிருந்து செயலாற்றவேண்டும். அப்போது, பண்பாட் டில் இறைவழிபாடு அர்த்தமுள்ளதாக, கருத்துச் செறிந்ததாக, பய னுள்ளதாக அமையுமென்பதில் ஐயமேதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுவாய்

எதனையும் ஆழமாக அறிந்து, முன்னின்று நடத்தக்கூடிய ஒருவரின் தலைமைத்துவத்திலேயே பண்பாட்டில் வழிபடுவதன் வெற்றி தங்கியுள்ளது. பண்பாட்டுமயமாக்குதலில் ஈடுபடுவோரின் வாழ்க்கைக்கும் பண்பாட்டிற்கும், சிந்தனைக்கும் செயலுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கவேண்டும். அநேகமாக, தமிழ்ப் பண்பாட்டிற்கும், பண்பாட்டில் வழிபாட்டை முன்னின்று செயற்படுத்தவேண்டிய குருமாணவர்கள், குருக்கள், துறவியரின் பயிற்சிக்கும் தொடர்பிருப்பதில்லை. அதாவது, இவர்களின் இறையியல் கல்வியும் பயிற்சியும் வாழ்க்கை முறையுடன், பண்பாட்டுடன் ஒத்ததாக இருப்பதில்லை. பண்பாட்டு மயமாக்குதல் மக்களின் முழு வாழ்க்கை முறையோடு சேர்ந்து அமையவேண்டும். எமது மத்தியில் பண்பாட்டில் வழிபாடு வெற்றியளிப்பதென்பது கடினமானதாகும். பண்பாட்டுமயமாக்கப்பட்ட இறையியல் கல்வியும், பயிற்சியுமே இதற்கு வெற்றியளிக்கலாம். பண்பாட்டுமயமாக்குதல் வெற்றியளிக்கவேண்டுமாயின், எமது சமுதாயத்தில் நிலவும் ஏழ்மை, அடக்குமுறை, அநீதி, அறியாமை, வேலையில்லாமை போன்ற பிரச்சினைகளை நாம் நன்கு அறிந்து, அதற்கேற்ப செயற்படவேண்டும். எனவே, பண்பாட்டுமயமாக்குதலில் எமது வாழ்க்கையையும் சமுதாய - பண்பாட்டு - வரலாற்று நிலையையும் நன்கு அறிந்து, அதற்கேற்ப இறைவழிபாட்டையமைத்து, மண்ணின் மனிதர்களாக, மண்ணில் பிறந்து, பிறந்த மண்ணின் பண்பிற்கேற்ப வாழ்ந்து, மானிடர்க்காக இறந்து, மாண்புடன் உயிர்த்த மனுமகனின் மைந்தர்களாக வாழ முற்படுவோம்.


உசாத் துணைகள்

1. Fr D. S. அமலோற்பவதாஸ், நற்செய்தியும் பண்பாடும்.
2. பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும்.
3. Fr. S. J. Emmanuel, Lay ministries for mission priorities, (art.), **Vidyajyoty**, 1977, pg. 268.
4. Inculturation — Process and Questions, **Loyola Papers**, 1977 Vol. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க இறையியல் :

# கருச் சிதைவு

அருட்செல்வன் ஞா விக்ரர் பிலேந்திரன்

கருச்சிதைவு சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டு மென்றும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகையில், சிலர் பரித்த வேதாகமத்தைக்கூட ஆதாரம் காட்டி, கருத்தடையானது சில சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும் என்று கூறுவர். ''கொலை செய்யாதே'' என்பது இறைவன் கட்டளையெனினும் தன்னைக் கொல்ல வருபவனை ஒருவன் தற்பாதுகாப்புக்காகத் தாக்கலாம். சமுதாயத்தின் நலன் கருதி சிலருக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது; இவற்றை நோக்குமிடத்து, சில சந்தர்ப்பங்களில் கருச்சிதைவு செய்வது தவறில்லை என்று சில அறிஞர் வாதிடுவர். ஆனால் உண்மை என்ன?

அபிவிருத்தியடைந்து வரும் எந்த நாட்டிலும், சமுதாயத்திலும், பிரச்சினைகள் தோன்றத்தான் செய்கின்றன. ஆனால் இப்பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகவே ஏற்று அவற்றிற்கு தீர்வு காண்பதற்கு குறுகிய, அறநெறிக்கு ஒவ்வாத வழிகளை விட்டு; மனித அறிவுத் திறமையைக் கொண்டு, அறநெறிக் கோட்பாடுகளுக்குள் நின்று பிரச்சினைகளை அணுகுவதே உரிய முறையாகும். இன்று பல நாடுகளில் பல்லாயிரக் கணக்கான மக்களின் கவனத்தைக் கவர்ந்து இருக்கும் பிரச்சினைகளில் ஒன்று கருச்சிதைவாகும். பல நாடுகளில் கருச்சிதைவு சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது; இன்னும் வேறு பல நாடுகளில் அங்கீகாரத்தைக் கோரி நிற்கின்றது. இங்கு கருச்சிதைவு பற்றி ஆயுமிடத்து மனித அறிவை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாது, மனித அறிவின் ஒளியிலும் கத்தோலிக்க கோட்பாடுகளின் நெறியிலும் நின்று கருச்சிதைவை நோக்குவோம்.

## கருத்தடை வேறு, கருச்சிதைவு வேறு

ஆணும் பெண்ணும் தாம்பத்திய உறவை மேற்கொள்ளும் பொழுது ஆணின் விந்தும் பெண்ணின் முட்டையும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கருவை உருவாக்குவதைத் தடுப்பதே கருத்தடை எனப்படும். இன்று பல வித கருத்தடை முறைகள் உண்டு. எந்த வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கை முறைக் கருத்தடையும் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆனல் இயற்கை முறைக் கருத்தடையை திருச்சபை ஏற்றுக் கொள்கிறது.

கருச்சிதைவு என்பது ஆணின் விந்தும், பெண்ணின் முட்டையும் இணைந்து உருவாக்கியுள்ள கருவை அழிப்பதாகும். இக்கரு தாயின் வயிற்றில் பத்து மாதங்கள் இருந்து வளர வேண்டும் என்பது இயற்கை நியதி. வளரும் கருவினை, இயற்கைக்கு மாமுகச் செயற்பட்டு எந்நிலையில் அழித்தாலும் அது கருச்சிதைவு எனப்படும். இயற்கையாகவும் கருச்சிதைவு ஏற்படுவதுண்டு. ஆனல் இங்கு செயற்கை முறைக் கருச் சிதைவு பற்றியே சிந்திப்போம்.

## ஏன் வேண்டும் கருச்சிதைவு ?

இதற்கான காரணங்களைப் பலரும் பல கோணங்களில் இருந்து ஆராய, அணுக முற்படுவர். சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப் படுத்த கருச்சிதைவு ஒரு முறையாக, கருவியாக இருக்க வேண்டுமென்று ஒரு சிலர் வாதிடுவர். 1979ம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் ''சனத்தொகையும் அபிவிருத்தியும்'' என்ற பொருளில் பெரும் மாநாடு ஒன்று இடம் பெற்றது அனைவரும் அறிந்ததே. இருபதாம் நூற்றுண்டின் இறுதியில் உலகின் சனத்தொகை தற்போதுள்ள தொகையிலும் இரு மடங்காகி விடும் என்பது நிபுணர்களின் கொள்கை. இந்நிலை ஏற் பட நாம் அனுமதிக்க முடியுமா? பொருளாதார நிலை என்னவாகும்? மனித வாழ்க்கையின் தரம் உயருமா? போன்ற விஞக்கள் எழுகின்றன. சனத்தொகை அதிகரிப்பது போன்று உலகின் மூல வளங்கள் அதிகரிப்ப தில்லை. இந்நிலையில் சனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பல செயற்கை முறைகள் கையாளப் பட்டாலும் அவை முற்றுக வெற்றி அளிப்ப தில்லை.

மேலும் பின்தங்கிய, கல்வியறிவற்ற கிராம மக்களுக்கு போதிய விளக்கமின்மையால் கருத்தடை தோல்வியுறுகின்றது. வெட்கம் காரணமாகவோ தவறுதலான உபயோகத்திஞலோ கருத்தடை தோல்வியுறுகின்றது. இந்நிலையில் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களை மேலும் இழி நிலைக்குத் தள்ளாமல் அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்த கருச் சிதைவு சட்டரீதியாக அங்கீகரிக்கப் பட வேண்டுமென்று வாதி டுவோரும் உளர். இலட்சக் கணக்கில் வறிய குழந்தைகள் அன்பின்றி, ஆதரவின்றி, கவனிப்பார் அற்று, பட்டினியாக உடுப்பதற்கு ஒரு முழம் துணியுமின்றி, இழிந்த நிலையில், வானமே கூரையாக, நடை பாதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடாக வாழுகின்றார்களே, இவர்கள் பிறவாது இருந்திருந்தால் எவ்வளவோ நலமாக இருக்கும் அல்லவா? ஆகவே இந்நிலை ஏற்படாது கருவிலே இவர்களை அழித்து விடுவது சிறந்தது என்பது சிலரின் கூற்று.

சில பாடசாலை மாணவிகள், இளம் பெண்கள் தம் செயலின் விளைவை முற்றும் அறியாதவர்களாய், நண்பர்களால் ஏமாற்றப்பட்டு கர்ப்பமுறுவது உண்டு. சிலர் பலாத்காரமாகக் கற்பழிக்கப்படுவதும் உண்டு. இவர்கள் தங்கள் செயலுக்கு முற்றிலும் பொறுப்பானவர்கள் அல்ல. இப்படியான இன்னலுக்கு உட்பட்ட பெண்ணை நம் சமுதாயம் இலகுவில் ஏற்றுக் கொள்ளாது. இவ்வாறான நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோரின் வாழ்க்கையின் பெரும் பகுதி ஏற்கனவே தீர்க்கப்பட்டு விட்டதாக அமைகிறது. இவர்களின் படிப்பிற்கு முற்றுப் புள்ளி இடப்படுகிறது. தாங்கள் விரும்பாத ஒருவரை மணம் முடிக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். ஒரு சம்பவத்தினால் அப்பெண்ணின் வாழ்க்கை முழுவதும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுகின்றது. இந்நிலையில் கருச்சிதைவுக்கு உத்தரவு அளிக்கப்பட வேண்டுமென்று கூறுவோர் பலர்.

## விஞ்ஞான நோக்கில்

கருவில் எப்பொழுது உயிர் ஏற்படுகிறது? காலஞ் சென்ற டாக்டர் குத்மாக்கர்(உலக சனத்தொகை, திட்டமிடல் பெற்றோர் கழகத் தலைவர் ) என்பவருடைய கூற்றுப்படி ஆணின் விந்தும் பெண்ணின் முட்டையும் சேரும்போது கருவில் உயிர் உண்டாகிறது. டாக்டர் லில்லி என்பவர் இத்துறையில் ஆழ்ந்த படிப்பை மேற்கொண்டவர். இவரின் கூற்றுப்படி ஏழு நாட்களில் ஒரு கருவானது அதன் தனித்துவத்தை அடைகிறது. தாயின் மாத ஒழுங்கைக் கட்டுப்படுத்தி, தாய்—சேய் உணவுத் தொடர்பை ஏற்படுத்துகிறது. பதினெட்டு நாட்களில் இதயம் அடித்துக் கொள்கிறது. ஆறு வாரங்களில் மூளை உருவாகிறது. பதினொரு வாரத்தின் பின்பு ஒரு மனிதனின் உள்ளங் கையின் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இந்நிலையில் சுவாசிக்கிறது, சீரணிக்கிறது, சிறுநீர் கழிக்கின்றது, அசைகின்றது, தூங்குகின்றது, வெப்பம், சுற்றாடல் போன்றவற்றின் தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றது. 11வது வாரத்தின் பின்பு புதிய அங்கங்கள் வளர்வதில்லை. டாக்டர் றிச்சாட் என்பவரின் கூற்றுப்படி 11வது வாரத்தின் பின்பு கருவானது நோவை உணரக்கூடியதாக உள்ளது. இதைத் தாமே பரீட்சித்துப் பார்த்ததாகக் கூறுகிறார். ஆகவே விஞ்ஞானத்தின்படி மனித உயிரானது கருவிலேயே ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிறது. ஆகவே ஒரு கருவைச் சிதைக்கும்போது, அழிக்கும்போது உயிர்க் கொலையே நடைபெறுகிறது. ஏனெனில் கருச்சிதைவு கருவின் உயிரை எடுப்பதாகவே முடிகிறது. ஆகவே விஞ்ஞானம் கருவில் உயிர் உண்டென்பதை ஏற்றுக் கொள்கின்றது; கருச்சிதைவு என்பது கருவின் உயிரைப் பறிப்பதாகும்; கருவின் உயிரைப் பறிப்பது ஒரு கொலையாகும்.

## அறிவியல் நோக்கில்

ஒவ்வொரு மனிதனுக்கும், பிராணிக்கும், தாவரத்துக்கும் அவற்றின் உயிரே பிரதான இயக்கும் கருவியாக உள்ளது. படைப்புகள் அனைத்திலும் ஒழுங்கு முறைகள் உண்டு. உயிருள்ள படைப்புகளுக்கும், உயிரற்ற படைப்புகளுக்கும் மனிதனே முடியாகவும், அவற்றை உபயோகிப்பவனாகவும் உள்ளான். இவை அனைத்திற்கும் மனித உயிர் இன்றியமையாதது. இவ்வுயிர் கருவில் இடம் பெற்று கருப்பையில் உள்ள காலங்களில் ஒரு இலக்கை நோக்கி வளர்கின்றது. இதன் வாழ்வில் ஒரு குறிக்கோள் உள்ளது. அது கருப்பையில் உள்ள ஒவ்வொரு வினாடியும் இந்த இலக்கை அதாவது முழு மனிதன் என்ற முடிவை நோக்கி வளர்கின்றது. இது ஆணின் விந்தும், பெண்ணின் முட்டையும் இணைந்து கருவான நிமிடத்திலிருந்து முழு மனிதன் என்ற முடிவை நோக்கி வளர்கின்றது. ஆகவே கருவானது எந்த நிலையில் சிதைக்கப்பட்டாலும் ஒரு மனிதனை அழிப்பதாகவே முடியும். ஆனால் கருவானது முழு மனிதன் இல்லையே, அது வளரும் நிலையில் உள்ளது, ஆகவே அழிக்கலாம் என்று சிலர் கூறலாம். கருவானது முழு மனிதன் என்ற நிலையை அடையாவிடினும் முழு மனிதனுக்குரிய பண்புகள் அனைத்தும் கருவில் உள்ளன. இன்னும் ''முழு மனிதன்'' என்றால் என்ன? எப்பொழுது ஒருவன் முழு மனிதனாகிறான்? ஏனெனில் மனித வாழ்வின் எந்த ஒரு நிலையிலும் மனிதன் எல்லாத் துறைகளிலும், எல்லாவற்றையும் அறிந்தவனாக இல்லை. ஆனால் அறியும் ஆற்றல் அவனுக்குண்டு. வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் வளர்கிறான். ஆகவே கருவில் தொடங்கி இறக்கும் வரையும் வளர்கிறான். இந்நிலையில் ஒரு கருவை அழிப்பது ஒரு மனிதனை அழிப்பதாகவே முடிகிறது.

மனித உயிருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது கிறீஸ்தவக் கோட்பாடுகளில் இருந்துதான் புரிந்து கொள்ளக் கூடியதொன்றல்ல. மாறாக மனித அறிவே இதற்குப் போதிய ஆதாரங்களை வழங்கும். இயற்கையிலேயே மனிதன் அறிவுள்ளவனாகவும், அவ்வறிவைப் பயன்படுத்திச் சிந்தித்துச் செயலாற்றுபவனாகவும் உள்ளான். மனிதனின்

— 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு செயலுக்கும் அவனே பொறுப்புள்ளவன். ஏனெனில் அவன் சுதந்திர மனிதன். விரும்பியதைச் செய்யும் சுதந்திரமும், அறிவும் அவனுக்கு உண்டு. ஆகவே தன்னை ஆளும் சக்தியும் வல்லமையும் அவனிடம் உண்டு.

இறைவனால் படைக்கப்பட்டதனால் அவன் ஆன்மா அழியாத் தன்மையைக் கொண்டது. இதனால் அவனது முடிவு இறைவனிலேயே நிறைவு பெற வேண்டும். இந்நிறைவைச் சமுதாயத்தில் வாழ்வதன் மூலமே மனிதன் அடைய முடியும். சமூகப் பிராணியான மனிதன் சமுதாயத்தில் இன்றியமையாத உரிமைகளைப் பெறுகிறான். இவற்றில் முதலிடம் பெறுவது உயிர் வாழ்வதற்கான உரிமை ஆகும். இவ்வுலக வாழ்வு நிலையற்றது என்பது எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் மதிப்பிட முடியாததும், அழியாததுமான ஆன்மா உண்டு. பலர் வாழும் சமுதாயத்தில் கிடைக்கப் பெறும் நன்மை எல்லோருக்கும் சார்ந்ததாக இருக்க வேண்டும். இதற்கு சமுதாயம் மனித நலன் கருதிச் செயற்பட வேண்டுமேயொழிய, சமுதாய நலன் கருதி மனித உரிமைகள் மறுக்கப்பட முடியாது. மனிதனின், சமுதாயத்தின் கடமைகள், உரிமைகள் பற்றி ஆராய்ந்து செயல்படுவது சட்டத்தின் கடமையாகும். மனிதனின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் உரிமை சமுதாயத்திற்கு இல்லை. ஏனெனில் மனித உரிமைகள் சமுதாயத்தை விட மேலோங்கி நிற்கின்றன. இவ்வுரிமைகளைப் பேணிக் காப்பது சமுதாயத்தின் தலையாய கடமை.

மனித உரிமைகள் அனைத்திற்கும் அடிப்படையானதும், முதன்மையானதும் உயிர் வாழ்வதற்கான மனித உரிமையாகும். மனிதனுக்குரிய அனைத்து உரிமைகளும் உயிரின் அடிப்படையிலேயே கருதப் படுகின்றன. உயிர் உரிமையானது பிறரது தீர்மானத்தில், அங்கீகாரத்தில் தங்கியதல்ல. ஆகவே இனத்தையோ, நிறத்தையோ, சமயத்தையோ, பருவத்தையோ அடிப்படையாகக் கொண்ட எந்தவித வேறுபாட்டையும் காட்டி உயிர் உரிமையை மறுக்க முடியாது.

இவ்வேறுபாடானது வாழ்வில் ஏற்படும் பருவங்களிலும் காட்டப்பட முடியாது என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் உயிர் உரிமை, சிறுவர்கள், முதியவர்கள், உடற்பலம் அற்றவர்கள், மாற்ற முடியாத நோய் உள்ளவர்கள் என்ற வேறுபாடு இன்றி எவரிடமும் சமமாக உள்ளது. வாழ்வின் எந்நிலையிலும் மனித உயிர், உயிராகவே மதிக்கப்பட வேண்டும். ஆணின் விந்தும் பெண்ணின் முட்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையும்போது உருவாகும் கருவிலே உயிர் தோன்றுகிறது. இவ்வுயிர் இந்நிலையில் மனித உயிராக மதிக்கப்படாவிடில், எந்நிலையிலும் மதிக்கப்பட மாட்டாது. ஏனெனில் உயிர் எப்பொழுதும் ஒன்றுதான்.

## உளவியல் நோக்கில்

உளவியலின்படி மனிதர்கள் மத்தியில் தொடர்பு ஏற்பட மற்ற வரை மனிதனுக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு மற்றையவர்க்கு மனிதன் என்ற பண்புகள் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் இத் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய உணர்ச்சிகள் ஏற்படும். மனித உருப் பெற்று உலகிற்கு வரும்போது குழந்தையை அதன் பெற்றோர் தங்க ளில் ஒருவராக ஏற்கின்றனர். இந்நிலையில் பெற்றோர் அக்குழந்தையை தங்கள் உறவின் பலனுக ஏற்றுக் கொள்கின்றனர். ஆனுல் இந்நிலை யிலும் கருச்சிதைவு செய்யும் பெற்றோரும் உண்டு. கருச்சிதைவின் பின்பு பெற்றோர் உளவியல் ரீதியாகப் பெருமளவு பாதிப்பு அடை கின்றனர் என்பது உளவியல் அறிஞர்கள் கண்ட உண்மை. செய்து கொண்ட தவறிலிருந்து அல்லது ஏற்பட்ட பிரச்சினையிலிருந்து கருச் சிதைவின் மூலம் ஒருவர் விடுபடலாம். ஆனுல் வள்ளுவர் கூற்றுப்படி உண்மையை மறைக்க முடியாது.

''தன்னுள்ளம் அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னுள்ளம் தன்னைச் சுடும்''

என்பது வள்ளுவர் கூற்று. அவன் மனச்சான்று எப்பொழுதும் அவனைக் குற்றம் கூறும். இதிலிருந்து விடுபட முடியாது. அவர் உள் ளத்தில் எப்பொழுதும் குற்ற உணர்வு இருந்து அவர்களை வாட்டும். பெரும்பாலும் பெண்களையே தாக்கும். கருச்சிதைவின் பின்பு குற்றத் தைத் தாங்க முடியாது தற்கொலை செய்வோரும் உண்டு.

## கருச்சிதைவும் சட்டமும்

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலேயே பெரும்பாலான கைத்தொழில் நாடுகளில் கருச்சிதைவுச் சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. 1912-ம் ஆண்டு மேற்கு நாடுகள் அனைத்திலும் கருச் சிதைவு சட்டத்திற்குப் புறம்பான செயலாகக் கருதப்பட்டது. இன்று பெரும்பாலான மக்கள், கருச்சிதைவு சட்டரீதியாக ஏற்றுக்கொள் ளப்பட்ட நாடுகளில் வசிக்கின்ருர்கள். டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் 1930-ம் ஆண்டு சட்டரீதியாக கருச்சிதைவு அங்கீகரிக்கப் பட்டது. ஜப்பானில் 1940-ஆண்டும் போலாந்து, செக்கோஸ்லவாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியா, ரூஷ்யா போன்ற நாடுகளில் 1950-ம் ஆண்டும், இங்கிலாந்தில் 1967-ம் ஆண்டும் கருச்சிதைவு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. இன்று இலங்கையில் பத்திரிகைகளில் கருச்சிதைவு சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென்றும் கட்டுரைகள் தோன்றுவதைக் காண்கிறோம். ஆனால் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் இங்கு காணப்படும் கலை,கலாச்சாரம், தெய்வ பயம் அனைத்தும் எறியப்பட்டு நாடு வெகுவிரைவில் இழிநிலை அடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

## திருச்சபையும் கருச்சிதைவும்

ஆதியாகமத்தில் கூறப்பட்டிருப்பது போல் உலகிலுள்ள அனைத்தும் மனிதனுக்காகவே உண்டாக்கப்பட்டுள்ளன. வேதாகமத்தின்படி இறப்பிற்குக் காரணம் பாவமே. இறைவன் இறந்தோரின் இறைவனல்ல; வாழ்வோரின் இறைவன் (மத்தேயு 22 : 32). மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான். (ஆதி 9 : 5-6) இறைவனின் கட்டளைகளில் ஒன்று ''கொலை செய்யாதே'' என்பதாகும். (யாத். 20 : 11) உயிரானது ஒரு வரமாகும். மேலும் பொறுப்பு வாய்ந்த ஒன்றாகும். திருச்சபையின் பாரம்பரியப் படிப்பினையின்படி தான் தொடங்கிய காலம் முதல் மனித உயிரைப் பேணியும் பாதுகாத்தும் வருகிறது. 'டிடக்கே' எனும் பழமைவாய்ந்த நூல் கருத்தடை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியது என்று தெளிவாகக் கூறுகின்றது. திருச்சபையின் சரித்திரத்திலே கருச்சிதைவு ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லை. 847-ம் ஆண்டு கருச்சிதைவு செய்தோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. திருச்சபையின் ஞான மேய்ப்பர்கள் இது விடயத்தில் எவ்வித இணக்கமும் காட்டவில்லை 2-ம் வத்திக்கான் சங்கம் கருச்சிதைவை வன்மையாகக் கண்டித்து எந்த வகையிலும் மனித உயிர் காக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. கருச்சிதைவு பற்றி திருச்சபையின் கோட்பாடுகள் மாற்றப்பட முடியாதவை என்று 6-ம் சின்னப்ப பாப்பரசர் தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் திருமணமும் அதன் இயல்புகளும் தம்பதிகளிடையே அன்பைப் பெருக்கவும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்குமே அமைக்கப்பட்டுள்ளன. உண்மையிலேயே குழந்தைகள் திருமணத்தின் மிகச் சிறந்த கொடையாக இருப்பதுடன் பெற்றோரின் நலனுக்கும் உறவுக்கும் பெரிதும் உதவுகின்றன. ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல'' (ஆதி 2 : 18) என்று ''தொடக்கத்திலிருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்த'' (மத். 19 : 4) இக் கடவுளே தமது படைப்புவேலையில் மனிதனுக்கு ஒரு தனிப்பட்ட பங்கு அளிக்க விரும்பி ''பலுகிப் பெருகுங்கள்'' (ஆதி 1 8) என்று கூறி ஆணையும் பெண்ணையும் ஆசிர்வதித்தார்.

மனித உயிர் அளித்து குழந்தைகளை வளர்க்கும் கடமையை மணமக்களுக்கே உரித்தான பொறுப்பாகக் கருத வேண்டும். இப் பணியை ஆற்றுகையில் தாங்கள் கடவுளின் அன்போடு ஒத்துழைப் பவர்களாய், கடவுளின் படைப்புச் செயலில் தொடர்புள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். எனவே அவர்கள் தங்கள் அலுவலை மனிதனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும், கிறீஸ்தவனுக் குரிய கடமையுடனும் நிறைவேற்றுவார்கள். கிறீஸ்தவ மணமக்கள் தங்கள் விருப்பப்படி செய்ய முடியாது; ஆனால் இறைச்சட்டத்திற்குச் சரியாக ஒத்திருக்கும் நற்சான்றினால் எப்பொழுதும் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணர்வார்கள். கிறீஸ்தவ மணமக்கள் மனிதனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும் கிறீஸ்தவனுக்குரிய கட மையுடனும் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பணியை நிறைவேற்றும் பொழுது தங்கள் நிறைவை கிறீஸ்துவில் அடைய முயல்வதோடு படைத்தவரையும் மாட்சிமைப்படுத்துகின்றார்கள்.

இருப்பினும் திருமணம் பிள்ளைப் பேற்றிற்காக மட்டும் ஏற் படுத்தப்பட்டதல்ல. ஆனால் இருவரிடையே உள்ள பிரிக்கமுடியாத இயல்புகொண்ட ஒப்பந்தத்தின்படியும் குழந்தைகளின் நலனுக்காக வும் மணமக்கள் ஒருவர் ஒருவருக்கு சரியான முறையில் அன்புகாட்ட வேண்டும். கணவனும் மனைவியும் பொறுப்பு வாய்ந்த பெற்றோராய்ப் பணிபுரிய வேண்டுமென்று திருமண அன்பு வலியுறுத்துகிறது. கிறீஸ் தவ தம்பதிகள் திருமண மேன்மையையும் கடமைகளையும் அறிந்த வர்களாய் அவற்றின் தேவைக்கேற்ப தங்கள் வாழ்க்கையை அமைத் துக் கொள்ள வேண்டும்.

உசாத் துணைகள்

2-ம் வத்திக்கான் சங்க ஏடு: ''இன்றைய உலகில் திருச்சபை''

6-ம் சின்னப்ப பாப்பரசரின் சுற்றுமடல்: "Humanae Vitae"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் சாவானபாவம் செய்ய முடியுமா ?

## ஜான்பியாஜேயின் உளவியல் அடிப்படையில் ஒரு ஆய்வு

யோ. கார்டோசா, அ. ம. தி.

## முகவுரை

### 1-0 ஆய்வு நோக்கு

'குழந்தைகள் சாவான பாவம் செய்ய முடியுமா?' எனும் கேள்வி, பரவலான கருத்து வேறுபாடுகளை விடையாகக் கொணரும் ஒன்றாகும். 'ஒழுக்க இறையியலில்' இக் கேள்வி முற்றிலும் புதிதாக இருந்த போதிலும், பலர் இதற்கு ''ஆம்'' என்றும், மற்றும் பலர் ''இல்லை'' என்றும் பதிலிறுக்கத்தான் செய்கிறார்கள். எனவே சரியான, முறையான பதில் இன்றும் வரையறுக்கப்படவில்லை. அது மாத்திமல்ல; மறு உறவாக்கல், பாவமன்னிப்பு ஆகியவற்றோடு கூட இப்பிரச்சினை தொடர்புள்ளது என்று கூறலாம். திவ்விய நற்கருணை பெறுவதற்கு முன், முதல் பாவ ஒப்புதலுக்குக் கூட முக்கியத்துவம் கொடுக்காது, சிறுவர்களை நேரே முதல் நற்கருணை எடுக்க பலிபீடம் அனுப்புவோரும் உண்டு. காரணம் ஒழுக்க இறையியலாளர்களில் சிலர் சிறுவர்கள் சாவான பாவம் செய்ய முடியாது என்ற கருத்தை உடையவர்களாக உள்ளார்கள்.

அநேக உளவியலாளர்கள், குறிப்பாக கெசெல், கோல்பெக், பியாஜே போன்றோர் சிறுவர்களின் ஒழுக்க வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியில் பல ஆண்டுகளைச் செலவிட்டுள்ளார்கள். இங்கு தர்க்கத்திற்கு எடுக்கப்பட்டுள்ள, ''சிறுவர்கள் சாவான பாவம் செய்ய முடியுமா?'' என்ற கேள்விக்குப் புகழ் பெற்ற சுவிற்சர்லாந்து நாட்டு உளவியலாளர் ஜான் பியாஜேயினுடைய பரிசோதனை முறைகளை அடிப்படையாகக் கொண்டு, குழந்தைகள் சாவான பாவம் செய்ய இயலாதவர்கள் என்ற அறுதியான, இறுதியான ஒரு நிலையைக் கூற விரும்புகிறேன். இக்கூற்றை உறுதிப்படுத்த பியாஜேயினுடைய சொந்தப் பரிசோதனை முறைகளும், அவருடைய கதைகளுமே எமது சிறார்களிடமும் பெரிதும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. இதன் விபரத்தை 1.3; 1.4 பகுதிகளில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1-1 உபயோகப்படும் சொற்கள்

எமது கவனத்தை ஒரு முகப்படுத்த, எமது விளங்கிக் கொள்ளும் தன்மையை இலகுவாக்க, நான் விளங்கப்படுத்த வேண்டிய இரண்டு முக்கிய சொற்கள் 'சாவான பாவம்', 'குழந்தைகள்' ஆகியனவாகும்.

'சாவான பாவம்' என்பது சாதாரணமானதொன்றல்ல என நம்மால் விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது. சாவான பாவமானது, நமது அயலவனோடு உள்ள தொடர்பை முறிக்க, நம் மனசாட்சிக்கு எதிரானதைச் செய்ய உடன்படும் மன நிலையினால் இறைவனோடு கொண்ட தொடர்பை முறிப்பதாகும். இது ஒரு பாரதூரமான பிளவாகும். இதை இறைவனில் கொள்ளும் சாதாரண வெறுப்பாகக் கொள்ள முடியாது. ஆனால் அன்புக்கும், நல் வளர்ச்சிக்கும் மிக முக்கியமான ஒரு தொடர்பை ஏற்க மறுப்பதாகும். அதிகார, அல்லது ஆட் கொள்ளப்பட்ட மனச்சான்றிலிருந்து, (Authoritarian Conscience) சொந்த மனச்சான்றாக (Personal Conscience) எப்பொழுது ஒருவனது உளச்சான்று வளர்ச்சி யடைகிறதோ அப்பொழுது தான் சாவான பாவம் இயலுமான தாகிறது. இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால், சாவான பாவமானது இறைவனோடு ஒருவன் இறுதியில் சங்கமிக்க வேண்டிய, முற்றாகத் தன்னை அர்ப்பணிக்க வேண் டிய ஒரு முயற்சியிலிருந்து, வேண்டுமென்று மனமொத்து தன்னை முறிப்பதாகும். மரபு வழி வந்த கோட்பாடுகளின் படி, சாவான பாவம் முழு அறிவையும், முழுச் சம்மதத்தை யும் முக்கிய அம்சங்களாகக் கொண்டதாகும், முழு அறிவு என்பது, போதுமான அளவு உணர்ந்திருத்தல் அல்லது ஏற் றத் தாழ்வுகளை கிரகித்து அறிந்திருத்தலாகும். மேலும் இது ஒரு செய்கையின் பளு பற்றிய மேலெழுந்த வாரியான அநு மான அறிவு அல்ல. ''முழுச் சம்மதம்'' என்பது, அவன் அந்த செய்கையை தவிர்த்திருக்கலாம்; அந்தச் செய்கை யிலிருந்து தன்னை விடுவிப்பதற்கு அவன் முழுமையான உளச் சுதந்திரத்தைக் கொண்டுள்ளான்; இருந்தும், வேண்டுமென்று அக்காரியத்தை செயல்படுத்த விரும்பித் தெரிந்தான் என்ப தாகும். பாரதூரமான செயல்கள் வெறுமனே, மேலெழுந்த வாரியாகக் கருதப்படலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குழந்தைகள்' என இங்கே குறிப்பிடுவது ஆறு வயதுக்கும் ஒன்பது வயதுக்கும் இடையிலுள்ள இலங்கைப் பிள்ளைகளையே.

இவர்கள் சாவான பாவம் செய்யச் சாத்தியமுண்டா? என்பதுதான் எமது கேள்வி.

## 1-2 'குழந்தை, சாவான பாவம்' என்றால் நாம் பொதுவாக விளங்கிக் கொள்வது:

திருச்சபையின் ட்ரென்ட் பொதுச் சங்கத்தின் பின் சாவான பாவமானது பலவாறு அதிகரிக்கப் பட்டுள்ளது. சாவான பாவமானது, சரியாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டுமாயின், அடிப்படையில் சரியான ஒரு தெரிவிலிருந்து பாரதூரமாக மாறுபடுவதாகும். எனவே இது ஒரு கிறீஸ்தவனின் சாதாரண வாழ்க்கையில் பொதுவாக நடைபெறும் காரியம் இல்லை. ஒழுக்க இறையியலாளர்களின் பொதுவான அபிப்பிராயம் என்னவெனில் 10 வயது வரையுள்ளகுழந்தைகள் சாவான பாவம் செய்ய சாத்தியமில்லை; ஏனெனில் சாவான பாவம் செய்ய அவசியமான ஒரு செயலின் பளுவைச் சீர் தூக்கிப் பார்க்கும் அறிவும், அத்துடன் அடிப்படைத் தெரிவைத் தீர்மானிக்கத் தேவையான சொந்த உடைமைகளும் அவர்கள் வசம் இல்லை என்பதாதயாகும்.

மேலும் சாவான பாவமானது, இறைவனோடு சங்கமிப்பதிலிருந்து, அவரிடம் தன்னை அர்ப்பணிப்பதிலிருந்து வேண்டுமென்று விலகிச் செல்வதுதான் என்றால் முதிர்ச்சியடையாத ஒரு குழந்தையானது இறைவனோடு இறுதியில் சங்கமிப்பதை தீர்மானிக்கவும் முடியாது. அவரிடமிருந்து விலகிச் செல்லவும் முடியாது. ஒழுக்க மனச்சான்றின் விழிப்பை அதாவது சாவான பாவத்தைச் செய்யக்கூடிய தன்மையை, ஒரு குழந்தையானது நல்ல செயல்களைச் செய்ய அனுமத்திது, கூடாத செயல்களை அமுக்கிவிட, நிராகரித்துவிடச் சொல்லும் வளர்ச்சியை அடையும்போது பெற்றுவிட்டது எனலாம். இவ்வளர்ச்சியினை அடையும்போது குழந்தையானது சிந்திக்கும் தன்மையையும், தானாகத் தீர்மானிக்கும் தன்மையையும் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றது. புனித தோமஸ் அக்குயினசும் இதைத்தான் வலியுறுத்துகிறார். ஒருவன் இளம் பிராயத்தை அடையும்போதுதான் அவன் தன்னைப்பற்றிச் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையை அடைகின்றான் எனலாம். அவன் முதிர்ச்சி அடையுமுன் காரணம் காண்பிக்கும் தன்மையில் பூரண வளர்ச்சி அடைவதில்லை.

## 1-3 பியாஜேயினுடைய பரிசோதனை முறைகள் :

உளவியலாளர்கள் கெசெல், கோல்பெக், பியாஜே ஆகியோர் சிறுவர்களின் ஒழுக்க வளர்ச்சிபற்றிய ஆராய்ச்சியில் பல ஆண்டுகளைச் செலவிட்டுள்ளபோதிலும், இங்கு எடுக்கப்பட்டுள்ளது பியாஜேனுடைய சொந்தப் பரிசோதனை முறைகளும், அவருடைய கதைகளும் மாத்திரமே. இவைகளை நாங்கள் எமது பரிசோதனைகளுக்குப் பிரயோகித்தபோதிலும் இவைகளை அடிப்படையில் ஒத்த வேறு பரிசோதனைகளும் எம்மால் நடாத்தப்பட்டன. இப்பரிசோதனைகளில் எமது சிறுவர்களின் புழக்கத்திலிருக்கும் விளையாட்டுக்கள், மற்றும் சூழலுக்கேற்ற கதைத் தொகுப்புக்களையே நாங்கள் உபயோகித்தோம். ஆனால் வாசகர்கள் இம்மாதிரியான ஒரு ஆய்வை நடாத்த விரும்பின், அவர்கள் எடுத்துக் கொள்ளும் பரிசோதனை முறைகள் தம் அடிப்படையில் வேறுபட்டுக்கொண்டே போகலாம் என்பதனாலேயே இங்கு பியாஜேயினுடைய பரிசோதனை முறைகளை மாத்திரம் தந்திருக்கின்றோம்.

## 1-4 அம்பிட்டியில் ஆய்வு :

அம்பிட்டிச் சுற்றாடலிலுள்ள பல சிறுவர் சிறுமியர் சாதிமத பேதமின்றி தம் படிப்பிற்காகவும், ஒழுக்கப் பண்புகளுக்காகவும் வாரம் தவறாது அமலமரி வளாகத்திற்கு வருபவர்களாவர். இவர்களில் ஆறிலிருந்து ஒன்பது வயதுக்குட்பட்டோரே இப்பரிசோதனை முறைகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பியாஜேயினுடைய பல பரிசோதனை முறைகளில் இங்கு நாம் எடுத்துக்கொண்டது மூன்று வகையானவை. பியாஜே பெற்ற முடிவுகளும் எமது பரிசோதனைகளில் எமக்குக் கிடைத்த முடிவுகளும் பெரும்பாலும் ஒத்தமைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பியாஜேயினுடைய பரிசோதனைகள்

## 2-0 மூன்று வகைப் பரிசோதனைகள் :

பியாஜேயினுடைய பரிசோதனைகளில் மூன்றுவகையானவை இங்கு எமது முடிவை நிரூபிக்கக் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன....அவையாவன

1) சாடிப்பரிசோதனைகள்

2) விளையாட்டுக் கோட்பாடுகள்

3) கதைகள் கூறுதல்

இப்பரிசோதனைகள் குழந்தைகளின் மனோ நிலையையும், விளங்கிக்கொள்ளும் தன்மையையும் அறிந்துகொள்ளப் பாவிக்கப்பட்டன.

## 2-1 சாடிப் பரிசோதனை:

இப்பரிசோதனைக்கு இரண்டு சாடிகள் அவசியம். ஒரு சாடியில் தண்ணீர் பாதியும், குறிப்பிட்ட அளவு முத்துக்களும் உண்டு. இரண்டு சாடிகளில் ஒன்று ஒடுங்கியது. ஆனால் நீளமானது. மற்றது அகலமானது. இரண்டிற்குள்ளும் தண்ணீர் ஊற்றப்பட்டது. முத்துக்கள் அகலமான சாடியில் முதலில் போடப்பட்டன.

முத்துக்கள் உள்ள சாடியை குழந்தைகள் நன்ருக அவதானிக்கப் போதுமான அளவு நேரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இதே முத்துக்கள் அத்தனையும் ஏற்கனவே தண்ணீர் ஊற்றிவைக்கப்பட்டிருந்த ஒடுங்கிய சாடிக்கு மாற்றப்பட்டன.

பின் குழந்தைகளின் புலன் உணர்வை அறிய பின்வரும் கேள்விகள் கேட்கப்பட்டன.

**கேள்வி:** ஒடுங்கிய சாடியினுள் அதிகமான முத்துக்களா அல்லது குறைவானவைகளா உள்ளன?

**பதில்:** அகலமான சாடியைவிட ஒடுங்கிய சாடி அதிகமான முத்துக்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரிசோதனை குழந்தையினுடைய புலன் உணர்வில் காணப்படும் சலனத்தை (Fickleness) புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. இன்னும் கூறப்போனால் பியாஜே குழந்தைகளின் தீர்ப்புக்களிலிருந்து சில கண்டுபிடிப்புக்களைக் கொண்டு வருகிறார். அதாவது குழந்தையினுடைய உண்மையான தீர்மானமானது எந்த அளவுக்கு வலுவற்றுள்ளது, எந்த அளவுக்கு உண்மையானது என்பதைக் காண்பிக்கிறார்.

## 2-2 விளையாட்டுக் கோட்பாடுகள்:

வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்ட கோலி (Marble) விளையாட்டுக்களில், பியாஜே அவை இடத்திற்கு இடம் வெவ்வேறு விதமாக விளையாடப்படுவதையும் அவதானித்தார். ஆயினும் விளையாட்டு முறையில் ஒருவித ''ஒற்றுமையையும், வேற்றுமை''யையும் கண்டார். இவ்விளையாட்டு சிறுவர் அல்லது சிறுமியர் அல்லது இருசாராரும் பங்குபற்றுவதாகும். இடத்திற்கு இடம் கோலி விளையாட்டு மாறுபடுவதின் காரணம், இடத்திற்கு இடம் இதன் மரபுநிலை மாற்றப்பட்டு புதிய சந்ததியினருக்குக் கொடுக்கப்பட்டு வருவதாகும். இதே போன்று ஒழுக்க விதிமுறைகளையும் குழந்தைகள் தம் பெற்றோரிடமிருந்தே கற்கிறார்கள். பெரியோர் அவைகளை விரிவுபடுத்திய பின்பு, குழந்தைகளுக்கும், கோட்பாடுகளுக்குமிடையில் இருக்கவேண்டிய தொடர்பினையும் கவனத்திற் கொள்ளாது, முந்திய நிலைமுறையினருடைய கோட்பாடுகளை மாற்றம் ஏதும் செய்யாது அப்படியே குழந்தைகளுக்குக் கொடுத்ததும், அவர்களும் அதை மதிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

மற்றவர்களுடைய கோட்பாடுகளைக் குழந்தைகள் செயலில் ஈடுபடுத்திடும் நாளிலிருந்து அக்குழந்தைகள் எவ்வளவு தான் சுயநலத்தையுடையவர்களாக இருப்பினும், விளையாட்டுக் கோட்பாடுகள் மாறும்தன்மையற்றவை, புனிதமானவை எனக் கணிக்கத் தொடங்கி விடுகின்றனர். அந்த விதிமுறைகளை மாற்றியமைக்கப் பொது அபிப்பிராயம் சம்மதம் கொடுத்தாலும் மாற்றியமைக்க மறுக்கின்றனர். அவ்வாறு மாற்றியமைப்பது பிழையானது என்று எண்ணுகின்றனர். குழந்தைகள் விதிமுறைகளை மிகவும் நேர்மையான ஒன்றாகக் கருதுகின்றனர் என்பதை இது காண்பிக்கிறது. விதிமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்பவை என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

விதிமுறைகளுக்கு குழந்தைகள் கொடுக்கும் உயரிய மதிப்பை பியாஜே பல்வேறு பேட்டிகளின் மூலம் காண்பித்துள்ளார். அதே அடிப்படையில் பகுதி 3.2ல் தரப்படும் பேட்டி அமைந்ததுடன் விதிமுறைகள் பற்றி சிறுவர்கள் கொண்டுள்ள மனநிலையும் அவர்கள் மூலம் அப்படியே வெளிப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 2-3 கதைகள் கூறுதல்:

குழந்தைகளுடைய தீர்மானிக்கும் திறனைச் சீர்தூக்கிப் பார்க்க பியாஜே சில கதைகளை உபயோகிக்க வேண்டியிருந்தது. இம்முயற்சியில் ஒரு குழந்தைகள் கூட்டத்திற்குச் சில கதைகள் கூறிப் பின்பு அவர்கள் விவேகத்தை அறிய சில கேள்விகள் கேட்கப்பட்டன. பியாஜேயினுடைய அநேகமான கதைத்தொகுப்புகளில் இங்கு மூன்றைத் தருகிறோம்.

கதைத் தொகுப்பு 1: ''கோப்பைகளை உடைத்தல்''

அ) தனது அறையில் படித்துக் கொண்டிருந்த ரவியை அவனது தாய் உணவருந்த அழைத்தாள். சாப்பாட்டு அறையை நோக்கி வந்த ரவி, அந்த அறைக்கதவின் பின்னல் இருந்த நாற்காலியையும், அந்த நாற்காலியின் மேல் 15 கோப்பைகளைக் கொண்ட ஒரு தட்டு இருந்ததையும் கவனிக்கவில்லை. அவன் சாப்பாட்டு அறையினுள் நுழைந்தபோது கதவு நாற்காலியில் மோதி தட்டைச் சரித்து விட்டதனல் 15 கோப்பைகளும் விழுந்து உடைந்தன.

ஆ) குமார் என்ற சிறுவன், ஒரு நாள் அவனுடைய தாய் வெளியே சென்றிருந்தபோது, அலுமாரியிலிருந்த இனிப்பை எடுக்க முயற்சித்தான். நாற்காலி ஒன்றின் மேல் ஏறி கைகளை இனிப்பை நோக்கி நீட்டினன். ஆனல் இனிப்பு அதிக உயரத்திலிருந்ததால் அவனுக்கு அது எட்டாமல், ஒன்றையும் சுவைக்க முடியவில்லை. தொடர்ந்து அதை எடுக்க முயற்சித்தபோது அலுமாரியிலிருந்த ஒரு கோப்பை தட்டி விழுந்து உடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்தொகுப்பு 2: ''மைக்கறை''

அ) சந்திரன் என்ற சிறுவனொருவன் ஒருமுறை அவனது தந்தை வெளியே சென்றிருந்தபோது, அவருடைய மைக்குப்பியை எடுத்து விளையாட முனைந்தான். முதலில் அவன் பேனையை எடுத்து விளையாடினான். அதன் விளைவு மேசைத்துணியில் ஒரு சிறு மைக்கறைபடிந்தது.

ஆ) மோகன் என்ற சிறுவனொருவன் ஒரு முறை தனது தந்தையினுடைய மைக்குப்பி வெறுமையாய் இருப்பதை யவதானித்தான். வெளியே சென்றிருந்த அவனுடைய தந்தை திரும்பி இல்லம் வந்ததும், மைக்குப்பி நிரம்பி இருப்பதைக் காணவேண்டும் என அவருக்குத் தான் உதவி செய்வதாக நினைத்து, குப்பியைக் கையிலெடுத்தான். ஆனால் மைக்குப்பியைத் திறந்தபோது மேசைத்துணியில் பெரியதொரு மைக்கறை படிந்தது.

கதைத்தொகுப்பு 3 : ''அல்வாவையும், நாடாவையும்'' களவெடுத்தல்.

அ) நிரஞ்சன் மிகவும் வறுமையில் வாடும் அவனுடைய நண்பன் ஒருவனைச் சந்தித்தான். வீட்டில் ஏதும் இல்லாததால் அன்றுதான் ஏதும் சாப்பிடவில்லை என்று நிரஞ்சனுக்கு அந்த நண்பன் கூறினான். தன்வசம் காசு ஏதும் இல்லாத நிரஞ்சன் ஒரு அல்வா கடைக்குச் சென்று, வியாபாரி மறுபக்கம் திரும்பும்வரை காத்திருந்து அல்வா ஒன்றைத் திருடினான். அதை ஓடி வந்து தன் நண்பனுக்குக் கொடுத்தான்.

ஆ) லாவண்யா ஒரு கடைக்குள் நுழைந்தாள். அங்கு மேசைமேல் நல்ல அழகான நாடாவைக் காணும் அவள் அது தன் உடுப்புக்கு எடுப்பாக இருக்கும் என்று நினைத்து கடைக்காரன் மறுபக்கம் திரும்பும்போது அந்த நாடாவைத் திருடி ஒரே ஓட்டமாக ஓடிவிடுகிறாள்.

பியாஜே இக்கதைகளைக் கூறியபின் குழந்தைகளைக்கேள்வி கேட்டதில் ஒத்த வயதையுடைய குழந்தைகளின் தீர்மானங்கள் ஒரேமாதிரி இருப்பதை அல்லது அநேகமான குழந்தைகளின் தீர்மானங்கள் ஒத்ததாக இருப்பதைக் கண்டார். குழந்தைகளுக்கே உரிய பாணியில் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்கள் இருந்தன. அதாவது மேற்குறித்த கதைகளில் வரும் செய்கைகளுக்கான அடிப்படை நோக்கத்தை அவர்கள் கணக்கெடுக்கவில்லை. அவர்களுடைய தீர்மானங்கள் கோப்பைகளின் எண்ணிக்கையிலும், மைக்கறையின் அளவிலுமே ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தன.

## 3 அம்பிட்டிப் பரிசோதனை பற்றிய மதிப்பீடு

### 3-0 பரிசோதனை வழிமுறைகள் :

இலங்கைச் சிறுவர்களைப் பொறுத்தமட்டில் பியாஜேயினுடைய பரிசோதனை வகிக்கும் நிலை யாது என அறிய பியாஜே உபயோகித்த பரிசோதனை முறைகள் எமது நாட்டுப் புழக்கத்திற்கு, சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு மதிப்பீடுகள் எடுக்கப்பட்டன. சிறுவர் சிறுமியர் மொத்தம் 30 பேர் இதில் பங்குபற்றினர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | வயது | சிறுவர்கள் | 5 பேர் |
| 7 | வயது | சிறுவர்கள் | 5 பேர் |
| 8 | வயது | சிறுவர்கள் | 18 பேர் |
| 9 | வயது | சிறுவர்கள் | 2 பேர் |

### 3-1 சாடிப்பரிசோதனை மதிப்பீடு :

இப்பரிசோதனை விபரம் ஏற்கனவே பகுதி 2.1ல் காணக்கிடக்கின்றது. இதையொத்த பரிசோதனையாக ஒரே நிறையையுடைய இரும்பையும், பஞ்சையும் சிறுவர்களுக்குக் காண்பித்து இவற்றில் எது நிறை கூடியது எனக் கேட்டபோது 'பஞ்சு' என பதில் பெறப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

### பரிசோதனை முடிவு

குழந்தைகளின் தீர்மானிப்பிலிருந்து அவர்கள் சாடியினுடைய அளவைக் கவனத்திற் கொள்ளவில்லை என்பது புலனாகிறது. ஒடுங்கிய சாடியின் தோற்றமானது ஏதோ அதிகமுத்துக்களைக் கொண்டதுபோல் தோற்றமளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே மிகமுக்கியமான ஒரு குறிப்பைக் கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது. குழந்தைகளுடைய தீர்மானங்களில் பிழை இருக்கச் சாத்தியமுண்டு. குழந்தைகள் சரியான தீர்மானத்திற்கு வருவது இலகுவல்ல என நிரூபணமாகின்றது. அவர்களுடைய முடிவுகள் மேலெழுந்தவாரியான புலன் உணர்வுகளில் மாத்திரமே தங்கியுள்ளன. அவர்கள் ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தீர்மானிப்பவர்கள். முழுமையான, தன்னிலேயே உண்மையான ஒன்றை அவதானிக்க இயலாதவர்கள். ஏனெனில் அவர்களுடைய புலன் உணர்வுத்திறன் குறைவானது.

இது மற்றொரு கேள்விக்கு வித்திடுகிறது. அதாவது சாவான பாவத்தைச் செய்வதற்கு அத்தியாவசியமான முழு அறிவை ஒரு குழந்தையானது பெறமுடியுமா?

## 3-2 விளையாட்டுக் கோட்பாடுகள் பற்றிய பேட்டி மதிப்பீடு

கோலி விளையாட்டு மாத்திரமல்ல, நிலத்தில் கோடிட்டு 'நொண்டி' (கெந்தி) விளையாடுதலையும் எமது பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டோம். விளையாட்டுக் கோட்பாடுகள் பற்றி சிறுவர்கள் கொண்டுள்ள மனநிலையை இப்பேட்டி எடுத்துக் காட்டுகிறது. சிறுவனின் பெயர் சேகர்; வயது 7

**கேள்வி:** மாபிள் விளையாட்டில் நீ கடைப்பிடிக்க வேண்டியது, கடைப்பிடிக்கக் கூடாதது என ஏதும் வரையறுக்கப்பட்டுள்ளதா?

**பதில்:** ஆம். நான் கடைப்பிடிக்க வேண்டியது இவ்விளையாட்டின் விதிமுறைகளையாகும்.

**கேள்வி:** புதியதொரு விதியை நீ கண்டுபிடிக்க முடியுமா? அதாவது மூன்றாவதாக விளையாடவேண்டியவன் இரண்டாவதாக விளையாட முடியுமா?

**பதில்;** முடியாது.

**கேள்வி:** இவ்விதி நடுநிலையானதா?

**பதில்:** ஆம். நடுநிலையானதே.

**கேள்வி:** எல்லோருமே மாற்றி விளையாடினால் இந்த விதி நடுநிலையற்றதாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: இல்லை, ஏனெனில் இந்த விளையாட்டு அப்படி மாற்றி விளையாடப்படுவதில்லை.

கேள்வி: எப்படி விதிகள் ஆரம்பமாகின்றன? நீ எப்படி இவ்விளையாட்டு விதிமுறைகளை அறிந்தாய்?

பதில்; முதல்முறை கற்று அறிந்தேன். ஒரு சிறுமியோடு விளையாடினேம். அவள்தான் எமக்கு இவ்விதிக ளைக் கூறினாள்.

கேள்வி; அந்தச் சிறுமி இவைகளை அறிந்திருந்தாளா?

பதில்; அவள் கற்றிருந்தாள்.

கேள்வி: யார் விதிமுறைகளை வகுத்தது? பெரியோர்களா? அல்லது சிறுவர்களா?

பதில்: பெரியோர்கள்.

கேள்வி: ஒரு சிறுவன் புதியதொரு விதிமுறையை இட்டால் அது சரியா?

பதில்: இல்லை, சரியல்ல.

கேள்வி: ஏன் சரியல்ல?

பதில்: ஏனெனில் அவர்களுக்கு எப்படி விதிமுறைகளை வகுப்பது என்று தெரியாது.

மேற்குறிப்பிட்ட பேட்டியிலிருந்து பின்வரும் முடிவுகளை நாம் காணக்கூடியதாயுள்ளது.

அ) முதியோர் அல்லது வளர்ந்த சிறுவர்கள்; குழந் தைகளுக்கும் மேலாக முழுமையான அதிகாரம் உடையவர்கள்.

ஆ) அதிகாரிகள், பெரியவர்கள் ஆகியோரின் கருத்துக் களை, விருப்பங்களை குழந்தைகள் அப்படியே தங் களை அறியாமலேயே ஏற்றுக்கொள்கின்றனர்.

இ) விதிமுறைகளைப் பிரயோகிப்பதால் சிறுவர்கள் தங் களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொள்கி ருர்கள். அல்லது திருப்திப்படுத்திக் கொள்கிருர் கள்.

ஈ) ஒரு சிறுவனுனவன் மற்றவர்களின் விதிமுறைக ளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்ததும், பின்பு அவன் அதை மாற்ற முடியாத மிகவும் புனிதமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குரிய ஒன்ருகக் கருதுகிருன். பெரியவர்கள் அவ்விதிமுறைகள் பிழையானது என்று ஒரு பொது அபிப்பிராயத்தை வெளியிட்டாலும் அதில் ஏதும் மாற்றங்களை ஏற்படுத்த அவன் மறுக்கிருன்.

எனவே சிறுவர்களைப் பொறுத்தமட்டில் எந்தச் செயலாயினும் விதிமுறைகளுக்கு அமைய; அல்லது பெரியோர்கள் எதைக் கட்டளை இட்டபோதிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிய அமையுமாயின், அவைகள் நல்லவையாகும். அதேபோல் எந்த ஒரு செயலும் விதிமுறைகளுக்கு ஒவ்வாததாயின் அவை கூடாததாகும். எனவே ஒரு விதியானது குழந்தைகளைப் பொறுத்தவரையில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட அல்லது புத்தியால் தீர்மானிக்கப்பட்ட, எடுத்தியம்பப்பட்ட ஒன்றல்ல, மாருக அவை ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்ட புத்திக்கு அப்பாற்பட்ட ஒன்ருகும்.

இவை ஒரு குழந்தையின் சீர்தூக்கிப் பார்க்கும் திறமையில் வளர்ச்சியின் அளவை அந்தத் தீர்மானிப்பில் காணப்படும் ஒரு நிலையின் அளவை எடுத்துக் காட்டுகின்றது. இந்த அவதானத்திலிருந்து பின்வரும் கேள்வி எழலாம்.

சாவான பாவத்தைச் செய்வதற்கு இன்றியமையாத முழு அறிவு, முழுச்சம்மதம் தீவிரமான ஒரு காரியத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் முழுத்திறமை ஆகியவற்றை ஒரு குழந்தை எப்படிக் கொண்டிருக்க முடியும்?

மேற்குறிப்பிட்ட பேட்டியில் குழந்தையானது எடுக்கும் தீர்மானத்தில் தன்னைத்தானே ஈடுபடுத்தாததை (Void of Self) காணக்கூடியதாயிருக்கிறது. அதாவது அக் குழந்தைக்கு எந்த ஒன்றும் மரபு வழிவந்ததாக இருப்பின் அது சரியாகும். இது குழந்தையானது நடுநிலையான இயற்கையாகச் சிந்திக்கும் நிலைக்கு வரவில்லை என்பதைக் காண்பிக்கிறது. குழந்தையினுடைய நெறி உளச்சான்று (Moral Concience) விழித்தெழவில்லை என்பதைக் காண்பிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3-3 கதைகள் கூறி மதிப்பீடு :

கதைத் தொகுப்புக்கள் 'கோப்பைகளை உடைத்தல்', 'மைக்கறை'; 'அல்வாவையும், நாடாவையும் களவெடுத்தல்' ஆகியன குழந்தைகளுக்குக் கூறப்பட்டன. இதே அடிப்படையில் எமது சுற்றுடலுக்கு அமைய வெவ்வேறு கதைத் தொகுப்புக்களும் கூறப்பட்டன. இக்கதைத் தொகுப்புக்கள் கூறப்பட்டபின் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டோம். உதாரணமாக;

கேள்வி: கதை உனக்கு விளங்கியதா?

பதில்: ஆம்

கேள்வி: முதல் சிறுவன் என்ன செய்தான்?

பதில்: அவன் 15 கோப்பைகளை உடைத்தான்.

கேள்வி: இரண்டாவது சிறுவன்?

பதில்: அவன் ஒரு கோப்பையை உடைத்தான்.

கேள்வி: அச்சிறுவர்களில் ஒருவன் மற்றவனைவிட புரளி கூடியவனா?

பதில்: ஆம், முதல் சிறுவன் அப்படிப்பட்டவன்.

கேள்வி: அவர்களை நீ தண்டிப்பாயாயின் யாரை நீ அதிகம் தண்டிப்பாய்?

பதில்: 15 கோப்பைகளை உடைத்தவனையே அதிகம் தண்டிப்பேன்.

கேள்வி: கோப்பைகளை உடைப்பது பிழையென யார் கூறியது?

பதில்: அம்மாவும் அண்ணனும் கூறினார்கள்.

இப்படியாகப் பின்வரும் மதிப்பீடு வெளியாகியது.

(1) அ) ஒரு கோப்பையை உடைத்தவனுக்கு அதிக தண்டனை

ஏழு வயது சிறுவன் ஒருவன்
எட்டு வயது சிறுவன் ஒருவன்

2பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. 15 கோப்பைகளை உடைத்தவனுக்கு அதிக தண்டனை.

| | | |
|---|---|---|
| எட்டு வயது சிறுவர்கள் | 16 | பேர் |
| ஏழு வயது சிறுவர்கள் | 4 | பேர் |
| ஒன்பது வயது சிறுவன் | ஒருவன் | |
| ஆறு வயது சிறுவர்கள் | 6 | பேர் |
| | 26 | பேர் |

இ) இருவரும் தண்டிக்கப்பட வேண்டும்

| | |
|---|---|
| ஒன்பது வயது சிறுவன் | ஒருவன் |
| எட்டு வயது சிறுவன் | ஒருவன் |
| | 2 பேர் |

(2) மேசைத்துணியில் கறை விழுந்த கதையிலிருந்து மதிப்பீடு.

அ) மேசைத்துணியில் பெரிய கறையை உண்டாக்கிய சிறுவனுக்கு அதிக தண்டனை கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| எட்டு வயது சிறுவர்கள் | 14 | பேர் |
| ஏழு வயது சிறுவர்கள் | 3 | பேர் |
| ஆறு வயது சிறுவர்கள் | 5 | பேர் |
| | 22 | பேர் |

ஆ) சிறிய கறையை உண்டாக்கிய சிறுவனுக்கு அதிக தண்டனை கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஏழு வயது சிறுவர்கள் | 2 | பேர் |
| எட்டு வயது சிறுவர்கள் | 2 | பேர் |
| ஒன்பது வயது சிறுவன் | ஒருவன் | |
| | 5 | பேர் |

இ) இருவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| எட்டு வயது சிறுவர்கள் | 2 | பேர் |
| ஒன்பது வயது சிறுவன் | ஒருவன் | |
| | 3 | பேர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சிறுவன் அல்வாவையும், சிறுமி நாடாவையும் களவெடுத்த கதைக்குக் கிடைத்த மதிப்பீடு.

அ) அல்வாவை எடுத்தது பிழை

| | | |
|---|---|---|
| ஏழு வயது சிறுவர்கள் | 2 | பேர் |
| எட்டு வயது சிறுவர்கள் | 13 | பேர் |
| ஆறு வயது சிறுவர்கள் | 5 | பேர் |
| | 20 | பேர் |

ஆ) நாடாவை எடுத்தது பிழை

| | | |
|---|---|---|
| ஏழு வயது சிறுவர்கள் | 3 | பேர் |
| எட்டு வயது சிறுவர்கள் | 5 | பேர் |
| ஒன்பது வயது சிறுவர்கள் | 2 | பேர் |
| | 10 | பேர் |

இ) சிறுவனும் சிறுமியும் செய்தது பிழை
யாருமில்லை.

## பரிசோதனை முடிவு

கோப்பைகள் உடையும் கதையில் மேலெழுந்தவாரியாக அதிகமான கோப்பைகளை உடைத்த சிறுவனின் உள்நோக்கம், கோப்பைகளை உடைப்பது அல்ல. அம்மாவுடைய அழைப்புக்குப் பதிலிறுப்பதாகும். அச்சிறுவனின் நோக்கம் அம்மாவுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிவது. ஆனால் தற்செயலாகக் கோப்பைகள் உடைந்தன.

மைக்கறை கதையில் கூட, பெரிய கறையை உண்டாக்கிய சிறுவன், மைக்குப்பியை நிரப்பும் நல்ல எண்ணத்துடனேயே அம்முயற்சியில் ஈடுபட்டான். இங்கே கூட பெரிய மைக்கறையை உண்டாக்கிய சிறுவன்மீது குற்றச்சாட்டைச் சுமத்தியபோது அநேக சிறுவர்கள் அச்சிறுவனின் உள்நோக்கத்தைச் சீர்தூக்கிப் பார்க்கவில்லை.

மூன்றாவது கதையிலும் பசியாயிருந்த தன் நண்பனுக்கு உதவி செய்வதற்காகவே அல்வாவைத் திருடியபோதிலும், அச்சிறுவனே பிழைசெய்தவனென்று அதிகமான சிறுவர்கள் தீர்ப்பிடுகிறார்கள். ஆனால் தன்னலம் என்ற உள்நோக்குடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாவைத் திருடிய அச்சிறுமியின் செயல் சரியானதென்று சில சிறுவர்களுக்குப்படுகிறது. இதிலிருந்து மேலும் நிருபணமாவது என்னவெனில் குழந்தைகள் தங்கள் தீர்மானங்களில் மிகமிக அரிதாகவே அச்செயலைச் செய்தவனின் உள்நோக்கத்தைக் கணிக்கிறார்கள் என்பதாகும்.

## 3-4 பரிசோதனை முடிவுகளிலிருந்து சிறுவர் நிலை:

குழந்தைகள் எடுக்கும் தீர்மானங்கள் சரியாக அமைவது அவ்வளவு எளிதானதல்ல. பெரும்பாலும் அவர்களது தீர்ப்புக்களில் குறை காணப்படுவதுண்டு. ஏனெனில் அவர்கள் திர சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதில்லை. மேலெழுந்தவாரியான புலன் உணர்வுகளைக் கொண்டே ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். சாடிப்பரிசோதனையிலிருந்து அவர்கள் தன்னிலேயே முழுமையான, உண்மையான ஒரு முடிவுக்கு வர இயலாதவர்கள் என்பதை நிரூபிக்கிறார்கள்.

''கோட்பாடுகளுக்கு அமைந்து நடக்கும் எச்செயலும் சரியானது. கோட்பாடுகளுக்கு ஒவ்வாத எச்செயலும் கூடாதது'' குழந்தைகளின் தீர்ப்புக்களில் கோட்பாடுகள் வகிக்கும் நிலையை மற்றுமொரு முக்கிய அம்சமாக நாம் காண்கின்றோம். பெற்றோரிடமிருந்தும் பெரியோர்களிடந்தும் வழிவழியாக வரும் கோட்பாடுகள், நிபந்தனைகள் குழந்தைகளின் தீர்ப்புக்களில் வகிக்கும் இடம் யாது என்பது புலனாகிறது.

மேற்குறிப்பிட்ட கதைத் தொகுப்புச் செய்கைகளைச் செய்யும்போது அச்செயலைச் செய்தவர்கள் கொண்டிருந்த உள்நோக்கத்தைத் தீர்ப்பிட்ட அதிகமான சிறுவர்கள் மனதிற் கொள்ளவில்லை. இச்செயல்களில் ஈடுபட்ட சிறுவர்களின் உண்மையான மனநிலையைத் தீர்ப்புக்கூறிய சிறுவர்கள் கணிப்பிடவில்லை. அந்தச் சிறுவர்கள் எதைச் செய்தார்கள் என்பதைத்தான் பார்த்தார்களே தவிர ஏன் செய்தார்கள் என்று ஆராயவில்லை.

சிறுவர்களிடமிருந்து பெறப்பட்ட தீர்ப்புக்களானது பெற்றோர், ஆசிரியர், குரவர். பெரியோரிடமிருந்து மரபுவழி வந்த சில விதிமுறைகள்—களவெடுத்தல் கூடாது, கீழ்ப்படியாமை கூடாது போன்றவைகளை—வெளிப்படுத்துகிறது. பெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர்கள் இச்செயல்களை பிழையெனப் படிப்பித்தமையால் அவை பிழையாகச் சிறுவர்களால் அனுமானிக்கப்படுகிறது. குழந்தைகளின் தீர்ப்புக்களில் முதியவர்களின் உந்துதல் காணப் படுகிறது. அதாவது குழந்தைகள் தம் சொந்த புத்தியை பாவிக்கும், அல்லது உரிய காரணம் காண்பித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் நிலையை அடையவில்லை என்றும் அவர்களது தீர்ப் புக்களில் தன் சுதந்திரம் இல்லை என்றும் புலனாகிறது. எனவே குழந்தைகளைப் பொறுத்தமட்டில், கோட்பாடுகளுக்கு அமை யும் எந்தச் செயலும், அல்லது ஒரு பெரியவர் எதைத்தான் கட்டளையிட்டாலும் அதற்கு அமைவதும் அவர்களுக்குச் சரி யானது என்றாகிவிடுகிறது.

மொத்தத்தில் குழந்தைகளுடைய தீர்ப்புச் சட்டங் களுக்கு அடிமையானது. அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு செயல் சரி, அல்லது பிழை என்பது அது பெரியோரால் கட்டளையிடப்பட்டிருப்பதில், அல்லது அது தவிர்க்கப்பட்டி ருப்பதில் தங்கியுள்ளது. ஒரு காரியம் தன்னிலேயே சரியா னதா அல்லது பிழையானதா என்று அவர்கள் பார்ப்பதில்லை.

## 4 எனவே குழந்தைகள் சாவானபாவம் செய்ய முடியுமா ?

### 4-0 தீர்ப்பு

ஜான் பியாஜேயினுடைய பரிசோதனைகள் மூலம் குழந் தைகள் உளச்சான்றை; அதாவது சரிபிழையைச் சீர்தூக்கிப் பார்க்கும் விழிப்பு நிலையை; சாவான பாவம் செய்வதற்கு அவசியமான பக்குவப்பட்ட மனச்சான்றை அடையாதவர்கள் என வெளிப்படுத்துகிறது. ஏனெனில் குழந்தைகள் உள்ளதை உள்ளபடியே சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையை இயற்கை யான, உண்மையான சிந்திக்கும் திறனை இன்னும் பெறாத வர்கள். ஒரு செய்கையின் பளுவைச் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவு குழந்தைகளுக்கில்லை என்பதை இப்பரிசோதனைகள் காட்டுகின்றன. மேலும் குழந்தைகள் எதிரான ஒரு அடிப்ப டைத் தீர்மானத்தை எடுக்க அவர்களிடம் போதுமான உடை மைகள் (Self Possession) இல்லாதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒன்பது வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சாவான பாவம் செய்யக்கூடிய சாத்தியமற்றவர்கள் என்பதாக நாம் இங்கு வகுக்க முடியும். ஏனெனில் அவர்கள் தீர்மானங்கள் எடுப்பதற்கும் போதுமான முதிர்ச்சியை, சுதந்திரத்தைப் பெறாதவர்கள்.

## 4-1 திருச்சபையினுடைய போதனை

மேலும் திருவருட்சாதனங்களுக்கான பரிசுத்த அவை 1973, மே 24ல் ஒரு கோட்பாட்டை வெளியிட்டது. அதாவது முதல் பாவஒப்புதல் முதல் நன்மைக்கு முன் பெறப்பட்டிருக்கவேண்டும் என்பதாகும்.

அ) இக் கோரிக்கை ஒவ்வொரு சிறுவனும் முதல் நன்மைக்கு முன் முதல் பாவஒப்புதல் செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் நோக்கோடு வெளியிடப்பட்டதல்ல.

ஆ) அதே வேளையில் சிறுவர்கள் பாவஒப்புதல் செய்ய பக்குவப்பட்ட நிலையை அடையவில்லை என்று அவர்களுக்கு முதல் நன்மையை மறுக்கவுமில்லை.

ஆனால் இதன்மூலம் பரிசுத்த அவை வலியுறுத்துவதுயாதெனில் குழந்தைகள் இவ்விரு திருவருட்சாதனங்களையும் பெற்று அதனால் அவர்கள் பயன் பெறத்தக்கதாக அவர்களுக்கு உகந்த உதவக்கூடிய திருமறைப் பாடங்களை ஓரசமயத்தில் புகட்டி ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதாகும். (நவ. 27, 1973)

சமீபத்தில் பரிசுத்த அவையானது முதல் பாவ ஒப்புதல், முதல் நன்மைக்கு முன்பு பெறப்படவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 4-2 முடிவுரை

எனவே எமது கண்ணோட்டத்திற்கு உட்பட்ட ஆறு முதல் ஒன்பது வயது சிறுவர்கள், சீர்தூக்கிப் பார்த்து முழு அறிவை பெறும் திறமை இல்லாதவர்களாகையால்; உள்ளதை உள்ளபடியே அவதானித்து இயற்கையாகச் சிந்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் குறைவானவர்களாகையால், தன்னிச்சையாகத் தீர்மானம் எடுப்பதில் குறைபாடுள்ளவராகையால், தன் உடைமை குறைவானவர்களாகையால், சாவான பாவம் செய்யச் சாத்தியமற்றவர்கள்.

உசாத் துணை


1. Lynch, John J : Notes on Moral Theology, Theological Studies, pp. 276.
2. Drouin, Francis: The Awarkening of Moral Conscienee in Children, Homiletic and Pastoral Review, Oct. '65 pp. 41
3. Lobo, G. Comments, Clergy Monthly Oct. 72, pp. 390
4. Aquinas, Thomas : Summa Theologica II a II ae Ques 89, art 6.
5. Piaget, J: The Moral Judgement of the Child, pp. 2, 73, 118
6. Buckley, Francis First Confession Before or After First Communion, Homiletic and Pastoral Review, '72, pp. 51


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் உயிர்ப்பு: ஒரு விவிலிய மதிப்பீடு

— அருள்திரு டட்லி பெரேரா அ.ம.தி. —

''கிறிஸ்தவ விசுவாசத்தின் கருப்பொருளான மறைக்கோட்பாடுகளில் உயிர்ப்பே மையமானது. ஆயினும் திருச்சபையின் எந்தப் பொதுச் சங்கமும் கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பற்றி விசுவாசப் பிரகடனம் செய்யவில்லை. பொது விசுவாசப் பிரமாணங்களால் வெளியிடப்படும் விசுவாசத்தின் உயிருள்ள கருத்து ஒருமைப்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மனநிறைவைக் கொடுத்துள்ளது. இவ்விசுவாசப் பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டைத் தெளிவாக எதிரொலிக்கின்றன. நாமும் இன்னும் இலட்சக்கணக்கான மக்களும் கிறிஸ்து சாவினின்று உயிர்த்துவிட்டார் என்று விசுவசிப்பதை நாம் அறிவோம். நாம் எமது விசுவாசத்தை அறிக்கையிடும்போது எதை விசுவசிக்கிறோம் என்பது எமக்குத் தெளிவில்லாது இருக்கலாம். 'இறப்பில் இருந்து கிறிஸ்துவின் உயிர்ப்பு' என்பது என்னவென்று எமக்குத் தெளிவாகத் தெரியுமென்று நாம் எண்ணலாம். ஆனால் அதை விளக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோமானால் நாம் குழப்பம் அடையக்கூடும்''1 புதிய ஏற்பாட்டின்படி இயேசுவின் வாழ்வு, உழைப்பு, வாக்கு என்ற நிகழ்வுகளில் அவருடைய இறப்பும் அடக்கமும் இறுதி நிகழ்ச்சிகளல்ல. இயேசுவின் சீடர்கள் அவரைப் புதிய வாழ்க்கை நிலையொன்றில் அனுபவித்தார்கள் என்று புதிய ஏற்பாடு எடுத்தியம்புகிறது. எவ்வாறு இயேசுவைக் கடவுள் இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் என்ற சான்று பகர்தலோடு எல்லா நற்செய்திகளும் முடிவடைகின்றன. ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தால் அறிவிக்கப்பட்ட நற்செய்தியின் தொடக்கமும் கருப்பொருளும் இயேசுவின் உயிர்ப்பே ஆகும்; 'கிறிஸ்து உயிர்ப்பிக்கப்படவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் விசுவாசமும் பொருளற்றதே'' (1கொரி.15;14)* முதற் கிறிஸ்தவர்களுக்கு உயிர்ப்புப் பற்றிய விசுவாசம் எத்துணை முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது என்பது புதிய ஏற்பாட்டில் தெளிவாய் உள்ளதெனினும், உயிர்ப்பைப்பற்றி அவர்கள் கூறியதைக் கொண்டு அவர்களின் விசுவாசத்தைப் புரிந்து கொள்வது எமக்கு மிகவும் கடினமாகும்.2

---

* Revised Standard Version : "If Christ has not been raised' என்று செயப்பாட்டு வினையாகத் தருகிறது. ஆனால், தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி, திருவழிபாட்டு நடுநிலைய (1977) மொழிபெயர்ப்பு, ''கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் .....'' என்று செய்வினையாகத் தருகிறது.
காண்க: இதே கட்டுரை, 'விசுவாச அறிக்கை' என்ற பகுதி, பந்தி 2

— மொழிபெயர்ப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஏற்பாட்டுச் சான்று

இயேசுவின் உயிர்ப்பு பற்றிய புதிய ஏற்பாட்டுச் சான்றுகளை உயிர்ப்பின் அறிவிப்பு (Easter kerygma) உயிர்ப்புக் கதைகள் (Easter stories) என இரு அடிப்படைப் பாரம்பரியங்களாகப் பிரிக்கலாம்.[3] அப்போஸ்தலர் பணியும் திருமுகங்களும் அழுத்தமான, சுருக்கமான வடிவில் எமக்குத் தருவது முன்னையதையே; இவ்வறிவிப்புகளில் குறிப்பிடத்தக்கதும், முதன்மையானதும் 1கொரி. 15:3-5 இலுள்ளதாகும். அப்.பணி 10:40ff, 1 திமோ. 3:16இலும் இன்னும் பிலிப். 2:6-11இல் வரும் பாடல் எல்லாம் இதைப் போன்றவையே. இவற்றை மிகப் பழமை வாய்ந்தவையாகவும் கடப்பாடாய் binding அமைந்தவையாகவும் விவிலிய அறிஞர்கள் கொள்வர். இவை முதற் கிறிஸ்தவ சமூகத்தின் உயிர்ப்பு பற்றிய விசுவாசத்தை ஒருங்கிணைக்கின்றன. ''முதற் கிறிஸ்தவ சமூகத்தில் உயிர்ப்பு அறிவிக்கப்பட்டதேயன்றி கதையாகக் கூறப்படவில்லை''[4] நான்கு நற்செய்திகளிலும் இறுதியில் காணப்படும் உயிர்ப்புக் கதைகள் உயிர்ப்பின் அறிவிப்பிலிருந்து தனித்தன்மையானவை. இவை அமைப்பில் கதை வடிவானவையும் நடையில் விரிவானவையும் ஆகும். உயிர்ப்பின் அறிவிப்பு, உயிர்ப்புக் கதைகள் இரண்டும் உயிர்த்த ஆண்டவர் வெவ்வேறு மக்களுக்குக் காட்சியளித்த நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளன. எனினும் வெற்றுக் கல்லறையைக் கண்டதுபற்றிய நிகழ்வுரைகளை உயிர்ப்புக் கதைகள் கொண்டிருப்பது ஒரு முக்கிய வேறுபாடாகும். உயிர்ப்பின் அறிவிப்பு' உயிர்ப்புக் கதைகள் என்ற வேறுபாட்டைத் தவிர, உயிர்ப்புக் கதைகளுக்கு இடையிலேயும் வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக இயேசு உயிர்த்தபின் எங்கெங்கே யார்யாருக்குக் காட்சியளித்தார் என்பதில் நற்செய்திகளுக்கு இடையில் உடன்பாடு இல்லை; இங்கு, இதுபோன்ற வேறுபாடுகளைச் சீர்ப்படுத்த நாம் பழகியுள்ள இசைவுபடுத்தல் முறை (harmonizations) பயனற்றதாகிவிடுகிறது.[5] ''ஒன்றுக்கொன்று ஒவ்வாத நான்கு சான்றுகளைத் தன் மதத்துக்கும், விசுவாசத்துக்கும் மகிழ்ச்சியின் நம்பிக்கைக்கும் அடியாதாரமாக ஏற்கும்படி முழு உலகத்தையும்—அதாவது எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் உள்ள முழுமனித சமூகத்தை—நாம் எவ்வாறு கேட்க முடியும்?''என்று 1774இல் எச். எஸ். ரைமாருஸ் (H S. Reimarus) என்ற ஜேர்மானிய பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஐயத்துடன் வினவினார்.[6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்திகள் இயேசுவின் வாழ்க்கைபற்றிய வரலாற்று நிகழ்வுரைகள் என்று நாம் கருதிஞல் இம்முடிவு தீர்க்கமானதாகி விடும். நற்செய்திகளாவன வரலாறு பொருள்படுத்தல் இரண்டும் ஆகும் (both history and interpretation) என்பது அண்மைக்காலங்களில் மென்மேலும் தெளிவாகியுள்ளது. இயேசுவின் வாழ்வு, உழைப்பு, இறப்பு, உயிர்ப்பு ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நற்செய்தியாளரும் எடுத்தாண்டு தத்தம் கிறிஸ்தவ சமூகத்தின் தேவைகளுக்கேற்ப பொருள்படுத்திச் சேர்த்துக் கொண்டார்.[7] எனவே நற்செய்தி வெவ்வேறு பின்னணியுடைய வெவ்வேறு கிறிஸ்தவ சமூகங்களுக்கு வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டதால், அந்த வெவ்வேறு நற்செய்திகளில் இயேசு எனப்படும் வரலாற்று நிகழ்வுக்கு வெவ்வேறு விதமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் என்பது வெளிப்படை. நற்செய்திகளில் வரலாறு, பொருள்படுத்தல் ஆகிய இரண்டும் உள்ளன என்பதை விவிலியத்தைப் பயில்வோன் மனதில் கொண்டு செய்தியை வெளிக்கொணர வேண்டும்.[8]

புதிய ஏற்பாட்டிலுள்ள உயிர்ப்பு நிகழ்வுரைகளை வாசிக்கும் போது நாம் அவதானிக்க வேண்டிய மற்ருெரு விடயம் என்னவெனில் இயேசுவுக்கும் சீடருக்கும் இடையே பின்னர் இருந்த தொடர்பு அவரது சாவிற்கு முன்னிருந்த தொடர்பு போன்றதல்ல என்பதாகும். உயிர்த்த கிறிஸ்து நாம் இன்னும் முழுமையாக அனுபவிக்காத இறுதிக் காலவியல் (eschatological) நிலையினுள் புகுந்து விட்டார். உயிர்ப்பைப் பற்றிப் பேசும்போது மனித மொழியின் குறைபாடுகளை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.[9] புனித சின்னப்பர் ''....ஆவிக்குரிய உடல்'' (1கொரி.15:44) என்று பேசுவது எமக்கு முரண்பாடான ஒரு பதமாகத் தோன்றலாம். எனினும் மனித உயிர் கொண்ட உடலிலிருந்து வேறுபட்டதும், உயிர்ப்பிக்கப்பட்டு மாற்றமடைந்ததுமான உடல்பற்றிப் பேசுவதற்கு இதுவே ஒரேயொரு வழியாக இருக்கலாம். லாசர் தனது பழைய உலக வாழ்விற்குக் கொண்டுவரப்பட்டதுபற்றி நான்காவது நற்செய்தி கூறுகின்றது. எனவே இயேசுவைப்பற்றிப் பேசும்போது 'உயிர்ப்பு' (resurrection) என்றும், லாசாரைப் பற்றிப் பேசும்போது 'மீண்டும் உலக வாழ்வுக்குக் கொண்டுவரப்படல்' (resusciation) என்றும் கூறுதல் நலம்.

இயேசுவின் உயிர்ப்பு பற்றிய புதிய ஏற்பாட்டு வாசகங்கள் எல்லாவற்றையும் இக்கட்டுரையில் அலசுவது எனது எண்ணமல்ல. உயிர்ப்பின் விசுவாச அறிக்கையான 1கொரி. 15:3-5ஐயும் வெற்றுக் கல்லறை நிகழ்வுரையைக் கொண்ட உயிர்ப்புக் கதையான மாற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16:1-8 ஐயும் பற்றி நான் ஆராயவுள்ளேன். இவற்றில் முன்னையது பழமைமிக்க உயிர்ப்பின் அறிவிப்புகளில் ஒன்றாகும். பின்னையது முதல் உயிர்ப்புக் கதைகளில் ஒன்றாகும். புதிய ஏற்பாட்டிலுள்ள உயிர்ப்பின் விசுவாசம்பற்றி ஓரளவு தெளிவான கருத்தை இவை தருகின்றன.

## விசுவாச அறிக்கை : 1கொரி. 15 : 3—5

3-வது வசனத்தில் புனித சின்னப்பர் தாம் பெற்றுக்கொண்ட தகவலைக் கொரிந்தியருக்குக் கையளிப்பதுபற்றிப் பேசுகிறார். 'கையளிப்பது', 'பெற்றுக்கொள்வது' என்பன பாரம்பரியத்தைக் கையளிப்பது பற்றிய கலைச்சொற்கள் என்று கூறலாம். எனவே சின்னப்பர் கிறிஸ்தவரானபோது அப்போஸ்தலிக்க சமூகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பழமைமிக்க பாரம்பரியத்தையே இங்கு கருதுகிறோம். [10]

மறைநூலில் உள்ளபடி கிறிஸ்து நமது பாவங்களுக்காக இறந்தார்,
அடக்கஞ் செய்யப்பட்டு,
மறைநூலில் உள்ளபடி மூன்றாம் நாள் உயிர்ப்பிக்கப்பட்டார்,
கேபாவுக்கும் பின்னர் பன்னிருவருக்கும் தோன்றினார்.

என்றும் இங்கு குறிப்பிடப்படுகிறது. இறப்பு, அடக்கம், உயிர்ப்பு, காட்சியளித்தல் என்ற ஒழுங்கு வரிசையானது அந்நிகழ்ச்சிகளுக்கு இடையிலான தொடர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகிறது. இறந்து அடக்கஞ் செய்யப்பட்ட அதே இயேசுவே உயிர்ப்பிக்கப்பட்டு, மக்களுக்குக் காட்சியளித்தவர் ஆவர்.[11] அடக்கம் அவரது சாவுக்கு முத்திரையிட்டதுபோல் அவரது காட்சியளிப்பு அவரது உயிர்ப்புக்கு முத்திரையிட்டது என்பது இதன் கருத்தாகும்.[12] 'மறைநூலில் உள்ளபடி' என்ற சொற்றொடர், இயேசுவுக்கு நடந்தது யாரோ ஒருவரது இறப்பும் உயிர்ப்பும் அல்ல, மாறாக இறைவனால் இஸ்ராயேல் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்கை நிறைவேற்றியவருடையது என்பதையே நமக்குக் கூறுகிறது. 'மூன்றாம் நாள்' என்ற சொற்றொடரைக் கருதும்போது, அது சாதாரண கால வரையறையைக் குறிக்கிறதா என்பதில் நாம் ஐயம் கொள்ளலாம். இதையொத்த பொருள்தரும் பழைய ஏற்பாட்டு வசனம்: ''இரண்டு நாளைக்குப் பிறகு அவர் நமக்குப் புத்துயிர் ஊட்டுவார். மூன்றாம் நாள் அவர் நம்மை எழுப்பி விடுவார்; அதன் பின் அவர் முன்னிலையில் நாம் வாழ்ந்திடுவோம்'' (ஓசே 6:2) இங்கு 'இரண்டு நாளுக்குப் பிறகு', 'மூன்றாம் நாள்' என்பன குறுகிய காலத்தைக் குறிக்கும் இணைபொருட் சொற்களாகும்.[13] மூன்றாம் நாள் என்பது இறுதிக்காலவியல் நாளும் ஆண்டவருடைய நாளின் இறுதி வருகையைக் குறிக்கும் அடையாளமும் ஆகும். [14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பு திட்டவட்டமாக எப்போது நிகழ்ந்தது என்பது ஆதிக் கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது; புதிய ஏற்பாடும் இதுபற்றிக் கூறவில்லை. மூன்றும் நாள் கல்லறை வெறுமையாய்க் கிடக்கக் காணப்பட்டது உண்மையாய் இருக்கலாம். ஆனால் உயிர்ப்பு அதற்குமுன்னரே நடந்து இருக்கலாம். எனவே மூன்றும் நாள் என்ற சொற்றொடருக்கு கூடிய இறையியல் அர்த்தம் உள்ளதேயன்றி அது வெறும் காலவரையறையைக் குறிக்கவில்லை.15 குறுகிய காலத்தில் தம் அன்பு மகனைக் காக்க வந்த இறைவனின் செயலே உயிர்ப்பு ஆகும்; இதனால் மீட்பின் இறுதிக்காலவியல் வேலை ஆரம்பிக்கப்பட்டது என்பதே மூன்றும் நாள் என்ற சொற்றொடர் தரும் இறையியல் கருத்தாகும்.

இந்த விசுவாச அறிக்கை 'இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார்' என்றும் எடுத்தியம்புகிறது. தந்தையாகிய இறைவன் (எழுவாய்) இயேசுவை (செயப்படுபொருள்) சாவினின்று உயிர்ப்பித்தார் என்ற செயப்பாட்டு வினையில்தான் பொதுவாக புதிய ஏற்பாடு உயிர்ப்புப்பற்றி கூறுகிறது. இயேசு தன் சொந்த வல்லமையால் உயிர்த்தெழுந்தார் என்று பொருள்தரும் வசனங்கள் நான்காவது நற்செய்தி போன்ற பிற்காலப் புதிய ஏற்பாட்டு நூல்களில் காணக்கிடக்கின்றன. (அரு. 10: 17, 18) இயேசுவும் தந்தையும் ஒருவரே என்ற தெளிவான எண்ணத்தைக் கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொண்ட புதிய ஏற்பாட்டு இறையியலின் உச்சக்கட்டமே நான்காவது நற்செய்தியாகும். இறைவன் கிறிஸ்து இயேசுவில் தங்கியிருந்தார் (2கொரி. 5:19) என்ற முன்னைய கிறிஸ்தவர்களின் கிரகிப்பானது புதிய ஏற்பாட்டைத் தழுவி, அதைக் கடந்து, இன்னும் முடிவுபெருத ஒரு மெதுவான இயல்வளர்ச்சியாகும்.16 வோன்ஸ்ப்ரேவும் இதே கருத்தைத் தான் தெரிவிக்கிறார் போலும்; ''இயேசு தனது உயிர்த்தெழுதலின்போது இறுதிக்காலவியல் நிலையினுள் புகுந்தார்....இயேசுவுக்கு இது ஒரு நிறைவாக்கலும், நிறைவேற்றுதலும், இறைவனின் வலக்கரத்துக்கு உயர்த்தப்படுதலும் ஆகும். அவருடைய இவ்வுலக வாழ்வின் போதுள்ளதான இறைத்தன்மையைக் குறைக்காமல் அவர் உயர்த்தப்பட்டபோது உருவான மாறுதலை விளக்குவது கடினமே; ஆனால் உயிர்ப்பின்போது அவர் ஏதோவொரு வகையில் நிறைவாக்கப்பட்டார் என்பதும் இறைத்தன்மையுடன் ஏதோவொருவகையில் இன்னும் முழுமையாக இணைந்து கொண்டார் என்பதும் மறுக்கப்பட முடியாதவை.'' 17 இறைவன் இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தது இயேசு கடவுளுக்கு உகந்தவராயிருந்தார் என்பதன் அடையாளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு இராயப்பருக்கும் பன்னிருவருக்கும் தோன்றினர் என்றும் விசுவாச அறிக்கை கூறுகிறது. தோன்றுதல் எனும் பொருளுடைய 'ஒஃப்தே' எனும் கிரேக்கச் சொல் இங்கு கையாளப்பட்டுள்ளது. ''கிரேக்க விவிலியத்தில் இச்சொல்லை ஆராயுமிடத்து, இறைவன் இறைதூதர் போன்ற இயல்நிலை கடந்தவற்றுடனான தொடர்பு உட்பட பல்வேறு வகையான காட்சி அனுபவங்களை இச்சொல் குறிக்குமேயன்றி வெறும் காணுதலை மட்டும் குறிக்கவில்லை என்பது புலனாகிறது. எனவே புனித சின்னப்பர் இயேசு காட்சியளித்தார் அல்லது இயேசுவைக் கண்டேன் என்று கூறுமிடத்து அவர் இயேசுவை மனித உடலுக்குரிய வடிவத்தில் கண்டார் என்று கூறுவதாக நாம் கருத முடியாது.''[18] இக்கிரேக்க வினைச்சொல் சாதாரண பார்வையைக் குறிப்பதற்கு மிகவும் அரிதாகவே பாவிக்கப்பட்டுள்ளது. இவ் வினைச்சொல் விவிலியத்தில் பொதுவாக இறைக்காட்சி (theophany) யைக் குறிக்கும் கலைச்சொல்லாக உள்ளது. புதிராகவுள்ள இறைவன் இறைக்காட்சியால் தம்மையே மனிதனுக்கு வெளிப்படுத்துகிறார்.''1 கொரி 15 இலுள்ள விசுவாசப் பிரமாணவடிவம் உயிர்த்த கிறிஸ்துவின் தோற்றத்தை இறைக்காட்சி மாதிரிக்கு அமையத் தெளிவாக விவரிக்கிறது. ஓர் இறைக்காட்சிக்குரிய சிறப்பியல்புகள் இங்கே காணகிடக்கின்றன. ஒருவன் பலவந்தமாக இவ்வாறான காட்சி ஒன்றை நடைபெறவைக்க முடியாது; அது அவனுக்கு நடைபெறவேண்டிய தொன்று. மறைபடுதலும் தோன்றுதலும் பக்கம் பக்கமானவை: முற்றாக மனிதருக்கு மறைபட்ட ஒன்று, அவர்களால் அடைய முடியாத ஒன்று, தன்னையே அடையக் கூடியதாக்கி அவர்களுக்கு வெளிப்படுத்துகிறது. உயிர்த்த கிறிஸ்து சுதந்திரமாயும், கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்ட நிலையிலும் தன்னை வெளிப்படுத்தி, 'தன்னைப் பார்வைக்கு உரியவராக்கினார்.'[20] தங்கள் விசுவாசக் கண்ணால் உயிர்த்த ஆண்டவரைக் 'கண்ட' சீடர்க்கான கிறிஸ்து இயேசுவின் வெளிப்பாடே இக் காட்சிகளாகும். அவர்களுக்கு இது விசுவாசத்தில் பார்த்தல் ஆகும்.[21] இயேசுவை உலக வாழ்வில் அறிந்திருந்தவர்கள் கூட அவர் உயிர்த்த பின் அவரது தூண்டுதல் இன்றி அவரை அடையாளங் காணவில்லை. மேலும் அவர்கள் சாதாரண இயேசுவை அல்ல, ஆண்டவராகிய இயேசுவைக் கண்டதாகவே அறிவித்தார்கள்; இந்த இயேசு இறைத் தன்மையான ஆண்டவர்த் தன்மைக்கு மாற்றப்பட்டவர் ஆவார். (அப்.பணி 2:32, 36) எனவே இத்தோற்றங்கள் சாதாரண அனுபவத்தைக் கடந்த இறைவெளிப்பாட்டோடு கூடிய பார்வையைக் குறிக்கின்றன.[22] இங்கு அகஉணர்வுக்குரிய (subjective), புறவுலகுக்குரிய (objective) என்ற வகைப்படுத்தல் கூட பொருத்தமற்றதாகிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இத்தோற்றங்கள் புறவுலகுக்கு உரியன அல்ல, ஏனெனில் உயிர்த்த ஆண்டவரை ஆர்வமற்ற பார்வையாளர்கள் பார்த்திருக்க முடியாது. (புகைப்படத்தில் பிடித்திருக்கவும் முடியாது) இவை அக உணர்விற்கு உரியனவும் அல்ல, ஏனெனில் சீடர்களின் எதிர்ப்புக்கோ கற்பனைக்கோ உரிய தோற்றமல்ல உயிர்த்த ஆண்டவர்.[23]

எனவே உயிர்த்த ஆண்டவர்தான் சீடர்களுக்குத் தம்மையே வெளிப்படுத்தி, அவர்களது உயிர்ப்பின் விசுவாசத்தைப் பிறப்பித்தவர் ஆவர். உயிர்த்த ஆண்டவரின் வெளிப்பாடு விசுவாசத்தில் பார்த்தல் என்று கூறுவோமானால்அவர் உடலோடு தோன்றியதைப்பற்றி, விசேடமாக லூக்காவினதும், அருளப்பரினதும் நற்செய்திகளில் உயிர்த்த ஆண்டவர் சீடர்களோடு உணவருந்தியதைப் பற்றியும், தனது விலாவில் கைவைத்துப் பார்க்க அழைத்ததைப் பற்றியும் (லூக். 24:15 ff 39 & 43; அரு. 20:27, 21:10-13) என்ன கூறலாம்? இந்நிகழ்வுரைகளைத் தகுந்த முறையில் புரிந்துகொள்வதற்கு மிகைப்படுத்த யதார்த்வாதத்தை அல்ல, ஆய்வுக்குரிய யதார்த்தவாதமே வேண்டப்படுகிறது. இது நற்செய்தியாளர்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள எம்மைத் தூண்டவேண்டும். இரு நற்செய்தியாளர்களாலும் தரப்படும் உடல்பற்றிய விவரிப்பு, உயிர்ப்பின் யதார்த்த தன்மையை (உயிர்த்த ஆண்டவர் ஒரு பூதமல்ல என்பதை) கோடிட்டுக் காட்டவும் அவர்களுடன் வாழ்ந்து சிலுவையில் அறையப்பட்ட அதே இயேசுவை உயிர்த்த ஆண்டவர் என்று எடுத்துக்காட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இயேசுவின் உயிர்ப்பானது வெறும் சடலம் மீண்டும் உலக வாழ்வுக்குக் கொண்டுவரப்பட்டது அல்ல என்று காட்டுவதற்காகவே இயேசுவின் மாற்றப்பட்ட வாழ்வுபற்றிய விவரங்களைச் சேர்த்துள்ளனர். அவர் மூடியிருந்த கதவுகளூடு சென்றார் (அரு. 20:19,26) சடுதியாகத் தோன்றினார், மறைந்தார் (லூக். 24:31-36) குறிப்பிடத்தக்கதான 'என்னைத் தொடாதே' என்ற சொற்றொடரும் உயிர்த்த ஆண்டவருக்குப் பருப்பொருட்தன்மையைக் கொடுக்க எண்ணிய நோக்கத்திற்கு எதிராகப் பாவிக்கப்பட்ட ஒன்றாய் இருக்கலாம். விசுவசிப்பவர் இத்தகைய உடற் தொடர்பை ஆசிப்பது இனியும் பொருத்தமற்றது என்பதே இதன் கருத்தாகும்.[25] இதேபோல் தோமையாரும் விசுவசிக்குமுன் உயிர்த்த ஆண்டவரைத் தொடவிரும்பினார்—ஆனால் இயேசுவின் வார்த்தையுடனேயே 'என் ஆண்டவரே, என் இறைவனே' என்று அறிக்கையிட்டார் (அரு. 20:27) நற்செய்தியின் போதனையை (ஆண்டவருடைய வாக்கை) கேட்பதால் மட்டும் விசுவசிக்கப் போகின்ற எதிர்காலக் கிறிஸ்தவர்களுக்காகவும் இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.[26] இந்த நுட்பவேறுபாடுகள் எல்லாம் இயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவின் உயிர்ப்பு ஓர் உடல் உயிர்ப்பு என்று சுட்டிக்காட்டுவதோடு இயேசுவின் உடல் இடம், காலம் என்பவற்றால் கட்டுப்படுத்தப்படாத இறுதிக்காலவியல் நிலைக்குரிய ஓர் உடல் என்று தெளிவாக்குகின்றது. மண்ணக வாழ்வுக்குரிய, இயற்கையான, உடலுக்குரிய எல்லாக் குணவியல்புகளையும் கொண்டிராத ஓர் உடல் ஆகும்.[27] ''சுருங்கக் கூறின் இட-கால அனுபவ வரையறைக்கு உட்பட்ட நம் மொழியானது இறுதிக்காலவியலை விவரிக்கும்போது நிலைகுலைந்து விடுகின்றது.''[28]

## வெற்றுக் கல்லறை (16 : 1-8)

நான்கு நற்செய்திகளிலும் வெற்றுக் கல்லறைக்கதை உள்ளது. பெரும்பாலான அறிஞர்கள் மாற்குவினதையே முதலில் எழுதப்பட்ட நற்செய்தியாகக் கொள்வதால் 28, அதுவே முதல் வெற்றுக்கல்லறை நிகழ்வுரையைக் கொண்டுள்ளது. மற்றைய நற்செய்தி நிகழ்வுரையைப் போலவே வெற்றுக் கல்லறை நிகழ்வுரையும் அப்படியே கல்லறையில் நடந்த வரலாற்று நிகழ்ச்சி அல்ல என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மூன்றுநாள் சென்ற சடலத்துக்குத் தைலம் பூச எத்தனிப்பது வரலாற்றுரீதியானது அல்ல. பாலஸ்தீனத்தின் வெப்பத்துக்குத் தைலம் பூசக்கூடிய நிலையில் சடலம் இருந்திராது.[29] தைலம் பூசுமுன் பெரிய கல்லொன்றைப் புரட்ட வேண்டுமென்றுகூட பெண்கள் உணரவில்லை. அவர்கள் யோசனையற்ற நிலையை என்னவென்பது! 'அவர் உயிர்ப்பிக்கப்பட்டு விட்டார்' என்ற இறைதூதனின் செய்தியை உச்சமாக வைத்து இந்நிகழ்ச்சி உருவாக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.[30] பெண்கள் கண்டதைவிட இறைதூதன் சொன்னதுதான் கதைக்கு மையமானதாகும். அதாவது, பெண்கள் கண்டதைவிட இறைவனின் செயலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் உயிர்ப்புச் செய்திக்கு வடிவம் கொடுப்பதாகவே மாற்குவின் வெற்றுக்கல்லறைக் கதை அமைகிறது.[31] (விவிலியத்தில் இறைதூதன் தோன்றும்போதெல்லாம் இறைவனின் செய்தி அறிவிக்கப்படும் அல்லது விசுவாசத்துக்குச் சாட்சியம் கூறப்படும்.[32] இதையே மாற்குவின் நற்செய்தியில் வரும் வெண்ணுடை அணிந்த இளைஞன் செய்கிறான்) கல்லறை வெறுமையாய் இருந்ததை இந்தப் பொருள்படுத்தல் மறுக்கவில்லை. இது வரலாற்று உண்மை என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு.[33] கல்லறை வெறுமையாய் இருந்திராவிட்டால் இயேசுவை இறைவன் இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் என்று சீடர்களால் போதிக்க முடியாது இருந்திருக்கும்.[34] ஆனால் வெற்றுக் கல்லறை நிகழ்ச்சியானது இரு பொருள் தரக்கூடிய ஒன்றாகும். உடல் திருடப்பட்டிருந்தாலும் கல்லறை வெறுமையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கும். இவ்வாறே இயேசுவின் சடலத்தைத் திருடிவிட்டு அவர் உயிர்த்துவிட்டார் என்ற செய்தியைச் சீடர் பரப்பினர் என்ற குற்றச்சாட்டை எதிர்க்கும் மறுப்புரையாக மத்தேயு நற்செய்தியில் வரும் காவலர்களின் கதை அமைகிறது.35 எனவே வெற்றுக் கல்லறையானது இறைதூதனுல் பொருள்படுத்தப்பட வேண்டும் அல்லது உயிர்த்த ஆண்டவரின் காட்சிகளோடு இணைக்கப்பட்டு முழுமையாக்கப்பட வேண்டும். அப்போதுதான் வெற்றுக்கல்லறை உயிர்ப்பின் விசுவாச அறிக்கைக்கு ஊடகமாக அமையலாம். 'எனவே வெற்றுக்கல்லறை கிறிஸ்தவ விசுவாசத்தின் இலக்காக அமையாவிட்டாலும், அதனோடு தொடர்பற்றதல்ல; ஏனெனில் அது அவர்கள் விசுவாசத்தை அறிக்கையிட்ட விதத்தைப் பாதித்தது.''

முடிவுரையாக புதிய ஏற்பாட்டிலுள்ள உயிர்ப்பின் அறிவிப்புகளும், உயிர்ப்புக் கதைகளும், உயிர்ப்பானது இயேசுவில் இறைவனின் செயலாகும் என்று நம்மை விசுவசிக்கச் செய்கின்றன எனலாம். அவருடைய வாழ்வும் உழைப்பும் வெற்றியே என நிறுவப்பட்டது. இயேசுவின் உடலின் மாற்றம் இறுதிக்காலவியல் யுகத்தின் தொடக்கமாகும். நாங்களும் நமது உடலோடும் முழுப் படைப்போடும் (உரோ. 8:19 ) மாற்றப்படுவோம் என்று விசுவசிக்கத் தூண்டுகிறது. இயேசு இறந்தோரின் 'முதற்கனியாக' இறைத்தன்மையில் புகுந்தது, நாமும் அவரைப் பின்தொடர்ந்து இறைத்தன்மையில் புகுவோம் என்பதன் முன்னடையாளமாகும். கிறிஸ்துவின் உயிர்ப்பே எங்கள் நம்பிக்கை அனைத்துக்கும் ஆதாரம் என்றும், ''கிறிஸ்து உயிர்ப்பிக்கப்படவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருளற்றதே'' என்று புனித சின்னப்பர் இதனாலேயே கூறுகிறார். கல்லறையிலிருந்த இளைஞனின் இறுதிச் செய்தி நமது வாழ்வின் நிலை மாற்றங்கள் எல்லாவற்றிலும் வலுத்தருகின்ற, முடிவற்ற நம்பிக்கைக்குரிய செய்தியாகும்; ''அவர் உங்களுக்குக் கூறியவாறு, நீங்கள் அவரை அங்கே காண்பீர்கள்'' (மாற்கு 16:7) என்ற உறுதி மொழியானது, உயிர்த்த கிறிஸ்து இறுதி அமைதியிலும் சாந்தியிலும் வல்லமையிலும் எங்கே உள்ளாரோ அங்கே அவரோடு நாமும் ஒரு நாள் முழுமையாகவும் நிறைவாகவும் இணைவோம் என்ற நம்பிக்கையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள் :


1. Gerald O'Collins, *What are they saying about the Resurrection?* Paulist Press, New York, 1978, pages 2 & 3
2 *The Common Catechism*, The Search, Press, London, 1975, p. 125
3 Walter Kasper, *Jesus the Christ*, Burns & Oates, London 1975, p. 125.
4 *Formation of the Resurrection Narratives*, New York, Macmillian 1971, p. 16
5 Raymond Brown, *The Virginal and Bodily Resurrection of Jesus*, London, Geoffrey Chapman, 1974, pp. 99—106
6 *Common Catechism*, *p*. 164
7 *Historcity of the Gospels* Acta Apostolicae Sedis 56 (1964) pp, 712—718.
8 Henry Wansbrough, *Risen from the Dead*, Slough, St. Paul's Publications, 1978, pp. 30—40, the same idea but differently presented
9 *Common Catechism*, p. 166
10 *See* Raymond Brown, o. c., p. 81
11 *See* Raymond Brown, o. c. p.
12 Fergus Kerr, *Sighting or Theophany*, New Blackfriars 58, 1977, p. 308
13 James L. Mays, *Hosea*, OT Library, S.C.M. Press, 1969, p. 95
14 Fergus Kerr, *Exegesis and Easter*, New Blackfriars 58, p. 118
15 *See* Hanry Wansbrough, o.c., P. 42—43
16 *See* Raymond Brown, o.c., p. 79 note 134
17 *See* Henry Wansbrough, o.c., p. 106
18 Raymond Brown, o.c., pp. 90—91
19 *See* Fergus Kerr, o.c., p. 309.
20 *Common Catechism* p. 168
21 *See* Walter Kasper, o,c., p. 139
22 *See* Raymond Brown, o.c., p. 112
23 *See* Gerald O'Collins, o.c., p. 62.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 *See* Gerald O'Collins, o.c., pp. 48—51

25 *See Common Catechism*, p. 177

26 *See* Common Catechism, p. 178

27 *See* Raymond Brown o.c., p. 85 note 145

28 Raymond Browu, o.c., p, 92

29 *See* Henry Wansbrough, o.c., p. 50

30 *See* Walter Kasper, o.c., p. 127

31 Fergus Kerr, *The Empty Tomb Story*, New Blackfriars 58, p. 156

32 Pierre Benoit, *The Passion and Resurrection of Jesus Christ*, New York, Herder & Herder. 1969, p. 261.

33 *See* Walter Kasper, o.c., pp. 127—128

34 *See* Raymond Brown, o.c.,p. 126

35 *Common Catechism*, pp. 171—172

36 *See* Raymond Brown, o,c., p. 127

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REDISCOVERY OF THE LAITY IN ECCLESIOLOGICAL THE REVOLUTION

*Emmanuel S. J.* *pp.*1—18

The Copernican revolution in Vatican II eccles-iology has brought out a world-centred church and a people-centred hierarchy so that the laymen are difined as full-fledged members of the church with rights and duties, exercising their triple messianic funtions in the world that is proper to them (secularity ) and with charisms that enable them to undertake new leadership roles. In such a perspective three things need to be re-examined for the benefit of a truly lving church.

a) Lay apostolate is no more mere extension of the apostolate of the hierarchy but a true secular participation in the total apostolate of the church, to with the laity are directly commissioned by the Lord in virtue of their baptism and confirmation

b) Lay ministry is a genuine ministery, in spite of it not being recognised by ordination. It is the ecclesially recognised ministery of a laymen, who living as laymen, is called to exercise a public ecclesial service in a stable manner for the benefit of a community.

c) Lay spirituality is neither that second grade less nobler spirituality nor poor imitation of a clerical or monastic spirituality, but the living of the essence of all Christian spirituality, namely love of God and man, in and for a world that cries for it.

# CULTURAL WORSHIP

*Kirupakaran. T. J.* *pp.* —29

Opinion was expressed at the 2nd Vatican Council that the Church expresses herself through an incarnational process called inculturation. Jesus was not only God's Eternal Word but was also a historical personage (figure). The Church, the visible exponent of the salvific mission to the world has to articulate itself in an intergrated culture appropriate to locality, mores and customs of the people with all their accompany-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ing transformations and realities. Liturgy is a form of inculturation· At the same time we shall have to consider the good and meaningful elements found in other religions as well. It may apparantly happen that in so doing there is an indication of dilution of our faith. But this needs not be so. Faith has to be expressed within the cultural framework without overstressing or being drawn into the vortex of exaggeration.

An awthentic inculturation expresses itself by forming the core and the basis namely the inner dynamism of ones sociocultural and religious aontext with all that these imply and demand.

## ABORTION

*Pilendran. V.* pp.30—37

While trying to find the truth about Abortion, let us go about it in the light of the human sciences but guided by the teachings of the Catholic Church. There is medical evidence to prove that there is life in the foetus from its inception. And that life is not only on the way to become man. Rather even if it is not yet a full human being, all the elements of a "whole man" are already contained in that. The fundamental human right to life of the foetus has to be considered as a right to a true human life. Psychologically, the parents tend to build up guilty consciences after undergoing abortion. Sri Lanka would preserve its culture in a better way if abortion is not legalised in the country. The history of the church down the ages points to a clear opposition of the practice of abortion. The present teaching of the church on the purpose of marriage is that it is for the mutual love of the spouses and for the procreation of children. Within this, the parents are called upon to a responsible parenthood.

## CAN CHILDREN COMMIT MORTAL SINS

*Cardoza, J. J.* pp.38—56

That 'Can Children Commit Mortal Sins' has been a highly contended question that brings in, a plurality of opinions. This question is fresh in the arena of Moral Theology.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Added to that there are other related problms in the sphere of Reconciliation and Penance that arise as a result. There are those who do not attach importance first to a confession then to communion and make children cross straight to the altar rails for first communion. Moral Theologians some of them are of the opinion that children cannot commit Mortal Sin.

Many Psychologists, most notably Gesell, Piaget and Kohlberg have devoted decades of research to analyse moral development of children. In the investigation undertaken here, and with the findings of Jean Piaget, the famed Swiss Psychologist, I wish to establish a basic definitive position that children are incapable of committing Mortal Sins.

Because children of six to nine years of age, who came under my viewpoint, by their inability to perceive and come to a full knowledge; by their inadequacy in objective and realistic thinking; by their lack of autonomous judgement and lack of self possession, make it known that they are incapable of committing Mortal Sin.

## RESURRECTION — A BIBLICAL EVALUATION

*Dudly Perera* *pp. 57—67*

The doctrine of the Resurrection has never been defined by the Church. A living consensus of faith, expressed, by the common creeds, has sufficed for two thousand years. And these creeds clearly echo the New testament doctrine of the resurrection.

The New testament evidence of the resurrection is divided between two basic traditions: the Easter Kerygma and aster stories. A most ancient example of the former is 1 Cor, 15, 3-5, and that of the latter Mk 16, 1-8

1Cor. 15,3-5 speak of Jesus been raised from the dead. It was God (The Father) who raised Jesus from the dead as a sign of Jesus acceptability with God. The Verb used for the appearences is also one used for the revelations in the Bible. This means that the Risen Lord revealed himself to others. For the latter it was a believing-seeing of the Risen Lord in his corporeal risen body.

Mk. 16,1-8, describes the Resurrection in story form in the context of the empty tomb. But the main point of the story is the message of the angel that Jesus is raised from the dead.

The evidence of New Testament is that Jesus is first - born from the dead He is the basis of our resurrection as well. For us Paul says "if christ has not been raised then our preaching is useless and your believing is useless.(1Cor.15,14)"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக எல்லாக் கட்டுரைகளும் ஆழ்ந்த நோக்கான ஆய்வின் எடுத்துக்காட்டாகும். இன்றைய திருச்சபையில் இறையியல் மேய்ப்புப் பணியியலுக்கு தேவையானதும் தொடர்புடையதுமான சிந்தனையைத் தருகின்றது.

வைதிக மித்திரம்.
(Vaidikamitram) மாசி 1981

தமிழில் இறையியல் சார்ந்த சிந்தனைகளுக்கு, நாம் தமிழகத்தின் வெளியீடுகளில் தங்கியிருக்காது, கற்றவர்கள், பேராசிரியர்களாக இங்கிருக்கும் நம்மவர்களின் சிந்தனைப் புதையல்களைக் கிளறி எடுக்க தக்க சாதனமாக இம்மலர் விளங்க விரும்புகின்றேன்.

ம. ஜெறோ செல்வன்
யாழ். பல்கலைக்கழகம்.

இவ்விதழைப் படிக்க முடியாததையிட்டு வருந்துகின்றேன். முடியுமானால், இறுதியில் ஒவ்வொரு கட்டுரைக்கும் ஆங்கிலத்தில் சுருக்கம் கொடுக்கவும். **Theologie im Kontext** என்ற தொகுப்பில் உங்கள் இறையியல் கோலத்தையும் சேர்த்துக்கொள்கின்றோம்.

**Ludwing Widenmann**
Missio
West Germany

தேசிய கலாச்சார செல்வங்களின் ஒரு அங்கமாக விளங்கும் மொழியில் நற்செய்தியை கலாச்சார மயமாக்கும் உங்கள் ஆரம்ப ஊக்கத்தை, பாராட்டுவதிலும், ஊக்கம் அளிப்பதிலும் நாம் எமது ஆசியை தருகின்றோம்.

கருதினால், அஞ்சலோ றேசி (தலைவர்)
பேராயர், லூர்த்துசாமி (இணைச்செயலாளர்)
நற்செய்தி அறிவிப்புப் பேராயம்
உரோமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிக்கு வழிகாட்டும் திறனாய்வுகள்

பங்குத்தளங்களிலும் இன்னும் பல்வேறு நிலைகளிலும் இறை பணி புரியும் குருக்கள், கன்னியர்கள் பொதுநிலையினர் அனைவருக்கும் இன்றைய தேவையையும், இறையியல் சிந்தனையையும் கொடுக்கும் புதிய நூல் இது.

'நம் வாழ்வு' இந்தியா. 25.1.1981

குறைகள் பல மலிந்திருக்கின்றன. தமிழ்நடை, இலக்கணப் பிழை, எழுத்துப்பிழைகள் ஆகியன திருத்தப்படவேண்டும். கற்றறிந்த எழுத்தாளர்களது சிறந்த எடுத்துக்காட்டைப் பின்தொடர்ந்து 'இறையியல் கோலங்கள்' செல்லவேண்டும்.

அருட்திரு. J. A. கருணாகரர்
சாவகச்சேரி.

இறையியல் சிந்தனையைச் சொந்த மொழியில் வளர்ப்பதை திருஆட்சிப்பீடம் வரவேற்கின்றது. அதுவே எல்லோரினதும் விருப்பமாகும்.

பேரருட்திரு. நிக்கொலா ரெட்டுண்ணோ
பாப்பரசரின் திருத்தூதர்
கொழும்பு.

நான் அறியாத எத்தனையோ விபரங்களை எனக்கு விளக்கி நம் சமூகத்தில் கிறிஸ்துவின் போதனையை சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றது.

அ. பெலின் கூஞ்ஞ
தலைமன்னார்.

இறையியலிலும் இம்மண்ணிற்குரிய இறையியலின் தோற்றத்திலும் ஆர்வமுடையவனாகிய நான் உங்கள் ஊக்கத்தைக் கண்டும், இதழைப் பார்த்தும் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வுழைப்புக்கு எனது புகழ்ச்சியும், ஊக்கமுமேயன்றி வேறொன்றுமில்லை.

அருட்திரு. D. S. அமலோற்பவதாஸ்
பெங்களூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org